விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 30 புதன்கிழமை (16.09.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 271

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
உடு புடைவைகள்
CD,VCD க்கள் அனுப்ப
நாட வேண்டிய ஒரே இடம்
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(C-2167)

## மணற்காட்டில் தீ விபத்து!



(யாழ்ப்பாணம்)

யாழ் வடமராட்சி கிழக்கு மணற காட்டு பிரதேசத்துக்கு இடைப்பட்ட பகுதியில் 04ஆம் பக்கம் பார்க்க....

## இன்று வெளியிடப்படுகிறது

## இலங்கை மீதான ஐ.நா. அறிக்கை; சர்வதேசம் ஆவலுடன் எதிர்பார்ப்பு

(கொழும்பு)


இன்று வெளியாகவுள்ள இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விசாரணை அறிக்கையை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாக சர்வதேச நாடுகள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் ஜெனிவாவில் ஆரம்பமான ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 30-வது கூட்டத் தொடரில் உரையாற்றிய அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்தனர்.

ஐ.நா.மனித உரிமைகள்பேரவை விசாரணை அறிக்கையில் முன்மொழியப்பட்டிருக்கும் விடயங்களை நிறைவேற்று 04ஆம் பக்கம் பார்க்க....

## போர்க்குற்றங்கள் சுமத்தப்பட்டால்

# இராணுவத்தை காப்பாற்ற நாடாளுமன்றில் தீர்மானம்!



(கொழும்பு)

**ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை இராணுவத்தினர் மீது போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து குற்றம் சுமத்தப்படுமாயின், அவர்களைக் காப்பாற்ற நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவரப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில நேற்று தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் இறுதி கட்ட போரின்போது இடம் பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில், ஐ.நா மனித உரிமைகள் ஆணையர் அலுவலகத்தால் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கை இன்று புதன்கிழமை வெளியாகவுள்ளது.

அந்த அறிக்கையில் கண்டறியப்பட்டுள்ள விடயங்கள் மிகவும் பாரதூரமானவையாக இருக்கின்றன என்று ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெரிவித்திருந்தார். 24ஆம் பக்கம் பார்க்க....

## புரிந்துணர்வு ஒப்பந்தம்; நான்கு கைச்சாத்து

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய பயணத்தின் போது இலங்கை - இந்தியா இடையே நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரின் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கைசசாத்திடப்பட் 02ஆம் பக்கம் பார்க்க....

## வித்தியா கொலை; வழக்கு நேற்று

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் கூட்டு வன்புணரவின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட மாணவி வித்தியாவின் சடலத்தின் கண் பகுதியில் இருந்து பெறப்பட்ட விந்தணுவை மரபணு பரிசோதனைக்கு உட்படுத்துமாறு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த மாணவி படுகொலை செய்யப்பட்ட வழக்கு ஊர்காவற்துறை நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலை 23ஆம் பக்கம் பார்க்க....

## குற்றவாளிகள் தப்புவது நல்லிணக்கத்தை பாதிக்கும்

(கொழும்பு)

இலங்கையில் குற்றமிழைத்தவர்கள் தண்டனையிலிருந்து தப்பும் கலாசாரமானது, பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக்கம் ஏற்படுவதை கடுமையாக பாதிக்கும் என ஐ.நா. சிறப்புத் தூதர் பாப்லோ டி கிரீஃப் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு நாட்டின் நிலைமையை சரியாகக் கையாண்டால், அது 23ஆம் பக்கம் பார்க்க....

After A/L
HND in
COMPUTING & SYSTEMS DEVELOPMENT
Leading to BSc (Hons)
@
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
HOTLINE 0777 102 131
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
T: 021 2219910
(C-2112)

# தமிழர்கள் கௌரவமாக வாழ வழிவகை செய்ய வேண்டும்



## இலங்கைப் பிரதமரிடம் இந்தியப் பிரதமர் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் தமிழர்கள் கௌரவத்துடன் வாழ வழிவகை செய்ய வேண்டும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைப் பிரதமர ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

மூன்று நாள்கள் உத்தியோக பயணம் மேறகொண்டு இந்தியா சென்றுள்ள இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் நரேந்திர மோடியை அவரது ஹைதராபாத் இல்லத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை சந்தித்தபோது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

இந்த சந்திப்பில், தமிழக மீனவர்கள் பிரச்சினை, இலங்கை மீதான ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் நடவடிக்கைகள், இருதரப்பு ஒத்துழைப்பை 23ஆம் பக்கம் பார்க்க....

AFTER A/Levels
PEARSON edexcel advancing learning, changing lives
BTEC HND
Business Management
077 309 9 308
Offered in Partnership with LONDON metropolitan university
BA (Hons) in Business Administration
2015 September INTAKE
ONLY Rs.170,000
NEW OFFER
பதிவுகளை இம் மாதம் 21ம் திகதிக்கு முன்னர் நேரடியாக மேற்கொள்ளுங்கள்
OL's / AL's > HND > Degree > M.Sc | MBA
ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
BEng (Hons) in Software Engineering
BSc (Hons) in Computing
Offered in Partnership with LONDON metropolitan university
PEARSON edexcel advancing learning, changing lives
BTEC HND
Computing & Systems Development
(C-2171)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



அமரர்

## கந்தப்பு தங்கராசா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், இல.91, ஸ்கந்தபுரம் கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு தங்கராசா நேற்று (15.09.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, இரத்தினம், தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகநாயகம், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நாகேஸ்வரி, லோகேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி மற்றும் மோகனேஸ்வரி, சிவமங்களேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், தியாகராஜா (J.P, ஓய்வுபெற்ற விரிவுரையாளர் - யா/தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில்), தேவகாந்தன் (கனடா), திலகராஜ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், தவரூபன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - கரைச்சி பிரதேச சபை), பகீரதன் (உத்தியோகத்தர் - யாழ்.தினக்குரல்), கபிலன், வித்யானி, நளினி, சாம்பவி (கனடா), ஆதித்தன் (கனடா), ஆத்வி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், லோஜிதனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.09.2015) வியாழக்கிழமை திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். .

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.
தொ.பே : 0775073244,
0770488533

(1794)

# ஏல விற்பனை

யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் கீழ் வரும் பொருட்கள் 2015.09.28 (திங்கள்) ஏலத்தில் விற்கப்படும்.

டாசர் செற் (மூடியுடன்)
சிறிய பானை
பெரிய பானை
பேசின்
} அலுமினியம்
போட்டோ பிரதி இயந்திரம்

அதிபர்
யா/புனித ஜோண் பொஸ்கோ
வித்தியாலயம் றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

(சி-2172)

# ஏல விற்பனை

யாழ்/சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் பாவித்த உபகரணங்கள் 2015.09.25 வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் ஏலவிற்பனைக்கு விடப்படவுள்ளது.

அதிபர்
யா/சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயம்,
குருநகர், யாழ்ப்பாணம்.

(1791)

# சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பதிவு இல - J/1594 பதிவு திகதி - 11.03.1972

## பதவி வெற்றிடம்

| | |
|---|---|
| 01.பதவி | - அலுவலக வேலை உதவியாளர் (01) |
| குறியீட்டு இல. | - 317/16 (66/2006 இன்படி |
| சம்பள அளவுத் திட்டம் | - 9200-70x10-75x10-10650.00 |
| வயதெல்லை | - 18 - 45 வரை |
| பால் | - ஆண் |

**தகைமைகள் :-**

அ.கூட்டுறவு பணியாளர் 17-வது சம்பளத்திட்ட பதவி ஒன்றில் 01 வருடத்திற்கு குறையாத அனுபவமும் 05-ம் வகுப்புக் கல்விச் சான்றிதழ். அல்லது
ஆ.08ஆம் வகுப்புக் கல்விச் சான்றிதழ்.

**விண்ணப்ப முடிவுத் திகதி :- 29.09.2015**

**குறிப்பு :**

01. கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
02. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் சங்கங்களின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்
03. சங்க எல்லைப் பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்படி பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பத்தினைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்ட தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் அலுவலக வேலை உதவியாளர் (317/16) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு தலைவர், சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் டச்சு வீதி, சாவகச்சேரி எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி
திரு.சி.பரராசசிங்கம்
தலைவர்

ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்,
டச்சு வீதி,
சாவகச்சேரி.

(சி-2168)

# புரிந்து...

டன. இச்சந்திப்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, சர்வதேச முதலீட்டு அமைச்சர் மலிக் சமரவிக்ரமசிங்க உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கிய பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

சார்க் வலயத்தில் செய்மதி பரிமாற்றும் வேலைத்திட்டம், வவுனியா மாவட்ட வைத்தியசாலையை புனரமைக்கும் வேலைத்திட்டம், சிறிய அபிவிருத்திக்கு உதவி வழங்குதல், இந்தியாவில் 17 மாநிலங்களில் முன்னெடுக்கப்படும் அவசர சிகிச்சை சேவை அனுபவங்களை இலங்கையுடன் பகிர்ந்து கொள்ளல் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டே இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

# ஏல விற்பனை

யா/கோப்பாய் மகா வித்தியாலயம் 30.09.2015 காலை 10 மணி பழைய தளபாடங்கள் ஏலத்தில் விடப்படும்.

(1790) -அதிபர்


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திருமதி விஜயகலா மகேஸ்வரன்

திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர்கள் 09.09.2015 ஆம் திகதி சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக பதவியேற்றதை வரவேற்று பெரு மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

காரைநகர் மண்ணின் முதல் அரசியல் பெண்மணி என்ற பெருமைக்குரிய விஜயகலா அம்மையார் அவர்களின் அரசியல் பணி மேன்மேலும் சிறக்க எமது வாழ்த்துக்கள்

**ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள்,**
**ஆயிலி, காரைநகர்.**

(1797)


# தவறிவிட்டது

நல்லூர் கோவில் பின் வீதியில் நல்லதம்பி [illegible] நாயகம் என்பவரின் சாரதி அனுமதிப்பத்திரம், வாகன காப்புறுதிப் பத்திரம், வாகன வரிப் பத்திரம் என்பன தவறிவிட்டது. எனவே கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**0774463552**

# யா/கொக்குவில் இந்துக்கல்லூரி

## பகிரங்க ஏலவிற்பனை


எமது பாடசாலையில் வருடாந்த பொருட்கணக்கெடுப்பின் போது (2014) ஏல விற்பனைக்கு அனுமதிக்கப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 25.09.2015 (வெள்ளிக்கிழமை) காலை 10.30 மணிக்கு தென்பகுதி பழைய கட்டடத்தில் ஏலம் விடத் தீர்மானித்திருப்பதால் பொருட்களை பெறவிரும்புவோர் குறித்த நேரத்திற்கு சமுகமளித்து ஏலத்தில் பங்குகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

ஏலத்தில் விடப்படும் பொருட்கள்

| இல | பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | Dual Desk | 10 |
| 02. | Student Single Desk | 20 |
| 03. | A type student table wood | 20 |
| 04. | Metal Chairs | 185 |
| 05. | Computer Chairs | 3 |
| 06. | கரண்டி | 1 |
| 07. | பொருளியல், கணக்கீடு, நீதிக் கதைகள் | 27 |

பார்வையிடும் காலம் : 23.09.2015 (புதன்கிழமை) நேரம் : 10.30

(சி-2169) அதிபர் : திரு.வே.ஞானகாந்தன்



நாளை (17.09.2015) சுழிபுரம் - பறாளாய்

# ஈசுர விநாயகரின் பாற்காவடித் தினம்

பிற்பகல் 3 மணியளவில் சதுர்த்தி அபிஷேகம் விசேஷ பூஜை வழிபாடுகள் நடைபெறும்.

**சோழியூரான் - பிறைசூடிக்குரு**

(1506)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா.பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த

# இலங்கை அரசிற்கு ஆதரவளிப்போம்

## பிரிட்டன் அறிவிப்பு

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் அதன் ஆணையாளர் முன்வைக்கும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இலங்கை அரசுக்கு தமது அரசாங்கம் ஆதரவளிக்கும் என்று பிரித்தானியா அறிவித்துள்ளது.**

பிரித்தானியாவின் வெளியுறவு மற்றும் பொதுநலவாயத்துறை பிரதியமைச்சர் ஹகோ ஸ்வைரி இதனை நேற்று ஜெனிவாவில் நடைபெற்ற 30 ஆவது மனித உரிமைகள் பேரவை அமர்வின் போது தெரிவித்துள்ளார்.

இதேவேளை வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் ஆற்றிய உரையை உன்னிப்பாக அவதானித்ததாக குறிப்பிட்ட அவர், இலங்கைக்கு சமாதானத்துக்காக சர்வதேசம் ஊக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதேவேளை புதிய அரசாங்கம் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பிலான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளமையை அவர் பாராட்டினார்.

இந்த நிலையில் மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இலங்கை முன்வரவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

### விசேட அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குள் சகல கட்டுமானப் பணிகளும் சபையின் அனுமதியை பெற்று மேற்கொள்ளப்படவேண்டும்.

அவ்வாறு அனுமதிபெறாது கடடப்படும் கட்டடங்கள் யாவும் சபையினால் உடனடியாக சட்ட நடவடிக்கை மூலம் அகற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் மனவருத்தத்துடன் அறியத்தருவதோடு இது விடயத்தில் சபைக்கு தங்களின் முழுமையான ஒத்துழைப்பையும் வழங்கியுதவுமாறும் நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-9)

## குடிநீர் வசதி இல்லாமல் 2ஆயிரம் பாடசாலைகள்

### கல்வி அமைச்சர் கவலை

இலங்கை முழுவதும் சுமார் 2 ஆயிரம் பாடசாலைகள் சுத்தமான குடிநீர் இல்லாத நிலையில் உள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம், நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெரிவித்துள்ளார். அத்துடன், எந்தவிதமான மலசலகூட வசதிகள் இன்றி சுமார் 500 பாடசாலைகள் உள்ளதுடன், ஒரு மலசலகூடத்துடன் மாத்திரம் 2 ஆயிரம் பாடசாலைகள் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கணனி, ஆய்வுக்கூடம், நூலகம் இல்லாத நிலையில் சுமார் 4 ஆயிரம் பாடசாலைகள் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். தெரிவுசெய்யப்பட்ட சுமார் 150 பாடசாலைகளுக்கு விஞ்ஞான உபகரணங்களை பிரித்துக் கொடுக்கும் நிகழ்வு, குருநாகலில் இடம்பெற்ற போது அவர் இதனை தெரிவித்தார். (இ-7)

## இலங்கையில் திட்டமிடப்பட்ட இன அழிப்பு

இலங்கையில் திட்டமிட்ட இனவழிப்பு இடம்பெற்றுள்ளதாக சுவிஸ் நாடாளுமன்றத் தேர்தலில் சோசலிச ஜனநாயகக் கட்சியின் சார்பில் பேர்ண் மாநிலத்தில் போட்டியிடும் திருமதி தர்சிக்கா கிருஸ்ணானந்தம் வடிவேல் தெரிவித்தார்.

நேற்று ஐ.நா. பிரதான மண்டபத்தில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் அனைத்து விதமான உள்நாட்டு விசாரணையும் முழுமையாக தோல்வியடைந்துள்ள நிலையில் நீதிக்காக மீண்டும் காத்திருக்க வேண்டியுள்ளது.

இப்போதும்கூட தமிழ் மனித உரிமை ஆர்வலர்களும் அரசியல்வாதிகளும் இலங்கை இராணுவத்தால் துன்புறுத்தப்படுகின்றனர்.

ஆனால் இந்தச் சிக்கல்களை முழுமையாக தீர்க்கும் பணியில் ஐக்கிய நாடுகள் மன்றம் முழுமையாக தோல்வி கண்டுள்ளது. அரசியல் குறுக்கீடு இல்லாத சுதந்திரமான ஒரு சர்வதேச விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என அவர் மேலும் தனது உரையில் தெரிவித்தார். (இ-7)

## விசப் போத்தல்கள் தற்போதும் உள்ளன

### டிலான் பெரேரா தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி, பிரதமர் உட்பட குழுவினருக்காக தான் கொண்டு வந்த விசப் போத்தல்கள் இன்னமும் தன்னிடம் உள்ளதாக அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பதவிப் பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாதுளுவாவே சோபித தேரர் இதுவரையிலும் குறிப்பிடத்தக்க அறிக்கை ஒன்றினையும் வெளியிடாதமையினாலே தான் அந்த விசப் போத்தல்களை இன்னமும் வைத்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஊடகவியலாளர் சந்திப்பிற்கு விசப்போத்தல்கள் கொண்டு வந்த அவர் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சோபித தேரர் உட்பட குழுவினருக்காக கொண்டு வந்தேன் என குறிபபிட்டிருந்தார்.

எனினும் பின்னர் முன்னணியின் தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்திற்கு பிரவேசித்த டிலான், ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கீழ் அமைச்சு பதவி ஒன்றினையும் பெற்றுக்கொண்டார்.

நாட்டின் அவசியத்திற்காகவே தான் குறித்த அமைச்சு பதவியை ஏற்றுக்கொண்டாக அவர் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார். (இ-7)

### ஆதனவரி நிலுவையை செலுத்துதல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபைக்குஉட்பட்டபகுதியிலுள்ளஆதனங்களுக்குரிய ஆதனவரியை இதுவரை செலுத்தத் தவறியவர்கள் அவற்றை உடன் செலுத்தி சபையுடன் ஒத்துழைத்து சட்ட நடவடிக்கைகளை தவிர்த்துக்கொள்ளுமாறு நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். (இ-9)

## அரசாங்கத்தின் மீது நாமல் குற்றச்சாட்டு

மகிந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்த சிலரை பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவிற்கு அழைத்து விசாரணை மேற்கொள்வதற்கு புதிய அரசு கடுமையான முயற்சிகளை மேற்கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இடம்பெறாத தவறுகள் தொடர்பில் இவ்வாறு விசாரணை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நிதி மோசடி விசாரணை பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் நிறைவடைந்த பின்னர் ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

### சிறுமியின் புகைப்படங்களை வெளியிட வேண்டாம்

கொட்டதெனியாவ பகுதியில் சடலமாக மீட்கப்பட்ட ஐந்து வயது சிறுமியின் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை, ஊடகங்களிலும் சமூக வலைதளங்களிலும் வெளியிடுவதை தவிர்க்குமாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை (NCPA) அறிவித்துள்ளது.

கம்ஹா, கொட்டதெனியாவ, அகரங்கஹ பகுதியில கடந்த வெள்ளிக்கிழமை இரவு வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த வேளை காணாமற் போன 5 வயது சிறுமி ஞாயிற்றுக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டார். (இ-7)

## திருச்சியிலுள்ள சிறப்பு முகாமில் ஈழத் தமிழர் தற்கொலை முயற்சி

(கொழும்பு)

திருச்சி மத்திய சிறை வளாகத்திலுள்ள சிறப்பு முகாமில் இலங்கைத் தமிழர்கள் 15 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் மகேஷ்வரன், சிவனேஷ்வரன், கிருஷ்ணமூர்த்தி, சுரேஷ் குமார், மற்றொரு மகேஷ்வரன் ஆகிய 5 பேர் தங்களை விடுதலை செய்யக் கோரி கடந்த 11 ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கினர்.

அவர்களுடன் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாடு ஏற்பட்டதால் 5 பேரும் போராட்டத்தை கைவிட்டனர்.

இந்நிலையில், கன்னியாகுமரி மாவட்ட கியூ பிரிவு பொலிஸார் தொடர்ந்த வழக்கில் கைது செய்யப்பட்டு, இதே முகாமில் உள்ள யுகப்பரியன் (வயது-26) தன்னை விடுதலை செய்ய வலியுறுத்தி தற்கொலைக்கு முயன்றார்.

உடனடியாக அவர் திருச்சி அரசு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். கே.கே.நகர் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-7)

## உண்ணாவிரதம்

(கொழும்பு)

தேர்தலில் தோல்வியடைந்தவர்களுக்கு தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்புரிமை வழங்கப் பட்டமைக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டம் ஒனறு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இந்தப் போராட்டம் நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது.

சிங்கள சட்டத்தரணியான நாகாநந்த கொடிதுவக்கு என்பவர் இந்த போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

தேர்தலில் தோல்வி என்பது குறித்து வேட்பாளர்களை மக்கள் நிராகரித்துள்ளார்கள் என்பதையே குறித்து நிற்கின்றது.

இந்த நிலையில் அவர்களை மீண்டும் நாடாளுமனறத்துக்கு கொண்டு வருவது மக்கள் ஆணையை மதிக்காத செயல் என்று சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உள்ளிட்ட கட்சிகள் தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்களில் பலர் தேர்தலில் படுதோல்வி அடைந்துள்ள நிலையில் அவர்களுக்கு பாராளுமன்ற உறுப்புரிமை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

### திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை, தும்பளை ஸ்ரீவரத விநாயகர் கோவில் வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள ஸ்ரீவரத விநாயகர் கலை அரங்கத் திறப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஸ்ரீவரத விநாயகர் கலை பண்பாட்டுக்கழகத் தலைவர் சு.ஜனார்த்தனன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

## வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் பிரதமரின் இந்திய விஜயத்தில் இல்லை

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தில் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் எவரும் பங்கேற்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

பிரதமரின் உத்தியோகபூர்வ இந்திய விஜயத்தில் எந்தவொரு வெளிவிவகார அமைச்சின் அதிகாரியையும் இணைத்துக் கொள்வதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எந்தவொரு அதிகாரியையும் இணைத்துக்கொள்ள வேண்டாம் என பிரதமர், வெளிவிவகார அமைச்சருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சின் உயர் பதவிகள் பலவற்றில் மாற்றம் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் வெளிநாட்டு விஜயத்தின் பின்னர் உயர் பதவிகள் பலவற்றில் மாற்றங்கள் செய்யப்படும் என அரசாங்க பேச்சாளர் ஒருவர் கொழும்பு ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு இராஜதந்திரிகள் நியமனத்தின் போதும் பிரதமரின் பூரண கண்காணிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

பிரதமரின் அனுமதியின்றி இராஜதந்திரிகள் நியமிக்கப்படமாட்டார்கள்.

வெளிநாட்டு வர்த்தக மற்றும் வெளிநாட்டு தந்திரோபாய கொள்கை வகுப்புக்கள் [illegible] அமைச்சர் மலிக் சமரவிக்ரம மற்றும் இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்கவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என பிரதமர் பணித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக வெளிவிவகார அமைச்சினால் அடிக்கடி நடத்தும் வெளியுறவு கொள்கை குறித்து தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்புக்களையும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இரத்து செய்துள்ளார் என அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


### வீதியிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

(கொழும்பு)

தம்புள்ளை-கண்டலம் வீதியிலிருந்து 25- வயது மதிக்கத்தக்க ஆணொருவரின் சடலத்தை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வாகனமொன்றினால் இவர், மோதி தள்ளப்பட்டிருக்கலாம் என்று தெரியவருகின்றது. பலியான நபர், மாவனெல்ல பிரதேசத்தை சேர்ந்தவர் என்று இனங்காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அவரது தலை நசுங்குண்டு உயிரிழந்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெடரர் ஓய்வு?



டெனிஸ் உலகின் ஜாம்பவான் ரோஜர் பெடரர். 17 கிராண்ட்சிலாம் பட்டம் வென்று சரித்திரம் படைத்து இருக்கிறார்.

34 வயதான பெடரர் கிராண்ட்சிலாம் பட்டம் வென்று 3 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. கடைசியாக 2012-ம் ஆண்டு விம்பிள்டன் பட்டத்தை கைப்பற்றினார். அதன்பிறகு 3 தடவை இறுதிப்போட்டிக்கு நுழைந்தும் பட்டம் வெல்ல இயலவில்லை. கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் விம்பிள்டனிலும், சமீபத்தில் அமெரிக்க ஓபனிலும் ஜோகோவிச்சிடம் வீழ்ந்தார்.

இனிவரும் காலங்களில் பெடரர் கிராண்ட்சிலாம் பட்டம் பெறுவது மிகவும் கடினம். கடைசி 5 ஆண்டுகளில் அவரால் இரண்டே இரண்டு பட்டமே வெல்ல முடிந்தது. இதனால் ஓய்வு முடிவை அறிவிப்பது இதுவே அவருக்கு சரியான தருணம்.

அமெரிக்க ஓபன் இறுதிப்போட்டியில் தோற்ற அவர் ஓய்வு முடிவை தெரிவிப்பார் என்று கருதப்பட்டது. ஆனால் தனது ஆட்டம் மகிழ்ச்சி அளிப்பதாகவும் அடுத்த ஆண்டு மீண்டும் வருவேன் என்றும் தெரிவித்தார். அடுத்த ஆண்டில் கிராண்ட்சிலாம் போட்டிகளில் விளையாடும் போது அவர் 35 வயதை தொடுவார். இதனால் எந்த நேரத்திலும் ஓய்வு முடிவை வெளியிடுவது அவருக்கு சிறப்பானது.

2000 முதல் 2010-ம் ஆண்டுகளில் ரோஜர் பெடரரின் ஆதிக்கத்துக்கு யாராலும் ஈடுகொடுக்க இயலவில்லை. இந்த 10 ஆண்டு காலங்களில்தான் அவர் 15 கிராண்ட்சிலாம் பட்டங்களை வென்று முத்திரை பதித்தார்.

2003-ல் முதல் கிராண்ட்சிலாமான விம்பிள்டன் பட்டத்தை கைப்பற்றினார். 15-வது கிராண்ட்சிலாம் வென்ற போதுதான் அதிக பட்டங்களை வென்று இருந்த பீட்சாம்ராசை முந்தினார். அவரும், நடாலும் 14 கிராண்ட்சிலாம் பட்டங்களை பெற்றுள்ளனர். பெடரர் 17 பட்டங்களை கைப்பற்றி அதிக கிராண்ட்சிலாம் பட்டங்களை வென்ற டெனிஸ சகாப்தாமாக திகழ்கிறார்.

ஜோகோவிச், நடால், ஆன்டிமுர்ரே, வாவ்ரிங்கா போன்ற வீரர்களின் ஆட்டத்துக்கு முன்பு வயதாகிவிட்டதால் பெடரரால் ஈடுகொடுக்க இயலவில்லை. அவர் தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்தாலும் இனி கிராண்ட்சிலாம் பட்டம் வெல்வது அரிதான ஒன்றாகும். இதை கருத்தில் கொண்டு டெனிசுக்கு முழுக்கு போடுவார் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது. (க)

## அசத்தல் ஹேர்ஸ்டைலுடன் ரசிகர்களுடன் செல்பி

# கலக்கினார் ஹோலி





இந்திய கிரிக்கெட் டெஸ்ட் அணித்தலைவர் விராட் ஹோலி தனது ரசிகர்களுடன் செல்பி எடுத்து அசத்தியுள்ளார்.

தலைமுடியை விதவிதமாக மாற்றியமைக்கும் ஹோலியின் ஸ்பெஷலே அவரது முடியை ஒட்ட வெட்டிக்கொள்வதுதான்.

இந்நிலையில் சமீபத்தில் டெல்லி அருகே இருக்கும் குர்கானுக்கு சென்ற அவர், தனது ரசிகர்களை குஷிப்படுத்தும் விதமாக அவர்களுடன் இணைந்து செல்பி எடுத்துக்கொண்டார். (க)

## சானியா மிர்சா

# முதலிடம்



உலக டெனிஸ் வீரர்களின் தர வரிசைப பட்டியலை சர்வதேச டெனிஸ் சங்கம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

இதன்படி ஆண்கள் ஒற்றையர் தர வரிசையில் இந்திய வீரர் யுகி பாம்ப்ரி 20 இடங்கள் முன்னேறி தனது சிறந்த தர நிலையாக 125-வது இடத்தை பிடித்துள்ளார். சோம் தேவ் 12 இடங்கள் பின்தங்கி 164-வது இடத்தை பெற்றுள்ளார்.

சகெத் மைனெனி 195-வது இடத்திலும், ராம்குமார் ராமநாதன் 218-வது இடத்திலும் உள்ளனர். ஆண்கள் இரட்டையர் பிரிவில் இந்திய வீரர்கள் ரோகன் போபண்ணா 13-வது இடத்திலும், லியாண்டர் பெயஸ் 33-வது இடத்திலும் இருக்கின்றனர். பெண்கள் இரட்டையர் பிரிவில் இந்திய வீராங்கனை சானியா மிர்சா முதலிடத்திலும், மார்ட்டினா ஹிங்கிஸ் (சுவிட்சர்லாந்து) 2-வது இடத்திலும் நீடிக்கின்றனர். (க)

# இளம் வீரர்களிடமிருந்து நிறைய கற்றுக் கொள்ளலாம்

## சுரேஸ் ரெய்னா



இளம் வீரர்களுடன் சேர்ந்து விளையாடும் போது அவர்களிடமிருந்து சிலவற்றை கற்றுக்கொள்வதாக சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.

வங்கதேச ஏ அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டி இன்று பெங்களூருவில் தொடங்குகிறது.

இந்நிலையில் பெங்களூருவில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த சுரேஷ் ரெய்னா இது குறித்து கூறியதாவது, டிராவிட் கப்டனாக இருந்த போது என்னுடன் மற்றும் ரொபின் உத்தப்பா, இர்பான் பதான் உள்ளிட்ட வீரர்களிடம் நல்ல முறையில் பழகினார்.

அவர் எங்களுக்கு நிறைய தன்னம்பிக்கையூட்டினார். தற்போது அவருடன் மீண்டும் இணைவது மகிழ்ச்சியளிக்கிறது.

ஏ-தொடரா அல்லது மூத்த வீரர்கள் அணியா என்பதெல்லாம் மனதை பொறுத்தது. கேதர் ஜாதவ், மணிஷ் பாண்டே, குல்திப் யாதவ், உன்முக்த் சந்த் போன்ற இளம வீரர்களுடன் பயிற்சி ஆட்டங்களில் ஆடுவது மகிழ்ச்சியளிக்கிறது.

அவர்களிடமிருந்து சிலவற்றைக் கற்றுக் கொள்வேன். மேலும் இலங்கைக்கு எதிராக பெற்ற டெஸ்ட் தொடர் வெற்றியிலிருந்து தன்னம்பிக்கை பெறுவோம் என்று தெரிவித்துள்ளார். (க)

## இலங்கை மீதான...

வதற்கும் நம்பத்தன்மையான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கும் ஏதுவாக இலங்கை அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் பிரேரணையொன்றைக் கொண்டுவரவிருப்பதாக நேற்றுமுன்தினம் அமர்வில் உரையாற்றிய அமெரிக்காவின் சர்வதேச அமைப்புக்களுக்குப் பொறுப்பான பிரதி உதவித் தூதுவர் எரின்.எம். பார்க்கிளே தெரிவித்தார்.

அதேவேளை இலங்கைக்கு எதிரான அறிக்கையை எதிர்பார்த்திருப்பதுடன், மனித உரிமை சூழலை முன்னேற்றுவதற்கும் நல்லிணக்க செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கைக்குத் தொடர்ந்தும் உதவி வழங்கத் தயாராக இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியமும் அறிவித்துள்ளது.

மேலும், ஐக்கிய நாடுகளின மனித உரிமைகள் பேரவையில் அதன் ஆணையாளர் முன்வைக்கும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இலங்கை அரசுக்கு தமது அரசாங்கம் ஆதரவளிக்கும் என்று பிரித்தானியாவும் அறிவித்துள்ளது.

எனினும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பணிப்பாளர் ஜோன் பிஸர் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபையின் சுவிஸ் நாட்டின் தலைவர் ஆகியோர் இலங்கை மீது கடுமையான அதிருப்தியையும் எச்சரிக்கையையும் விடுத்துள்ளனர்.

நேற்று ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் உரையாற்றும் போதே அவர்கள் இவ்வாறு அதிருப்தியை வெளியிட்டனர்.

இதேவேளை மனித உரிமைகள் ஆணையர் செயித் அல் குசைன் ஜெனிவாவில் இன்று காலை இலங்கை தொடர்பான அறிக்கை பற்றிய செய்தியாளர் சந்திப்பை நடத்தவுள்ளார்.

2014-ம் ஆண்டு மார்ச் மாத அமர்வின் போது, நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படியே, இலங்கை மீதான விசாரணை நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழு விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காலப்பகுதிக்குள், மோதலில் ஈடுபட்ட இரண்டு தரப்பினராலும் புரியப்பட்டதாகக் கூறப்படும் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றச்செயல்கள் தொடர்பில் விரிவான விசாரணை நடத்துவதற்காகவே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்த அறிக்கை கடந்த மார்ச் மாத அமர்விலேயே வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், இம்முறை செப்டெம்பர் அமர்விலேயே வெளியிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## இராணுவத்தை...

மற்றும் இராணுவத்தினரைக் காப்பதற்கு இப்படியானத் தீர்மானமொன்றும், பின்னர் 1987ஆம் ஆண்டு கலவரங்கள் ஏற்பட்ட போதும் இராணுவத்தினரைக் காப்பாற்ற ஐக்கியத் தேசிய கட்சியின் அரசாங்கத்தால் மேற்படி தீர்மானமும் நிறை வேற்றப்பட்டன என்றும் உதய கம்மன்பில சுட்டிக்காட்டியுள்ளார். (செ-12)

## மணற்காட்டில்...

நேற்று பல ஏக்கர் சவுக்கு மரங்கள் எரிந்து நாசமாகியுள்ளது.

சவுக்கம் தோட்டத்தை பார்க்க வந்த சுற்றுலாப் பயணிகள் சமைத்த நெருப்புத் தணலின் காரணமாக தீ பரவியுள்ளதாக கூறப்படுகிறது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகள் இன்றி ஆயுர்வேத வைத்தியசாலை



வலி.கிழக்குபிரதேச சபைக்குட்பட்ட உரும்பிராய் சித்த ஆயுர்வேத இலவச வைத்திய சாலை அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருகின்றது.

வலி.கிழக்கு பிரதேச சபையின் கீழ் நீர்வேலி, அச்சுவேலி ஆகிய பிரதேசங்களில் சித்த ஆயுர்வேத வைத்தியசாலையும் உரும்பிராய், புத்தூர் ஆகிய பிரதேசங்களில் சித்த ஆயுர்வேத கிளை வைத்தியசாலையும் இயங்கி வருகின்றன.

இதில் உரும்பிராய் சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் முழு நேரமும் சனிக்கிழமைகளில் அரைநேரமுமாக இயங்கி வருகின்றது. மாதாந்தம் 500க்கு மேற்பட்டவர்கள் இங்கு சிகிச்சை பெறுவதற்கு வருகின்றனர்.

ஆனால் வைத்தியசாலை அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமல் கடும் சிரமத்தின் மத்தியில் இயங்கி வருகின்றது.

2014ஆம் ஆண்டில் இருந்து இந்த வைத்தியசாலையில் பணியாற்றி வந்த ஊழியர் தற்போது நிறுத்தப்பட்டுள்ளார். எனவே வைத்திய சாலையின் செயற்பாடுகளை உரிய முறையில் செயற்படுத்த முடியாதுள்ளது.

பொதுமக்களின் நன்மையை கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-9)

# கடற்றொழில் உபகரணங்களை வழங்கக்கோரி ஆர்ப்பாட்டம்

**(யாழ்ப்பாணம்)** — **கடற்றொழில் உபகரணங்களை வழங்கக் கோரி நெடுந்தீவிலுள்ள 5 மீனவ சங்கங்கள் இணைந்து யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தில் நேற்றைய தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டிருந்தன.**

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சினால் யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தின் ஊடாக கடற்றொழிலாளர்களுக்கு மானிய அடிப்படையில் கடந்த காலங்களில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வந்தது. பின்னர் அவை நிறுத்தப்பட்டு மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டு வந்தன.

யாழ்.மாவட்டத்தில் 2 ஆயிரத்து 611 கடற்றொழில் குடும்பங்கள் இருக்கின்ற போதிலும் ஆயிரத்து 500 குடும்பங்களுக்கே இந்த மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டுள்ளன.



அந்த வகையில் நெடுந்தீவில் 666 கடற்றொழிலாளர் குடும்பங்கள் இருக்கின்றார்கள். அவர்களில் 200 பேரிடம் தான் படகுகள் காணப்படுகின்றன. இந்த 200 பேரில் 17 பேருக்கு தான் மானிய அடிப்படையிலான வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

மிகுதியாக உள்ள 183 குடும்பங்களுக்கு இவை வழங்கப்படவில்லை.

இச் சம்பவங்களைச் சேர்ந்தவர்கள் 4, 5 மாதங்கள் தொடர்ச்சியாக தமக்குரிய வலைகளை வழங்குமாறு கேட்ட போதிலும் அதற்குரிய நடவடிக்கை இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குரிய மானிய அடிப்படையிலான வலைகள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்படவில்லை என்றால் நாம் தொடர் உண்ணாவிரதத்தை மேற்கொள்ளவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# அடிப்படைத் தேவைகள் படிப்படியாக நிவர்த்தி செய்யப்படும்-சித்தார்த்தன்



யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேசங்கள் ஒவ்வொன்றினதும் அடிப்படை தேவைகள் கண்டறியப்பட்டு படிப்படியாக நிவர்த்தி செய்யப்படும் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

ஏழாலை கோட்டைக்காட்டுப் பகுதியில் அமைந்துள்ள சைவ வாலிபர் சங்க சனசமூகநிலையில் அமைந்துள்ள குழந்தைவேல் கலையரங்கத்தில் பிரதேசமக்களுடனான சந்திப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இச் சந்திப்பின் போது திருத்தப்படாத நிலையிலுள்ள வீதிகள் மற்றும் பாதுகாப்பற்ற றயில் கடவைப் பிரதேசங்கள் தொடர்பாக அப்பகுதி மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுந்தையா செல்வரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (இ-9)

## சிறப்பு பூஜை

டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமிஅன்னையாரின்அருள்ஒளிதர்சன மாலையும் புரட்டாதி மாத சிறப்பு பூஜையும் நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஏற்கனவே டென்மார்க்கிலிருந்து எடுத்துவரப்பட்ட அம்பாளின் திருவடிக்கு பால் அபிஷேக பூஜை சிறப்பாக இடம்பெறும். (இ-3)

# 40 வருடங்களின் பின் வீதி புனரமைப்புப் பணி



வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட கோப்பாய் மத்தியில் அமைந்துள்ள வள்ளியம்மன் வீதி 40 வருடங்களின் பின்னர் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய்,கைதடிவீதியில்அமைந்துள்ள மினக்கட்டான் வேம்படியில் ஆரம்பித்து கோப்பாய் கல்வியியற் கல்லூரி வரை இந்த வீதி புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

வலி.கிழக்கு பிரதேச சபையால் 20இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்த வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. (இ-9)




## மண்டபத் திறப்பு விழா

யாழ்.கந்தர்மடம் அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய மடப்பள்ளி மண்டபத் திறப்பு விழா இன்று புதன் கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆலய பரிபாலனசபைத் தலைவர் து. யோகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் ரவீந்திரதாசன் மண்டபத்தை திறந்து வைப்பார்.

அத்துடன் ஆலயத்தின் ஸ்தாபகர் மு.செல்லத்துரையின் திருவுருவப்படத்தை ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரைநீக்கம் செய்து வைப்பார்.(இ-3)

## ஆன்மீகச் சொற்பொழிவு

வயாவிளான் குட்டியப்புலம் ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலய கும்பாபிஷேகத்தை ஒட்டி இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு ஆன்மீகச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. சொல்வேந்தர் பொன் சுகந்தன் "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.(இ-3)

# கசிப்பு விற்பனை செய்த குடும்பப் பெண் கைது

கரவெட்டி துன்னாலைப் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குடும்பப் பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் பிரஸ்தாப பெண்ணின் வீட்டிற்குச் சென்ற பொலிஸார் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டிருந்த குடும்பப் பெண்ணை கைது செய்தனர்.

பிரஸ்தாப பெண்ணிடமிருந்து ஒன்றரை லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற பொலிஸார் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிரஸ்தாப குடும்பப் பெண்ணை நீதிமன்றில் ஆஜர் செய்யவுள்ளனர். (இ-3-60)



யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி நோக்கிச் சென்று கொண்டிருந்த கார் ஒன்று நாவற்குழி சந்திக்கு அருகில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதிக்கு அருகில் உள்ள மின்கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது. கடும் சேதத்துக்குள்ளான இந்தக் காரில் பயணம் செய்த இருவர் காயங்களின்றி உயிர்தப்பியுள்ளனர். கார் விபத்துக்குள்ளான இடத்திலிருந்து ஆறு அடி தூரத்தில் பாரிய கிளை ஒன்று காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்: ராகுலன்)


## கல்விச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டன

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் 3 ஆம், 4 ஆம் ஆண்டு மாணவர்களின் கல்வி செயற்பாடுகள் தற்காலிகமாக உடனடியாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. அத்துடன் பல்கலைக்கழக விடுதியில் தங்கியுள்ள கலைப்பீட 3 ஆம், 4 ஆம் ஆண்டு மாணவர்கள் விடுதிகளிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

கல்விச் செயற்பாடுகள் மீளத் தொடரும் திகதி பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புற்றுநோய் மருத்துவமனைக்கு ஜனாதிபதி நேற்று திடீர் விஜயம்



மஹரகமயிலுள்ள புற்றுநோய் மருத்துவமனைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னைய மகிந்த அரசில் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்த காலத்தில் மஹரகம புற்றுநோய் மருத்துமனையை அபிவிருத்தி செய்வதில் கூடிய கரிசனையுடன் செயற்பட்டிருந்தார்.

எனினும் அன்றைய மகிந்த அரசாங்கம் மைத்திரிபாலவின் மீது கொண்ட காழ்ப்புணர்வு காரணமாக அவரது முயற்சிகள் அனைத்துக்கும் தடை போட்டுக் கொண்டிருந்தது. அதன் ஒரு கட்டமாக மைத்திரியின் ஆதரவாளர் என்பதற்காகவே மஹரகம புற்று நோய் மருத்துவமனையின் உதவிப் பணிபாளர் மருத்துவர் வசந்த திசாநாயக்கவுக்கு கிடைக்க வேண்டிய பதவி உயர்வைக் கூட மகிந்த அரசாங்கம் மறுத்திருந்தது.

ஜனாதிபதியான பின்னர் ஒரு தடவை மைத்திரிபால சிறிசேன மஹரகம புற்றுநோய் மருத்துவமனைக்கு ஒரு குறுகிய விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று மீண்டும் புற்றுநோய் மருத்துவமனைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால அங்குள்ள நோயாளர்களுடன் நீண்ட நேரம் உரையாடினார்.

மேலும் நோயாளிகளின் உணவு வேளையின் போது தனது கையால் உணவு பரிமாறிய ஜனாதிபதியின் எளிமையான பண்பு அங்குள்ள நோயாளர்களை பெரிதும் கவர்ந்தது. (இ-7)

## பாரிசவாத நோயைத் தவிர்த்தல்; தேசிய அளவிலான சித்திரப்போட்டி

உலக பாரிசவாத தினமாக ஐப்பசி மாதம் 29 ஆம் திகதி பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டு தேசிய பாரிசவாதச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் தேசிய மட்டத்திலான சித்திரப் போட்டி ஒன்றை நடத்துமாறு சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் சுகாதாரக் கல்விப் பணியகத்திற்கு அறிவுறுத்தியுள்ளார்.

இப்போட்டியில் அனைத்து பாடசாலைகளையும் சார்ந்த 9 ஆம் ஆண்டு மாணவர்கள் பங்குபற்ற முடியும். மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டத்திலான போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள். இதில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்ட ஓவியங்க ளைத் தெரிவு செய்து 2015 ஐப்பசி 12 ஆம் திகதிக்கு முன்பு சுகாதாரக் கல்விப் பணியகத்திற்கு அனுப்பி வைக்கவும்.

பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளரின் அலுவலகத்தைச் சார்ந்த சுகாதாரக் கல்வி அதிகாரி இவ்விடயத்திற்குப் பொறுப்பாக இருப்பார்.

மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு தேசிய பாரிசவாதச் சங்கத்தின் அனுசரணையுடன் பரிசில்கள் வழங்கப்படும். மாவட்ட மற்றும் தேசிய மட்ட வெற்றியாளர்களுக்கு சுகாதார அமைச்சு சான்றிதழ்களை வழங்கவுள்ளது.

மேலும் போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் பேரட்டியில் பங்குபற்றியமைக்கான கடிதங்கள் மாவட்ட மட்டத்தில் வழங்க ஒழுங்கு படுத்தப்பட வேண்டும்.

"போட்டியின் விதிமுறைகளாக ஆரோக்கிய வாழ்க்கை முறையின் மூலம் பாரிசவாதத்தை தடுப்போம்" எனும் தலைப்பில் A3 அளவுள்ள பேப்பரின் முழுப்பக்கமும் வரையப்பட வேண்டும்.

வர்ணங்கள் மாணவர்களின் விருப்பத்துக்கு அமை வாக இருக்க முடியும். அத்துடன் ஓவியத்தின் பின்புறம் மாவட்டத்தின் பெயர், மாணவரின் பெயர், வகுப்பு, பாடசாலை அதிபரின் கையொப்பம், உத்தியோகபூர்வ முத்திரை என் பன அமைந்திருக்க வேண்டும் என சுகாதார கல்வி பணியகத்தின் பணிப் பாளர் அமல் ஹர்ச டி சில்வா அறி வித்துள்ளார். (இ-9)

## சிறார்களின் ஆக்கத்திறனை வெளிப்படுத்தும் கட்டுரை, கவிதை, சிறுகதைப் போட்டிகள்

தேசிய நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் சிறுவர் கழகங்களின் சிறுவர்களின் பங்களிப்புடன் திறமைகளை வெளிக்கொண்டு வரும் முகமாக பிரதேச மாவட்ட, தேசிய மட்டங்களில் போட்டிகள் பின்வரும் வயதுப் பிரிவுகளில் நடைபெறவுள்ளன.

10-14 வயதிற்கு இடைப்பட்டவர்களுக்கான பிரிவு- கவிதை, கட்டுரை, சிறுகதை,15-18 வயதிற்கு இடைப்பட்டவர்களுக்கான பிரிவு- கவிதை, கட்டுரை, சிறுகதை, 19-21 வயதுப் பிரிவினருக்கு-கவிதை, சிறுகதை

**தலைப்பு:** சிறுவர்களின் உரிமைகளை உறுதி செய்யும் வகையில் அவர்கள் தொடர்பில் உணர்வு பூர்வமான சாதகமான சமூகத்தினை உருவாக்கும் நோக்கத்தினை வெளிப்படுத்துகின்றவாறான சகல போட்டிகளுக்குமான பொருத்தமானதாக தாம் விரும்பியவாறு தலைப்புக்களை தயார் செய்து கொள்ள முடியும்.

போட்டியில் பங்குபற்றும் சிறுவர் கழகங்களை சேர்ந்த சிறுவர்கள் தமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களை தொடர்புகொண்டு ஆலோசனைகளைப் பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## பண்ணிசைப் பயிற்சி

அகில இலங்கைத் திருமுறை மன்றம் வட இலங்கை சங்கீத சபையினதும்அகில இலங்கை திருமுறை மன்றத்தினதும் பாடவிதானத்திற்கு அமைவாக ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் பி.ப.3மணியிலிருந்து பி.ப.4.15 மணி வரையும் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தில் பி.ப.4.30மணி முதல் 6.1 மணி வரையும் இலவச தேவார பண்ணிசைப்பயிற்சி வகுப்பை நடத்தி வருகின்றது.

துறைசை ஆதீனத் திருமுறைத் தோன்றல் கலாபூஷணம் கே.எஸ். ஆர்.திருஞானசம்பந்த ஓதுவார் மூர்த்திகளால் இப்பயிற்சி வகுப்பு நடைபெறுகின்றது. வகுப்பில் ஆண், பெண் இருபா லாரும் மற்றும் மாணவர்களும் பங்கு பற்றி பயன்பெறலாமென மன்ற அமைப்பாளர்சி.கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார்.(இ-3)



கலைப்பணியில் 50 ஆண்டுகளை திருமறைக்கலாமன்றம் நிறைவுசெய்யும் இவ்வாண்டில் விசேட கலைநிகழ்வாக ஒவ்வொரு மாதமும் பொற்தூறல் நிகழ்வு இடம்பெற்று வருகிறது. அவ்வகையில் புரட்டாதித் திங்கள் பொற்தூறல் நிகழ்வு கடந்த 5 ஆம் திகதி மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

## ராசி பலன்

16.09.2015
(ஆவணி 30,புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
திருதியை மாலை 6.15 மணிவரை
சித்திரை முன்னிரவு 9.54 மணிவரை
இராகுகாலம் 12.03-1.33 மணிவரை
சுபநேரம் 4.33-6.03 மணிவரை
திருப்பதி வெங்கடாஜலபதி கொடி
சுபமுகூர்த்த தினம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூரட்டாதி, உத்திரட்டாதி<br>காலை 8.48ற்கு<br>துலா-சந் | | செவ்<br>சுக |
| | | | சூரி.புத.<br>குரு |
| | சனி | | ராகு<br>சந |

**மீனம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், திருடர்களின் பயமுண்டு, வேலைச் சுமை கூடும், போசன சுகக் குறைவான நாள்.

**மேடம்:** மறக்க முடியாத இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், செய்தொழில் மேன்மையுண்டு.

**இடபம்:** தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் இருந்த குழப்பங்கள் அகலும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள்.

**கும்பம்:** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** செலவுக்கேற்ப பணம் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**சிம்மம்:** உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு:** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் காணும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**விருச்சிகம்:** பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, தேகநலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், திட்டமிடப்படாத காரியமொன்று நடைபெறலாம்.

**கன்னி:** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு விற்பனைக்கு

நாவற்குழியில் $1\frac{1}{2}$ பரப்பு காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு: 077 114 0424

(1754)

# பிரிகேடியரை எதிர்த்து விமான நிலையம்

# முற்றுகை

(கொழும்பு)

**ரதுபஸ்வெல சம்பவத்தில் பொது மக்களுக்கு எதிராக துப்பாக்கிப் பிரயோகத்திற்கு உத்தரவிட்ட பிரிகேடியர் அனுர தேசப் பிரியவிற்கு எதிர்ப்புத் தெரிவித்து பொது மக்கள் விமான நிலையத்தை முற்றுகையிட்டுள்ளனர்.**

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின் போது மகிந்த குடும்பத்தின் நண்பர்களில் ஒருவரான தம்மிக்க பெரேராவின் தொழிற்சாலை ஒன்றினால் வெளியிடப்பட்ட கழிவுகள் காரணமாக கொழும்பு அருகேயுள்ள வெலிவேரிய. ரதுபஸ்வெல பிரதேச நிலத்தடி நீர் மாசுபட்டிருந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து. கிராம மக்கள் தங்களுக்கு சுத்தமான குடிநீர் கேட்டுப் போராட்டம் நடத்தினார்கள்.

தம்மிக்க பெரேராவின் தொழிற்சாலையை மூடக்கோரி சிறிதம்ம தேரர் எனும பிக்கு சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

இந்நிலையில் தனது நண்பரின் தொழிற்சாலையை பாதுகாக்க மகிந்தவின் உத்தரவின் பேரில் ராணுவம் ரதுபஸ்வெல பகுதிக்கு அனுப்பப்பட்டது. மேலும் பொதுமக்கள் மேற்கொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூடு காரணமாக பாடசாலை மாணவர் உள்ளிட்ட மூவர் உயிரிழந்தார்கள். மேலும் நாற்பது பேர் கடுமையான காயங்களுக்கு உள்ளானார்கள்.



இந்த துப்பாக்கிப் பிரயோகத்திற்கு அங்கிருந்த இராணுவ கட்டளை அதிகாரி பிரிகேடியர் அநுர தேசப்பிரிய குணவர்த்தனவே உத்தரவிட்டிருந்தார். அவர் மகிந்த ஆட்சிக்காக செய்த சேவைகளை கௌரவிக்கும் வகையில பின்னர் துருக்கி தூதரகத்திற்கு நியமிக்கப்பட்டி ருந்தார்.

இந்நிலையில் தேசிய அரசாங்கத்தின் முடிவுக்கமைய பிரிகேடியர் அநுர தேசப்பிரிய குணவர்த்தனவின் சேவை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதன் காரணமாக பிரிகேடியர் குணவர்த்தன நேற்று விமானம் மூலமாக நாடு திரும்பியிருந்தார். அவர் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும்.. அவருக்கு எதிரான விசாரணையை முன்னெடுக்கக் கோரியும் சிறிதம்ம தேரர் உள்ளிட்ட பொது மக்கள் விமான நிலையத்தில் திரண்டிருந்தனர். (இ-7)

வாழ்க்கையில் வெறுப்பா ?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்.

காலை 9.00 – பி.ப 1.00

மதச்சார்பற்றது

கைகொடுக்கும் நண்பர்கள்

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

021 222 8117, 0779008776

(C-478)

லிகிதர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் (Accounts Clerk)

தகைமைகள்:

- க.பொ.த உயர்தரத்தில் கணக்கியல் Accounts பாடம் சித்தியடைந்தவர்.
- தமிழ், ஆங்கிலம் கம்பியூட்டர் ரைப்பிங் (Computer Typing) தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.
- மும்மொழி அறிவு விரும்பத்தக்கது.

வயதெல்லை: 25-55வரை விண்ணப்பிக்கலாம்.

வேதனம்: நேரில் பேசிக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 25-09-2015

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.


தொடர்பு:

தலைவர்,
"யாழ் தூரசேவை பேருந்து உரிமையாளர் உத்தரவாதம்"
வரையறுக்கப்பட்ட நிறுவனம்,
இல.409, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 221 7015, 077 428 0446

(1779)

# அடுத்துவரும் 5 வருடத்தில் லயன் வாழ்க்கைக்கு முடிவு

## புதிய கிராமங்களை உருவாக்குவோம் என அமைச்சர் திகாம்பரம் வாக்குறுதி



அடுத்த ஐந்து வருட காலத்தில் மிகவும் துன்பகரமான தோட்டப்புற லயம் வாழ்க்கைக்கு முடிவு கட்டிவிட்டு அனைத்து வசதிகளுடனும் கூடிய மலையகத்தில் புதிய கிராமங்களை உருவாக்கவுள்ளோம் என மலையக புதிய கிராமம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பி. திகாம்பரம் தெரிவித்தார். முன்னைய ஆட்சியின் போது மலையகத்திற்கு எந்தவொரு அபிவிருத்தியையும் கொண்டு வராத அராஜகப் போக்கிலான அரசியலை நாம் மீண்டும் தொடரப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மலையக புதிய கிராமம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராக நேற்று கடமைகளை பொறுப்பேற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில், நடந்து முடிந்த பொது தேர்தலின் போது நுவரெலியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்தும் அதிகமான வாக்குகளை தந்து என்னை வெற்றி பெறச்செய்துள்ளனர். தேர்தல் பிரசார மேடைகளில் எனக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதுடன் திகாம்பரம் என்பவர் 100 நாட்களுக்கு மாத்திரமே அமைச்சர் என்று பலவாறு குறிப்பிட்டனர். தேர்தலில் திகாம்பரம் தோல்வி அடைவார் என்றும் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் மலையக அரசியல் தலைமைகளுக்கு வீடமைப்பு மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு என்ற நல்ல அமைச்சுக்கள் கிடைத்த போதிலும் மலையக மக்களின் விடிவுக்காக எதனையும் செய்யவில்லை. வெறுமனவே மாடிவீடுகளுக்கு மாத்திரமே வழிவகுத்தனர். மலையகத்திற்கு மாடி வீடு பொருந்தாது.

அது மாத்திரமின்றி முன்னைய அமைச்சர்களினால் மக்களுடைய பணம் பெருமளவு மோசடி செய்யப்பட்டது. இந்நிலையில் 100 நாள் அரசாங்கத்தின் 400 தனிவீடுகளை நிர்மாணித்தோம். அடுத்த ஐந்து வருடத்தில் குறித்த வீடுகளை நாம் மக்களுக்கு பெற்றுக் கொடுக்க திட்டமிட்டுள்ளோம்.

அதேபோன்று அடுத்த ஐந்து வருட காலப்பகுதியில் மலையக மக்கள் முகங்கொடுக்கும் அடிப்படை பிரச்சினைகளை தீர்த்து வளமான மலையகத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். எனக்கு இந்த அமைச்சை வழங்குவதற்கு முன்பு பிரதமர் இனிமேல் தோட்டம் என்ற பெயர் பாவனைக்குட்படுத்தக் கூடாது. மலையக கிராமம் என்றே பிரயோகிக்க வேண்டும் என்று கூறினார். இதன் காரணமாகவே இவ்வாறானதொரு அமைச்சு கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே அடுத்த ஐந்து வருட காலத்தில் மிகவும் துன்பகரமான தோட்டப்புற லய வாழ்க்கைக்கு முடிவு கட்டிவிட்டு அனைத்து வசதிகளுடனும் கூடிய மலையக கிராமமொன்றை உருவாக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா:12செவ் 4 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/4939 | |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 40<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:மருத்துவதாதி/ அரசதொழில்<br>தொ.இ: B/4940 | |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 29<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: QS/சொந்த தொழில்<br>தொ.இ: B/4941 | |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 57செவ் 8 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BSC, MSC, QS/ லண்டன் PR<br>தொ.இ: B/4946 | |

இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 34சூரிசெவ் 11 ல்<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில்: HNDE/கிராம உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:பெண் விவாகரத்தானவர் விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4980 | |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 21சூரிசெவ் 12 ல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: G/4981 | |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 30செவ் 12 ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/4982 | |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 47செவ் 1 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/தனியார் தொழில்<br>தொ.இ: G/4989 | |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினையை தீர்ப்பதற்கான இறுதிசந்தர்ப்பம் ஐ.நா.அறிக்கை வெளிவருவதில்தான் இருக்கிறது

## ஆனந்தன் எம்.பி.தெரிவிப்பு

(குருமன்காடு)

**மனித உரிமைகள் பேரவையினால் இலங்கைக்கு எதிரான அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், நாங்கள் எல்லோரும் எங்களுக்கான இந்த உண்மையை கண்டறிவதற்கான ஒரு சர்வதேச பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும் என்று தான் கோருகின்றோம். ஏனென்றால் எங்களுக்கு இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கான இறுதி சர்ந்தப்பம் இந்த அறிக்கை வெளிவருவதில் இருந்து தான் இருக்கிறது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**

வவுனியா, அம்மா பகவான் குடியிருப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நீங்கள் குடியிருக்கும் காணி தொடர்பான பிரச்சினை எங்களுக்கும் தெரியும். இது தொடர்பாக பல சர்ச்சைகள் வந்து கொண்டிருக்கின்றது. உங்களுக்கு வேறு காணிகள் கொடுத்து வெளியேற்றவுள்ளதாகவும் அதிகாரிகள் மட்டத்தில் பேசப்படுகிறது. கூமாங்குளம் பகுதியிலும் இப் பிரச்சினை இருக்கிறது. குளத்தின் அருகில் உள்ள காணிகளை குளக்காணியாக கையகப்படுத்த கமநல சேவைகள் திணைக்களம் எடுத்த இந்த நடவடிக்கையை அரச அதிபருடன் தொடர்பு கொண்டு பேசியதன் விளைவாக தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. பல மக்களிடம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா காலத்தில் வழங்கப்பட்ட உறுதிகள் கூட இருக்கிறது. தற்போது அரச அதிபர் காணி உத்தியோகத்தர்களிடமும் இது தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளார்.

அடுத்து வருகின்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கதைத்து உங்களுக்கு ஒரு தீர்வை பெற்றுத் தர வேண்டிய பெரிய பொறுப்பும் கடமையும் எங்களுக்கு இருக்கிறது. அதை நாங்கள் செய்வோம்.

ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. தமிழ் மக்கள் மத்தியில் மிகுந்த நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் இருக்கிறது. எங்களுடைய பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு கிடைக்கும். போரால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசங்களுக்கு அபிவிருத்தி கிடைக்கும். இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இப்பொழுது இருக்கின்ற புதிய ஜனாதிபதி, பிரதமர் இந்த நாட்டிலே நல்லாட்சியை ஏற்படுத்துவோம். பாராளுமன்றத் தேர்தலுக்கு பின்னர் தமிழ் மக்களுக்கான ஒரு அரசியல் தீர்வை காண்போம் என்றார்கள். இந்த பாராளுமன்ற தேர்தலும் முடிவடைந்து விட்டது. தற்போது அவர்கள் எங்களுக்கு தந்த வாக்குறுதியை எவ்வாறு நிறைவேற்றப் போகிறார்கள் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

அதற்கு அப்பால் இன்றைக்கு முக்கியமாக பேசப்பட்டுக் கொண்டிருக்கின்ற விடயம். இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள், படுகொலைகள் தொடர்பான நீதியான சர்வதேச விசாரணை தேவையென உலகில் உள்ள மனித உரிமை அமைப்புக்கள், தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஏனையோர் விசேடமாக தமிழ் மக்கள் எனப் பலரும் கோரி வருகின்றனர். இந்த யுத்தம் நடைபெற்றது ஏன்?, இதற்கு காரணம் என்ன?, எதிர்காலத்தில் இந்த யுத்தம் நடைபெறாமல் இருக்க செய்ய வேண்டியது என்ன என்பன பற்றி எதிர்வரும் 30 ஆம் திகதி ஐ.நா.சபையினுடைய மனித உரிமைகள் பேரவையினால் இலங்கைக்கு எதிரான அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், நாங்கள் எல்லோரும் எங்களுக்கான இந்த உண்மையை கண்டறிவதற்கான ஒரு சர்வதேச பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும் என்று தான் கோருகின்றோம்.

அதற்காக இந்த அரசாங்கத்தோடு பல விடயங்களை பேச வேண்டியிருக்கிறது. எங்களைப் பொறுத்தவரை அமெரிக்கா, இந்தியா ஏனைய சர்வதேச நாடுகளுக்கு இலங்கையில் ஒரு ஆட்சி மாற்றம் தேவையாக இருந்தாலும் எங்களைப் பொறுத்தவரை ஆட்சி மாற்றத்திற்கு அப்பால் எங்களுக்கு ஒரு நிரந்தரமான சமாதானம், தீர்வு ஏற்பட வேண்டும். ஆகவே நல்லாட்சி ஏற்படுத்துவதாக சொல்கின்ற ஜனாதிபதி, பிரதமர் இந்த நாட்டிலே ஏற்பட்ட அழிவுகள் இனி மேலும் இந்த நாட்டிலே ஏற்படாமல் இருப்பதற்கு உண்மையை கண்டறிவதற்கும், நீதியான சர்வதேச விசாரணை நடத்துவதற்கும் மகிந்தவை பாதுகாக்கின்றோம் என்று கூறி அநீதிகளை மூடி மறைக்க முடியாது என்பது தான் எங்களுடைய கருத்தாக இருக்கிறது.

இந்த அரசாங்கம் எடுக்கின்ற நல்லாட்சி நடவடிக்கைகளுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாக இருக்கும். அதேநேரம் தமிழ் மக்களுக்கு எதிரான நீதிக்குப் புறம்பான எந்த காரியங்களை செய்தாலும் அதனை சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பும் தயக்கம் இன்றி எதிர்க்க வேண்டிய கடமையும் எங்களுக்கு இருக்கிறது. ஏனென்றால் நாம் தமிழ் மக்களின் பிரதிநிதியாக இருக்கின்றோம்.

இதற்கு அப்பால் இந்த மாவட்டத்தினுடைய அபிவிருத்தி பணிகளில் நாமும் கூடுதலான கவனம் செலுத்த வேண்டியுள்ளது. கடந்த கால சூழ்நிலைகள் நாம் அவற்றை செய்ய சந்தர்ப்பம் ஏற்படவில்லை. ஆனால் எதிர்காலத்தில் அப்படி இல்லாது நாம் பணியாற்றக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும். அதனை இந்த அரசாங்கம் செய்யும் என நம்புகின்றோம் எனத் தெரிவித்தார். (2-250)




### எதிர்கால இரண்டாம் நிலை பாடசாலைகளின்

## அதிபர்களை வலுவூட்டுவதற்கு 10 நாட்கள் நிகழ்ச்சித் திட்டம்

(மல்லாவி)

மத்திய கல்வி அமைச்சின் கீழுள்ள தேசிய கல்வி நிறுவகத்தின் ஏற்பாட்டில் எதிர்கால இரண்டாம் நிலை பாடசாலைகளின் அதிபர்களை வலுவூட்டுவதற்கான பத்து நாட்கள் கொண்ட நிகழ்ச்சி திட்டம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தேசிய கல்வி நிறுவகத்தின் மஹரகம றீபேஜில் அமைந்துள்ள கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறுமென தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி தலைமைத்துவ முகாமைத்துவ பணிப்பாளர் எம்.ஏ.யு.சி.முனசிங்க அறிவித்துள்ளார்.

மேற்படி நடைபெறவுள்ள பத்து நாட்கள் கொண்ட கருத்தரங்கில் பங்குகொள்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள அதிபர்களின் பெயர் பட்டியல்கள் மாகாண ஆளுநர், மாகாண கல்விச் செயலாளர், கலந்து கொள்ளவுள்ள பாடசாலை அதிபர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதில் பங்கேற்கும் அதிபர்கள் மேலதிக தகவல்கள் தேவைப்படின் 077 402 8469 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

### வடமாகாண சுற்றுலாத்துறையை

## பிரதிபலிக்கும் சித்திரப்போட்டிக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(மல்லாவி)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வடமாகாண சபையின் முதலமைச்சரின் அமைச்சு ஏற்பாட்டில் ''பல இலட்சம் சுற்றுலாப் பயணிகள் பல இலட்சம் வாய்ப்புக்கள்'' எனும் தொனிப்பொருளில் வடமாகாண சுற்றுலாத் துறையை பிரதிபலிப்பதாக சித்திரப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இப்போட்டி வடமாகாண கல்வி திணைக்களத்தில் கீழுள்ள பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படவுள்ளது.

சித்திரப் போட்டிக்கான ஆக்கங்களை துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடம் இருந்து துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

மேற்படி போட்டி தொடர்பில் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 10 இல் கல்வி பயின்று வருகின்ற மாணவர்கள் சித்திரப் போட்டிக்கான ஆக்கங்களை எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளார்.

இப்போட்டியில் பங்கேற்கும் மாணவர்கள் பென்சில் வர்ணம் தவிர்ந்த ஏனைய வர்ணங்களைப் பயன்படுத்தி 18X14 அங்குலம் கொண்ட வெள்ளை நிறத்தாளில் சித்திரங்களை வரைந்து ஓவியத்தின் பின்புறம் மாணவர் முழுப் பெயர், தரம், பாடசாலையின் பெயர் என்பன எழுதப்பட்டு அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு பாடசாலை மட்டத்தில் சிறந்த ஆக்கங்களாக தெரிவு செய்யப்பட்ட இரு ஆக்கங்களை மட்டும் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அவர் பாடசாலை அதிபர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (2-15)




கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் சிரமதான நிகழ்வு நேற்று காலை அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது சிரமதானப் பணி நடைபெறுவதையும் மர நாட்டல் நிகழ்வு இடம் பெறுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யானைத் தந்தங்கள் கடத்திய நால்வருக்கு விளக்கமறியல்

## வாகனம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைப்பு

(மல்லாவி)

**முல்லைத்தீவில் இருந்து திருகோணமலைக்கு வாகனத்தில் யானைத்தந்தங்களைக் கடத்திய நான்கு நபர்களை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை மாவட்ட நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.**

இது தொடர்பில் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்தவாரம் யானைகளைக் கொன்று அதன் இரண்டு தந்தங்களை டொல்பின் வாகனம் ஒன்றில் வைத்து திருகோணமலைக்கு அரச அனுமதிப்பத்திரம் பெறாத நிலையில் கடத்திச் சென்றபோது தென்னை மாவடிச் சந்தியில் வைத்து திடீர் சோதனையை மேற்கொண்ட பொலிசாரிடம் யானைத் தந்தங்களும் அதனை கடத்திய நால்வரும் வசமாக மாட்டினர்.

இதனை அடுத்து அவர்களை கைது செய்து யானைத் தந்தங்கள், அதனைக் கடத்தியதற்குப் பயன்படுத்திய வாகனம் என்பவற்றுடன் திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் பொலிசார் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரணை செய்த நீதிபதி சந்தேக நபர்கள் நால்வரையும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு புல்மோட்டை பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

இதன்போது கைப்பற்றப்பட்ட பொருட்களும் புல்மோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (2-15)




# மம்மில் பிள்ளையார் ஆலயத்தில் ஆவணிச் சதுர்த்தி நாளை

(மல்லாவி)

முல்லைத்தீவு அம்பகாமம் அருள்மிகு மம்மில் பிள்ளையார்ஆலயத்தில் ஆவணிச் சதுர்த்தி நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

அந்த வகையில் ஆலயத்தின் கும்பாபிஷேக விநாயகர் பெருமானின் சிறப்பு இறுவெட்டு வெளியீடும் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் நேர்த்திக்கடன் செய்ய விரும்பும் அடியார்கள் தங்களின் நேர்த்திக்களை செய்து கொள்ளலாம் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

எனவே அடியார்கள் அனைவரையும் அன்றைய தினம் நடைபெறும் பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டு அருளாசியைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர்கள் கேட்டுள்ளனர். 1(2-15)

# உலக உளநல தினத்தையொட்டி கட்டுரை, கவிதைப்போட்டிகள்

(மல்லாவி)

நாடளாவிய ரீதியில் உலக உளநல தினம் எதிர்வரும் ஒக்யோபர் மாதம் 10 ஆம் திகதி சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனையொட்டி மட்டக்களப்பு சர்வதேச உளவியல் சார் கற்கை நிலையம் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாடு தழுவிய ரீதியில் கட்டுரை, கவிதை ஆகிய போட்டிகளை நடத்தி சான்றிதழ்கள், பணப்பரிசுகள் என்பனவற்றை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இப்போட்டிகளானது அங்கொட மனநல வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் என்.கணேசன் தலைமையில் உலக நண்பர்களின் தேவைகளுக்கான நண்பர்களின் அமைப்பின் அனுசரணையில் நடைபெறும்.

கௌரவமான உளநல சேவை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எனும் தலைப்பில் ஆயிரம் சொற்களுக்கு மேற்படாமல் கட்டுரையும்,20 வரிகளுக்கு மேற்படாதவாறு கவிதையும் எழுதப்படல் வேண்டும்.

வயது வேறுபாடு இன்றி அனைவரும் பங்கேற்கக்கூடிய இப்போட்டிகளில் ஒருவர் ஒரு போட்டியில் மட்டுமே பங்கேற்க முடியும்.

போட்டியில் வெற்றியீட்டுவோருக்கு முதலாவது பரிசாக 15 ஆயிரம் ரூபாவும் இரண்டாவது பரிசாக 10 ஆயிரம் ரூபாவும் மூன்றாவது பரிசாக 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளதுடன் உளவியல் விருதும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

ஆக்கங்கள் யாவும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்பாக பணிப்பாளர் சர்வதேச உளவியல் சார் கற்கைகள் நிலையம், இல.25/03,நாலாம் குறுக்குத் தெரு கல்லடி வேலூர், மட்டக்களப்பு எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 077 698 4 338, 075 436 2897 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற முடியுமென மேற்படிக் கற்கை நிலையத்தின் பணிப்பாளர் திருமதி. பிரான்சிஸ் தேவரஞ்சினி தெரிவித் துள்ளார். (2-15)

# முள்ளந்தண்டுவடம் பாதிப்புற்ற குடும்பஸ்தருக்கு உலருணவுப்பொதி

(சிவநகர்)



கிளிநொச்சி பாரதிபுரம் கிராமத்தில் வசிக்கின்ற மூன்று பிள்ளைகளின் தந்தையான சந்தனம் சசிக்குமார் என்பவர் கடந்த கால யுத்த சூழ்நிலையினை அடுத்து முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட நிலையில் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்ந்து வருகின்றார்.

இவரது குடும்ப பொருளாதார நிலையைக் கவனத்தில் கொண்டு வாழ்வதற்கு தற்காலிக வீடொன்றை பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கட்டிக்கொடுத்துள்ளார்.

இதேவேளை இவரது குடும்ப நிலையைக் கருத்திற் கொண்டு கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் நிதியுதவி மூலம் பத்தாயிரம் ரூபா வரையிலான உலர் உணவுப்பொருட்கள் அடங்கிய பொதியொன்று அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது.

இக்குடும்பத்தின் எதிர்கால நலனைக் கருத்திற் கொண்டு மனிதாபிமான அடிப்படையில் உதவிகள் வழங்கப்படுவது சாலச்சிறந்தது என சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளார். (2-254)

# சமூக விழுமியங்களை வளர்ப்பதன் மூலம் சிறந்த சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்

## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

சமய விழுமியங்களை வளர்ப்பதன் மூலமே சிறந்த சமூகத்தை கட்டியெழுப்ப முடியும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தெரிவித்துள்ளார்.

சமூகத்தில் சமய விழுமியங்களை கட்டி வளர்ப்பதன் மூலம் சிறந்த சமூகங்களை உருவாக்க முடியும். அநாகரிக தர்மபால இதற்கு சிறந்த உதாரணம் என அவர் சுட்டிக் காட்டினார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அநாகரிக தர்மபாலவின் 151 ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு நேற்று காலை 9 மணியளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அநாகரிக தர்மபால தனியே பௌத்த மதத்திற்கு அப்பால் தேசிய ரீதியில் ஒற்றுமையை வளர்ப்பதற்காக உழைத்த ஒருவர். அவர் சமய விழுமியங்கள் நெறிமுறைகளுக்கு ஊடாக ஒழுக்கம் உள்ள சமூகத்தை உருவாக்க உழைத்தவர்.

ஒரு சமூகம் தத்தம் சமயங்களில் பற்றுக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அதன் மூலமே நாங்கள் ஒரு நல்ல ஒழுக்கமுள்ள சமூகத்தில் வாழ்கின்ற திருப்தி ஏற்படும்.

அத்தோடு ஒழுக்கம் நிறைந்த சமூகத்தை கட்டியெழுப்ப உழைக்கிறவர்களாகவும் இருக்க முடியும். அந்த வகையில் அநாகரிக தர்மபாலதான் சார்ந்த சமயத்திற்காக எவ்வாறு உழைத்தார் என்பது அனைவருக்கும் தெரியும்.

அவ்வாறே நாங்களும் எங்கள் சமய பண்பாட்டு விழுமியங்களை வளர்த்தெடுப்பதில் உழைக்க வேண்டும் என தெரிவித்தார். இந்நிகழ்வின் சிறப்புரையை கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்தில் சமூக விஞ்ஞான ஆசிரியர் ஆலோசகர் ஜெ.நிசாகர் ஆற்றினார். இந்த நிகழ்வை முன்னிட்டு மாவட்டச் செயலக வளாகத்தில் மரம் நடுகை நிகழ்வும் சிரமதான பணியும் மாவட்டச்செயலக ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டது. (2)

# சர்வதேச இந்து இளைஞர் பேரவையினால் சக்கர நாற்காலி வழங்கி வைப்பு



(குருமன்காடு)

வவுனியா கல்மடு ஈஸ்வரிபுரத்தைச் சேர்ந்த உடல்நலம் பாதிக்கப்பட்ட அ.பிரபாகரன் என்ற சிறுவனுக்கு சர்வதேச இந்து இளைஞர் பேரவையினால் சக்கர நாற்காலி வழங்கி வைக்கப்பட்டது.

சக்கர நாற்காலியை பேரவையின் தலைவர் சிவ.கஜன், பேரவை உறுப்பினர்களான மணிவண்ணன், சுதா, கேசவன் ஆகியோர் இணைந்து வழங்கி வைத்தனர்.

நீண்டகாலமாக நடமாட முடியாது துன்பப்படுகின்ற தனது மகனுடைய நிலையை பேரவையின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் கேசவனுக்கு தாயார் தெரிவித்ததையடுத்து பேரவையினரால் முதற்கட்டமாக சக்கரநாற்காலியும் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இது பற்றி சிறுவனின் தாயார் அ.கிருஷ்ணவதனி தெரிவிக்கையில்,

நாங்கள் பல இன்னல்களை எதிர்கொண்டு தற்பொழுது இக்கிராமத்தில் வீடமைத்து நிரந்தரமாக வசிக்கின்றோம். இந்நிலையில் என்னுடைய மகன் நீண்டகாலமாக நடமாட முடியாத நிலையில் காணப்படுகின்றார்.

தவண்டு தவண்டுதான் தன்னுடைய வேலைகளை செய்கிறார். மற்றைய பிள்ளைகள் போன்று பாடசாலைக்குச் சென்றுபடிக்க ஆசை. ஆனால் தூக்கிச் சென்றுதான் பாடசாலையில் விடவேண்டும்.

இதனால் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்ததுடன் பாடசாலை படிப்பை நிறுத்த வேண்டி ஏற்பட்டது என்றார். நாற்காலியில் ஏறி சந்தோசமாக இருந்த சிறுவன் தாயை பார்த்துக்கேட்டான் "அம்மாநான்நாளை பாடசாலைக்குப் போகலாமா" என்று. அவனுடைய அந்த வார்த்தைகள் பெற்றோர்களை கண் கலங்க வைத்தது. (2-250)

# வரவேற்பு நிகழ்வும் பொதுக்கூட்டமும்

(மல்லாவி)

குமுழமுனை கிராம அபிவிருத்தி வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசாவிற்கான வரவேற்பு நிகழ்வும் பொதுக் கூட்டமும் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் குமுழமுனை பொது நோக்கு மண்டபத்தில் கிராம அபிவிருத்தி முன்னேற்ற சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பொதுமக்கள் பாராளுமன்ற உறுப்பினரை வரவேற்றதோடு சமகால அரசியல் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

இதனைத் தொடர்ந்து பொதுக்கூட்டம் இடம்பெற்றது.

இதில் வீதிகள் தொடர்பாகவும் கால்நடைகளின் மேய்ச்சல் தரை குறித்தும் பிரதேச வைத்தியசாலை தொடர்பாகவும் விவசாயம், மீன்பிடி போன்ற விடயங்கள் குறித்த பிரச்சினைகள் இக்கூட்டத்தில் மக்களால் முன் வைக்கப்பட்டுள்ளது.

இவ் விடயங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்று இதற்கான தீர்வினைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்தார் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா. (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடன் செய்த உடன்படிக்கையால் இலங்கைக்கு நன்மை கிடைக்கவில்லை

## ரத்ன தேரர் சுட்டிக்காட்டு

இந்தியாவுடன் செய்துகொள்ளப்பட்ட எந்தவொரு உடன்படிக்கையினாலும் இலங்கைக்கு நன்மை கிட்டவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் சீபா உள்ளிட்ட எந்தவொரு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டாலும் அது குறித்து முதலில் நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.


எந்தவொரு உடன்படிக்கையையும் கைச்சாத்திடுவதற்கு முன்னதாக நாடாளுமன்றில் சமர்ப்பித்து அதற்கான அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

இரகசியமான முறையில் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட அனுமதிக்க முடியாது.

கடந்த காலங்களில் இந்தியா நடந்து கொண்ட விதத்தை கருத்திற்கொள்ளும் போது எந்த வகையிலும் திருப்தி கொள்ள முடியாது.

உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் போது அது நாட்டுக்கு நன்மையை ஏற்படுத்த வேண்டியது அவசியமானது.

இந்தியாவுடனான உடன்படிக்கைகளின் போது நாம் அதனை சரியான முறையில் பின்பற்றிய போதிலும் இந்தியா அவ்வாறு செய்வதில்லை என அத்துரலிய ரத்ன தேரர் சிங்கள பத்திரிகையொன்றுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார். (இ-7)




# அரசின் உள்ளக விசாரணையை ஐ.நா.அறிக்கை பலப்படுத்தும்

## அமைச்சர் சம்பிக்க நம்பிக்கை

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை மீதான அறிக்கை உள்ளக விசாரணைகளை பலப்படுத்தும் வகையில் அமையும் என்ற நம்பிக்கை உள்ளது எனவும், இலங்கை குறித்த சர்வதேச தலையீடுகளை புதிய அரசாங்கம் சரியான முறையில் கையாளும் எனவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

தவறியேனும் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டிருக்காவிடின் தொடர்ந்தும் மகிந்தவின் ஆக்கிரமிப்பில் நாடு இருந்திருந்தால் எமது இராணுவ வீரர்கள் நிச்சயமாக சர்வதேச நீதிமன்றில் தண்டிக்கப்பட்டிருப்பார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில் இலங்கை தொடர்பில் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது. இந்த நிலையில் இலங்கையின் மீதான சர்வதேச தலையீடு தொடர்ந்தும் காணப்படும் வாய்ப்புக்கள் உள்ளனவா என வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில் இலங்கை தொடர்பில் இன்று அறிக்கை முன்வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இப்போது இலங்கை தொடர்பில் எழுந்துள்ள சர்வதேச அழுத்தங்கள் இனறு, நேற்று ஆரம்பமாகிய ஒன்றல்ல. யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட நேரத்தில் இருந்து இலங்கை இராணுவத்தின் மீது போர்க் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் நிரூபிக்கக் கூடிய ஆதாரங்கள் எவற்றையும் முன்வைக்கவில்லை. எனினும் சர்வதேச ஊடகங்கள் ஒருசில தமது தனிப்பட்ட வியாபார மற்றும் ஒரு சிலரின் தூண்டுதலின் பெயரில் பொய்யான புகைப்படங்களையும், வீடியோ காணொலிப்பதிவுகளையும் தயாரித்து இல்ங்கை இராணுவத்துக்கு எதிராக வெளியிட்டு வருகின்றனர்.

எனினும் இந்த ஆதாரங்கள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானவை. இலங்கை இராணுவம் கடந்த காலத்தில் மிகப்பெரிய மனிதாபிமான சேவையினை செய்துள்ளது. இந்த நாட்டில் பிரிவினைக் கொள்கையில் பலமடைந்த ஆயுததாரிகளின் தீவிரவாத செயற்பாடுகளினால் நாட்டில் மூவின மக்களும் பாதிக்கப்பட்டனர். குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும் மிக மோசமான அடக்குமுறை செயற்பாடுகள் காணப்பட்டன. அவ்வாறான சூழலில் இருந்து நாட்டையும் மக்களையும் காப்பாற்றியுள்ளோம்.

யுத்தம் முடிவடைந்து கடந்த ஐந்து ஆண்டுகளில் நாட்டின் சூழல் முழுமையாக மாற்றமடைந்துள்ளது. வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்து பகுதிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. அதேபோல் நாட்டுக்கு எதிரான உள்நாட்டு அச்சுறுத்தல்கள் அனைத்தும் முழுமையாக தடுக்கப்பட்டுள்ளன. ஆகவே இவை அனைத்துமே ஒரு நாட்டின் மிக முக்கிய உள்நாட்டு செயற்பாடுகளாகும். ஆகவே இவற்றை சர்வதேச அமைப்புக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆனால் சர்வதேச அளவில் செயற்படும் புலம்பெயர் புலிகள் அமைப்புகள் மற்றும் பிரிவினைவாத அமைப்புக்களின் தேவையை பூர்த்திசெய்யும் வகையில் சர்வதேச தரப்பும் செயற்படுகின்றது. ஒரு பக்க நியாயங்களை மாத்திரமே கவனத்தில் கொண்டு சர்வதேசம் செயற்படுகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆயினும் கடந்த காலத்தில் சர்வதேச தலையீடுகள் அதிகரித்து காணப்பட்டாலும் இப்போது நிலைமை முழுமையாக மாற்றமடைந்துள்ளது.

கடந்த ஆட்சியில் முன்வைக்கப்பட்டிருந்த சர்வதேச தலையீடுகள் இப்போது குறைவடைந்துள்ளன. அதேபோல் புதிய அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை பலமடைந்துள்ளது. ஆகவே இவை அனைத்தையும் நல்ல முன்னேற்றங்களாகவே நாம் கருதுகின்றோம். அத்தோடு இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை முன்வைக்கும் விசாரணை அறிக்கையும் இலங்கையை பாதிக்காத வகையிலும் சர்வதேசத்தின் நேரடித் தலையீடுகள் எவையும் இல்லாத வகையிலும் அதேவேளை உள்ளக விசாரணை பொறிமுறையினை பலப்படுத்தும் வகையிலுமே அமையும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

இந்த ஆட்சிமாற்றம் நாட்டுக்கும் இராணுவ வீரர்களுக்கும் நன்மையளிக்கும் வகையில் அமைந்துள்ளது. தவறியேனும் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டிருக்காவிடின் நாட்டின் நிலைமை முழுமையாக மாறியிருக்கும். மகிந்தவின் ஆக்கிரமிப்பில் நாடு தொடர்ந்தும் இருந்திருந்தால் எமது இராணுவ வீரர்கள் நிச்சயமாக சர்வதேச நீதிமன்றில் தண்டிக்கப்பட்டிருப்பார்கள். கடந்த காலத்தில் குறிப்பிட்ட சில அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பல இராணுவ வீரர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. ஆனால் இன்று அவை அனைத்தும் நீக்கப்பட்டுள்ளன. அதேபோல் நேரடி சர்வதேச தலையீட்டை ஏற்படுத்தி நாட்டில் மீண்டுமொரு நெருக்கடி நிலைமையை உருவாக்கியிருப்பார்கள். ஆயினும் அவ்வாறான செயற்பாடுகளில் இருந்து நாடு பாதுகாக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஐ.தே.க.வுக்கு அதிகார மோகம் இல்லாமையினால் எதிர்க்கட்சிக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கியது!

## ரஞ்சித் மத்தும பண்டார விளக்கம்



ஐக்கிய தேசியக் கட்சி அதிகார மோகமின்றி செயற்பட்டு வருவதாகவும். இதனால் எதிர்க்கட்சிக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டதாகவும் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துளளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் ஐக்கிய தேசியக் கட்சியே செயற்பட்டது.

எனவே ஏன் அமைச்சுப் பதவிகள் பகிரப்படுகின்றன என சிலர் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

எனினும் நாட்டின் தேவைக்கு ஏற்ற வகையில் அதிகார மோகமின்றி அமைச்சுப் பதவிகளை எதிர்க்கட்சியுடன் நாம் பகிர்ந்து கொண்டுள்ளோம்.

ரணில் - மைத்திரி அரசாங்கத்தின் ஊடாக இன்று இணக்கப்பாடுடைய அரசாங்கமொன்றை உருவாக்கிக் கொள்ள முடிந்துள்ளது.

இதன் ஊடாக மக்களுக்கு பாரியளவிலான சேவையை வழங்க சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. வரலாற்றில் முதல் தடவையாக இவ்வாறான ஓர் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது என ரஞ்சித் மத்தும பண்டார அண்மையில் தனமல்வில பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார் (இ-7)

# தேசிய ஒற்றுமையின் அடையாளமாக அநாகரிக தர்மபால திகழ்ந்தார்

## ஜனாதிபதி புகழாரம்



(கொழும்பு)

அநாகரிக தர்மபால தேசிய ஒற்றுமையின் அடையாளமாக திகழ்ந்தார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அநாகரிகதர்மபாலவின் 151 ஆம் சிரார்த்த தினத்தை முன்னிட்டு பன்னிபிட்டிய தர்மபால வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அநாகரிக தர்மபால சிங்கள இனத்திற்காக மட்டும் குரல் கொடுத்தவர் என அடையாளப்படுத்த சில கடும்போக்குவாதிகள் முயற்சிக்கின்றனர்.

அநாகரிக தர்மபால சிங்கள இனத்திற்காக மட்டும் குரல் கொடுத்தார் என்ற நிலைப்பாட்டை என்னால் ஏற்க முடியாது.

அனைத்து இன சமூகங்களுடனும் இணைந்து ஒரே தேசமாக முன்னோக்கி நகர வேண்டும் என்ற சிந்தனையில் தர்மபால நடவடிக்கைகளை மேற்கொண்டார் என அவர் தெரிவித்தார்.

பௌத்த மத செயற்பாட்டாளரும் எழுத்தாளருமான அநாகரிக தர்மபால 1864 ஆம் அண்டு செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி பிறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிங்கள பௌத்த தேசியத்திற்காக தர்மபால அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளதாக சிங்கள ஊடகங்கள் போற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைமீது தற்கொலைத்தாக்குதல் 350 கைதிகள் தப்பியோட்டம்

## ஆப்கானில் தலிபான்கள் துணிகரம்

(காபூல்)

**மத்திய ஆப்கானிஸ்தானிய நகரான காஸ்னிக்கு வெளியிலுள்ள சிறைச்சாலையொன்றின் மீது நேற்று முன்தினம் திங்கட்கிழமை தாக்குதலை நடத்திய தலிபான் தீவிரவாதிகள், அங்கிருந்த குறைந்தது 4 பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கொன்றுவிட்டு 350 க்கு மேற்பட்ட கைதிகளை விடுவித்துச் சென்றுள்ளனர்.**

தீவிரவாதிகளில் தற்கொலை மேலங்கி அணிந்திருந்த ஒருவர் சிறைச்சாலையின் பிரதான வாயிலுக்கு வெளியே குண்டை வெடிக்க வைத்ததாகவும் இந்நிலையில் ஏனைய தீவிரவாதிகள் அந்த சிறைச்சாலைக்குள் உட்பிரவேசித்து கைதிகளை விடுவிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கச்சிதமாக திட்டமிட்டு மேற்படி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் தீவிரவாதிகள் இராணுவ சீருடை அணிந்து வந்தே தாக்குதலை நடத்தியிருந்ததாகவும் கான்ஸி மாகாண பிரதி ஆளுநர் மொஹமட் அலி அஹ்மடி கூறினார்.

இந்தத் தாக்குதலை தாமே நடத்தியதாக தலிபான் தீவிரவாதிகள் உரிமை கோரியுள்ளனர்.

மேற்படி சம்பவத்தில் தாக்குதல்தாரிகளில் மூவர் உயிரிழந்துள்ளதாக தலிபன் பேச்சாளர் ஸபிஹுல்லாஹ் முஜாஹித் தெரிவித்தார்.

இது தொடர்பில் பிரதி ஆளுநர் அஹ்மடி விபரிக்கையில், இந்த சம்பவத்தில் 7 பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்துள்ளதாகவும் சுமார் 80 கைதிகள் தப்பிச்செல்லாது சிறைச்சாலையில் இருந்ததாகவும் கூறினார்.

தப்பிச்சென்ற கைதிகள் யாவர் என்பது தொடர்பில் விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை. மேற்படி கைதிகள் தப்பிச்சென்ற விவகாரத்தில் சிறைச்சாலைக்குள் உள்ளவர்களது உதவி எதுவும் பெறப்பட்டிருக்கக் கூடிய சாத்தியப்பாட்டை தான் நிராகரிக்கவில்லை என அஹ்மடி மேலும் கூறியுள்ளார்.(3-7)

# 22 அகதிகள் பரிதாபமாக பலி

உள்நாட்டுப் போர் நடந்து வரும் சிரியா, ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான், ஆபிரிக்க நாடுகளில் இருந்து ஏராளமானோர் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று கொண்டிருக்கின்றனர். சிரியாவில் இருந்து செல்கிற அகதிகள், துருக்கி வழியாக கிரீஸ் நாட்டின் கொஸ் தீவுக்கு செல்கின்றனர்.

இப்படி ஒரு மரப்படகு 200 இற்கும் மேற்பட்ட அகதிகளை சுமந்து கொண்டு துருக்கியில் இருந்து கடல் மார்க்கமாக் கொஸ் தீவுக்கு சென்று கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக கவிழ்ந்தது.

உடனடியாக துருக்கி கடலோர காவற்படையினருக்கு தகவல் கிடைத்தது. அவர்கள் விரைந்து சென்று 211 பேரை பத்திரமாக மீட்டனர். எனினும் 22 பேர் தண்ணீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். அவர்களின் உடல்கள் மீட்கப்பட்டு விட்டன. அவர்களில் 11 பேர் பெண்கள். 4 பேர் குழந்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது. பலியானவர்கள் எந்த நாட்டினர் என்பது இன்னும் உறுதியாக தெரியவரவில்லை. (3-7)

# நம்பிக்கை வாக்கெடுப்பில் தோற்றார் அவுஸ்.பிரதமர்

## புதிய பிரதமர் மல்கம் நேற்று பதவியேற்பு


மல்கம் டர்ன்புல்

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் டோனி அபோட் தோல்வியடைந்ததையடுத்து அந்நாட்டின் புதிய பிரதமராக மல்கம் டர்ன்புல் (60) நேற்று பதவியேற்றார்.

அவுஸ்திரேலியாவில் ஆளும் லிபரல் கட்சி சார்பில் நேற்று முன்தினம்நடத்தப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பில் தற்போதைய பிரீதமரான டோனி அபோட் தோல்வியடைந்ததை அடுத்து, அவர் தனது பிரதமர் பதவியை இழந்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் கடந்த சில மாதங்களாக பிரதமர் டோனி அபோட்டிற்கு எதிரான அரசியல் சூழல் ஏற்பட்ட நிலையில், நேற்று நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெற்றது. இதையடுத்து, கேன்பரா நகரில் நடைபெற்ற இந்த வாக்கெடுப்பில் டோனி அபோட்டிற்கு 44 வாக்குகளும், அவரது நீண்டகால எதிர்ப்பாளரான மல்கம் டர்ன்புல்லிற்கு 54 வாக்குகளும் கிடைத்துள்ளன.

இந்நிலையில், அமைச்சரவையில் தனது பெரும்பான்மையை நிரூபிக்க டோனி அபோட் தவறியதால், அவரது பிரதமர் பதவி பறிபோனது. இதையடுத்து. அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமராக மல்கம் டர்ன்புல் நேற்று பதவியேற்றுக் கொண்டார். கடந்த 8 ஆண்டுகளில் ஐந்தாவது பிரதமராக பொறுப்பேற்றுள்ள இவர் அவுஸ்திரேலியாவின் 27 ஆவது பிரதமரும் ஆவார்.

பொறுப்பேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அவுஸ்திரேலியாவை புதிய பாணியிலான தலைமையை நோக்கி வழிநடத்திச் செல்வேன் என்று உறுதி அளித்தார்.

இந்த திருப்பம் நான் எதிர் பாராதது. எனினும், இந்த நாட்டுக்கு தலைமையேற்று, நாம் இன்று சந்தித்துவரும் மிகப்பெரிய சவால்களை எதிர்கொண்டு, தனிநபர் மற்றும் வர்த்தக சுதந்திரத்துடனும், தெளிவான பொருளாதார சீர்திருத்த பாதையிலும் நாட்டை வழிநடத்திச் செல்வதில் எனது கடமையை நிறைவேற்றுவேன் என கூறிய மல்கம் டர்ன்புல், பாராளுமன்றம் தனது முழு ஆயுட்காலத்தையும் நிறைவு செய்யும், முன்கூட்டியே பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, பொதுத்தேர்தல் நடத்தப்படமாட்டாது என்றும் தெரிவித்துள்ளார். (3-7)




# எல்லையில் காத்துக் கிடக்கும் அகதிகள் பாதையை மூடியது ஹங்கேரி அரசாங்கம்

(புடாபெஸ்ட்)

தினந்தோறும் பல்லாயிரக் கணக்கான குடியேறிகள் ஹங்கேரிக்குள் நுழைவதை தடுக்கும் வகையில் செர்பியா நாட்டையொட்டியுள்ள எல்லைப்பகுதியை ஹங்கேரி அரசு மூடியுள்ளது.

இந்த ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மட்டும் உள்நாட்டு கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஆபிரிக்கா, ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து பிற நாடுகளுக்கு அடைக்கலம் தேடிச் செல்லும் சுமார் 2 இலட்சம் மக்கள் ஹங்கேரிக்குள் நுழைந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் ஹங்கேரியில் அகதிகளாக தங்கியுள்ளனர். மீதிபேர் அங்கிருந்து கடல்மார்க்கமாக துருக்கி. கிறீஸ், ஜெர்மனி மற்றும் சுவீடன் போன்ற நாடுகளுக்கு புகலிடம் தேடி செல்கின்றனர்.



ஐரோப்பிய யூனியன் நாடுகளில் ஒன்றான ஹங்கேரிக்குள் நுழைந்து விட்டால் போதும். அங்கிருந்து ஏதாவது ஒரு ஐரோப்பிய நாட்டில் எப்படியாவது குடியேறி விடலாம் என்ற ஆவலுடன் அங்குவரும் மக்களால் ஹங்கேரியில் வாழும் மக்களின் அமைதி சீர்குலைந்து விடும் என ஹங்கேரி அரசு கருதுகின்றது.

அதுமட்டுமின்றி. வந்தேறிகளில் பெரும்பாலானவர்கள் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து வந்துகொண்டிருப்பதால், ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் உண்டாகலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

குறிப்பாக, இந்த ஆண்டுக்குள் ஜெர்மனியில் மட்டும் 10 இலட்சம் பேர் அகதிகளாக நுழையக்கூடும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கிடையில், ஹங்கேரியின் குடியுரிமை சட்டத்தில் கடுமையான சட்டதிட்டங்கள் சேர்க்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இதுவரை இல்லாத அளவிற்கு அண்டை நாடான செர்பியாவில் இருந்து நேற்று மட்டும் 5 ஆயிரத்து 809 அகதிகள் ஹங்கேரியை சென்றடைந்துள்ளனர்.

நிலைமை மேலும் மோசமாவதை தடுக்கும் வகையில் செர்பியா - ஹங்கேரி எல்லையோரம் உள்ள 13 அடி உயர வேலியை இழுத்து மூடி, இனியும் அகதிகள் ஹங்கே ரிக்குள் நுழைவதை தடுக்குமாறு ஹங்கேரி அரசு உத்தரவிட்டது. இதையடுத்து, ரோஸ்கே எல்லைப் பகுதி உடனடியாக அடைக்க ப்பட்டது.

வழக்கம்போல் ஹங்கேரிக்குள் நுழையும் ஆவலுடன் எல்லைப் பகுதிக்கு நேற்றுச் சென்ற குடியேறிகள் எல்லைப்பகுதி அடைக்கப்பட்டுள்ளதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். தோளிலும், இடுப்பிலும், தள்ளுவண்டிகளிலும் குழந்தைகளை வைத்தபடி காத்திருக்கும் பல பெண்களும், முதியோர்களும் எல்லையோரம் அழுதபடி காத்திருக்கும் காட்சி பார்ப்பவர்களின் இதயத்தை வேதனையில் ஆழ்த்துவதாக உள்ளூர் ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.

எல்லைப்பகுதி அருகே ஏராளமான இராணுவ ஹெலிகொப்டர்களும், பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர். இதற்கு முன்னதாக, கள்ளத்தனமாக ஹங்கேரிக்குள் நுழையும் குடியேறிகள் கைது செய்யப்படுவார்கள் என அந்நாட்டு அரசு நேற்று அறிவித்திருந்தது. குறிப்பிடத்தக்கது. (3-7)

# எகிப்தில் தீவிரவாதிகள் என நினைத்து 12 சுற்றுலா பயணிகள் சுட்டுக்கொலை

(கெய்ரோ)

எகிப்தில் பாலைவனப்பகுதியில் தீவிரவாதிகள்என நினைத்து இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் சுற்றுலா பயணிகள் உட்பட 12 பேர் பலியானார்கள். பாதுகாக்கப்பட்ட பகுதிக்குள் சுற்றுலா பயணிகள் வாகனம் நுழைந்ததாக எகிப்திய அரசு கூறியுள்ளது. இவர்கள் அனைவரும் மெக்சிகோவை சேர்ந்த சுற்றுலா பயணிகள் ஆவார்கள். மேற்படி சம்பவத்தில் 10 பேர் காயம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



சுற்றுலாப் பயணிகள் விபரம் பாதுகாப்பு அதிகாரிகளிடம் முன்கூட்டியே வழங்கப்பட்டிருந்தது என்றும். அவர்களுக்கு பொலிஸார் பாதுகாப்பு வழங்கியிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் எகிப்திய அதிகாரிகள் இதனை மறுத்துள்ளனர்.(3-7)

# மன்னிப்பு கோரியது எகிப்து

எகிப்து நாட்டின் பாலைவனப் பகுதியில் சுற்றுலா சென்றவர்கள் மீது அந்நாட்டு இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 12 பேர் உயிரிழந்தமைக்கு வருத்தம் தெரிவித்து மெக்சிகோவிடம் எகிப்து பிரதமர் மன்னிப்பு கோரியுள்ளார்.

தடை செய்யப்பட்ட பஹாரிடியாஸ் பாலைவனச்சோலை பகுதியில் நடந்த தாக்குதலில் தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தில் சுற்றுலாப் பயணிகள் மீது இன்னொரு வாகனத்தில் விரட்டிச் சென்ற இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இந்தச் சம்பவத்தில் 12 பேர் உயிரிழந்தனர். 10 பேர் காயம் அடைந்தனர். பலியானவர்களில் 8 பேர் மெக்சிகோ நாட்டை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ள நிலையில் இந்த தாக்குதலுக்கு மெக்சிகோ ஜனாதிபதி என்ரிக் பெனா நியெட்டோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் எகிப்திய பிரதமர் இப்ராஹிம் மாஹல்ப் கெய்ரோவில் இருக்கும் மெக்சிகன் தூதரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தன்னுடைய வருத்தத்தை தெரிவித்துள்ளார்.

மேலும், காயமுற்றவர்களுக்கு முறையான மருத்துவ பராமரிப்பு அளிக்கப்படும் எனவும், நடந்த தவறுக்காக எகிப்து அரசாங்கம் மன்னிப்பு கேட்டுக்கொள்வதாகவும் பிரதமர் இப்ராஹிம் தெரிவித்துள்ளார். (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அருள்மிகு ஸ்ரீ செல்வக்கதிர்காம முருகன் தேவ
# நவக்கிரக, வைரவர், சண்டேஸ்வரர், கொடித்த
# கும்பாபிஷேக சிறப்பிதழ்- 2015.09.16



### ஆசியுரை

சரவணை ஸ்ரீ செல்வக் கதிர்காம முருகன் ஆலய பரிவாரமூர்த்தி மஹாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா 16.09.2015 புதன்கிழமை 6.30 முதல் 7.20 வரையுள்ள சுபவேளையில் முருகப்பெருமானின் பெருங்கருணையினாலே நடைபெறுகின்றது.

எம் பெருமானுடைய ஆலய பரிவாரமூர்த்திகள் வசந்த மண்டபம், மணிக்கோபுர மண்டபம், கொடிஸ்தம்பம் ஆகியவற்றுக்கு மஹாகும்பாபிஷேகத்தை பிரதம குருவாக அடியேன் நடத்துவதற்கு எம்பெருமான் முருகப்பெருமானின் திருவருள் கை கூடியதுடன் அடியேனும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தமை பெருமகிழ்ச்சியடைவதுடன் இவ்வூர் மக்களுக்கு ஆலய பரிபாலன சபையினருக்கு எம்பெருமானின் அருளும் அடியேனுடைய ஆசிகளும் என்றும் உரித்தாக எல்லாம்வல்ல முருகப்பெருமானின் பாதங்களை வணங்கி ஆசி கூறி அமைகின்றேன்.

கும்பாபிஷேக பிரதம குரு,ஆகம கிரியா ஜோதி
வேதாகமபூஷணம்,
சிவஸ்ரீ.சிதம்பர மகேந்திரநாதக் குருக்கள்
மாயக்கை சித்திவிநாயகர் ஆலயம்
தம்பசிட்டி, பருத்தித்துறை.



### அருளாசிச் செய்தி

முருகன் அடியார்களுக்கு,

சரவணைப் பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் அருள்மிகு ஸ்ரீ செல்வக் கதிர்காம முருகப் பெருமானுக்கு இன்று மஹாகும்பாபிஷேகம நடைபெறுவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. முழு முதற்கடவுளாக சரவணைப் பதியில் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு அருள்பாலித்துக் கொணடிருக்கும் முருகப்பெருமானுக்கு இன்று இப் புனிதச் செயலை செய்வது ஊருக்கும் ஊர் மக்களுக்கும் புனிதத்தை ஏற்படுத்துவதாகும்.

பன்னிரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகமானது இன்று முருகப் பெருமானுக்கு நடைபெறுவது சரவணை வாழ் மக்களுக்கும் ஆலய பரிபாலன சபையினருக்கும் ஆலயத்திற்கும் புனிதத்தை பெற்று தருவதாகும். நடைபெறும் மஹா கும்பாபிஷேகத்தை அனைவரும் தரிசனம் செய்து வாழ்வோமாக. இப்புனித காரியத்தைச் செய்யும் ஆலய பரிபாலன சபையினருக்கும் குருமார்களுக்கும் ஊர்மகளுக்கும் இறையருள் கிடைப்பதாக! முருகப் பெருமானை வழிபட்டு மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக!

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், இரண்டாவது குருமஹாசந்நிதானம்.



### ஆசிச்செய்தி

சரவணைப்பதி அருள் மிகு ஸ்ரீ செல்வக்கதிர்காம முருகன் ஆலயத்தில் கும்பாபிஷேகம் இன்று 16.09.2015 புதன்கிழமை அன்று நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. இப்பதியிலே அற்புதங்கள் ஊடாக அருள்பாலித்துக் கொண்டிருக்கும் முருகப் பெருமானும் அடியவர்கள், உபயகாரர்,பரிபாலன சபையினருக்கு ஏற்பட்ட திருவருள் கூடியதால் இப்புனிதமான கைங்கரியம் இனிதே நடைபெற எல்லாம்வல்ல முருகப் பெருமானின் திருவருளையும் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் குருவருளையும் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!

இறைபணியில்

ஜாக்ரத சைதன்யா, வதிவிட ஆச்சாரியார், சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்.



### ஆசியுரை

சரவணை அருள்மிகு ஸ்ரீ செல்வக்கதிர்காம முருகன் ஆலயப் பரிவாரமூர்த்திகள், கொடித்தம்பம் மற்றும் மணிக்கூட்டுக்கோபுரம் ஆகியன கும்பாபிஷேகம் கண்டு ஆலயமானது வேலணை சரவணைப் பதி வாழும் மக்களுக்கு திருவருள் பாலிக்கும் இந்நாளில் அனைத்து மக்களுக்கும் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கப்பெற்று வளமான வாழ்வு கிடைக்க அருள்மிகு ஸ்ரீ செல்வக் கதிர்காம முருகன் அருள் பாலிப்பாராக. கும்பாபிஷேகப்பெருவிழாவை முன்னிட்டு தென்னிந்தியப் பாடகர்களால் பாடப்பட்ட பக்திப் பாமாலை இறுவெட்டு வெளியிடப்படுகின்றமையானது மேலும் சிறப்பானதாகும்.

இன்றைய சந்ததியினருக்கு ஆன்மீக சிந்தனையையும், இறை வழிபாடுகளையும் மற்றும் ஆலய வரலாறுகளை ஆவணப்படுத்தும் வண்ணம் மேற்கொள்ளப்படும் இவ்வாறான இறுவெட்டு வெளியீடுகள் சமூகத்தில் முக்கிய இடத்தினை வகிக்கின்றன. அந்த வகையில் சரவணை அருள்மிகு ஸ்ரீ செல்வக் கதிர்காம முருகன் ஆலய நிர்வாகத்தினர் மேற்கொண்ட முயற்சிக்கு உறுதுணையாக இருந்த அனைத்து அடியவர்களுக்கும், ஆலய நிர்வாகத்தினருக்கும் முருகன் அருள் பரிபூரணமாக கிடைக்கவும் அவர்களின் ஆன்மீகப்பணி தொடரவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.


ஆ.நடராஜன்
இந்தியத் துணைத்தூதுவர்
யாழ்ப்பாணம்



### எம்கடன் பணி செய்து கிடப்பதே

சரவணை ஸ்ரீ செல்வக்கதிர்காம முருகப் பெருமான் ஓலைக் குடிசையிலே குடிகொண்டு இப்பதிவாழ் மக்கள் நலம் கருதி ஆரோக்கியமானவர்களையும், ஆன்மீகவாதிகளையும் சாமியம்மாக்களையும், பூசகர்களையும், பக்த அடியவர்களையும் தோற்றம் பெறச்செய்தார். மக்கள் பிணிதீர தன் இருப்பிடத்திலேயே அர்ப்பணித்து வருகின்றார். அவர் இருப்பிடம் சிறக்கவும் அவர் சார்ந்த விடயங்களைக் கருத்திலே கொண்டு ஆகம விதிப்படி ஆலயம் அமைத்து பரிவார மூர்த்திகளையும் அமைத்து, வாகனங்கள், எழுந்தருளி யாவும் அமைய இப்பதிவாழ் மக்களும் ஏனையவர்களும் உதவி வருவதனால் முருகப் பெருமானிற்காக ஆற்றுகின்ற பணி சிறப்புடையதாகின்றது. மேலும் இறைவனுக்காக ஆற்ற வேண்டிய பணி பல பரந்து கிடக்கின்றது. அனைவரும் அவன் பாதம் தொழுது இப்பணிகள் நிறைவேற உதவுவோம். இன்று நடைபெறும் கும்பாபிஷேகம் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

ச. தெய்வேந்திரன்
ஆலய தர்மகர்த்தா



சரவணை ஸ்ரீ செல்வக்கதிர்காம மு

1963ஆம் ஆண்டு காளான் வடிவிலே பொன்னிச்சாமி
கொடுத்தனர். அன்றிலிருந்து தீராத நோய்களையும் பிணிகளையு
மாளுக்கும் முருகனுக்கும் இரு ஆலயங்கள் அமைக்கப்பட்டன. சி
ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 2011.07.15 அன்று
டபம், மணிக்கூட்டுக் கோபுரம், வைர வர், சண்டேஸ்வரர், நவக்கி
அமைத்துத் தந்ததன் மூலம் 16.09.2015 இன்று புதன்கிழமை


மூர்த்தி, த்லம், தீர்த்தம் சிறப்புப் பெற்றதனால் மண், நீர் ம
மணிகள் சாமியம்மாக்களாக இருந்துள்ளனர். அவர்கள் பொன்
ம்மாக்கள் இன்றியும் வேலாயுதத்தின் துணையுடன் இன்றும்
குணமாகி வரு கின்றனர். இத்தகைய சிறப்புப் பெற்ற ஆல
முருகப்பெருமான் தன் இருப்பிடத்தை வலிமையாக்கி மக்கள

**2 ஆம் வட்டாரம்**
**சரவணை மேற்கு,**
**வேலணை.**

வசந்த மண்டபம்: திருமதி,
மகேந்திரன் தமயந்தி,
மணிக்கூட்டுக் கோபுரம்: கந்
தம்பதிகளின் பிள்
நவக்கிரகம்: திரு. பாக்கியநா
கொடித்தம்பம்: திரு.வேலன் பி
கிழக்கு) சண்டே
வைரவர் ஆலயம்:- பரிபா

மேன்மை கொள் சைவநீதி விளங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வணை

# வஸ்தானம் பொன்னி கோயில் பரிவார மூர்த்தி
# தம்பம், வசந்த மண்டபம், மணிக்கோபுர

ஐந்து முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெண் சமரில் அஞ்லென வேல் தோன்றும்
நெஞ்சில் ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார் முன்.



## வாழ்த்துச்செய்தி



யாழ்.மாவட்டத்தின் சரவணை பிரதேசதத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ செல்வக் கதிர்காம முருகன் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ள மஹா கும்பாபிஷேகத்திற்கும் அதனையொட்டி வெளியிடப்படும் இறுவெட்டுக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறைவன் ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கும் வண்ணமாக எழுந்தருளும் இடமே ஆலயமாகும். ஒரு பிரதேசத்தில் அமைந்துள்ள ஆலயங்கள் யாவும் அந்தப் பிரதேச மக்களின ஆன்மீக வாழ்வுக்கும், சமூக, கலை சார்ந்த வாழ்வியல வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைகின்றன. இவ்வாறு மக்களின் வாழ்வோடு இரண்டறக்கலந்து விளங்கும் ஆலயங்களை சிறப்பாக புனராவர்த்தனம் செய்து பாதுகாத்தல் மிகமிக அவசியமாகும்.

அந்த வகையில் சரவணை அருள்மிகு ஸ்ரீ செல்வக்கதிர்காம முருகன் தேவஸ்தானத்தின் புனருத்தாரண மஹா கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடத்தவுள்ள சிவாச்சாரியப் பெருமக்களுக்கும் இவ் அரிய பணியை செம்மையாக் ஒழுங்கமைத்த ஆலய பரிபாலன சபையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எல்லோரும் துன்பம் நீங்கி இன்பமாக வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கி றேன்.

திருமதி. மஞ்சுளாதேவி சதீஷன்,
பிரதேச செயலர்,
வேலணை.

## தலைவரின் வாழ்த்துச் செய்தி



ஓம் எனும் பிரணவ மந்திரத்துடன் சரவணைப்பதியில் பொன்னிச்சாமியம்மாவின் ஓலைக்குடிசையில் வந்துதித்து 2012-07-15ஆம் திகதி சரவணை ஸ்ரீ செல்வக் கதிர்காம முருகனுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. தற்போது ஆலய சூழலிலே புதிதாக அமைக்கப்பெற்ற கொடித்தம்பம், மணிக்கோபுரம், வசந்த மண்டபம் மற்றும் பரிவார மூர்த்திகளான வைரவர் ஆலயம், நவக்கிரக ஆலயம், சண்டேஸ்வர ஆலயம் என்பவற்றிற்கு 2015-09-16ஆம் திகதி புதன்கிழமை மஹா கும்பாபிஷேகப் பெரும் சாந்தி விழா நடைபெறும் இவ்வேளையில் சிறப்பாக இவ்விழா நடைபெறவும் இவற்றை அமைத்துத் தந்தவர்களுக்கும் இம்முருகனின் அருளும் ஆசியும் கிடைக்க வாழ்த்துகின்றோம்.

நல்லான் தேவன்
தலைவர்
சரவணை ஸ்ரீ செல்வக் கதிர்காம
முருகன் தேவஸ்தானம

...ாம முருகன் ஆலயத்தின் வரலாறு

...ிச்சாமி அம்மாவிற்கு முருகனும் நாகம்மா ளும் காட்சி ...களையும் இத்தலத்தில் இருந்து முருகன் தீர்க்கலானார். நாகம் ...ட்டன. சிவனுக்கும் தனி யான ஆலயம் அமைக்கப்பட்டது. 2000 ...அன்று மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது. வசந்தமண் ...நவக்கிரகம், கொடித்தம்பம் என்பவற்றை பக்த அடியவர்கள் ...ன்கிழமை கும் பாபிஷேகம் நடைபெறுகின்றது.

...ன, நீர் மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றன. இரு பெண் ... பொன்னிச்சாமியம்மா மற்றவர் சீதைச்சாமிய ம்மா. சாமிய ...ன்றும் ஆலயத்தில் பிணி நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள் ...ற ஆலயமாக இவ்வாலயம் சிறந்து விளங்குகின்றது. ...மக்களுக்கு அருளாட்சி புரிந்து வருகின்றார்.

ஆலய பரிபாலனசபையினர்.

...ருமதி, சங்கரன் கண்மணி,
...ந்தி, குடும்பத்தினர்
... கந்தையா, அந்தோனியாள்
பிள்ளைகள்
...கியநாதன் ரவீந்திர மூர்த்தி
...ன் பிள்ளைகள் (வேலணை
...ண்டேஸ்வரர்
... பரிபாலன சபையினர்.

**உபயகாரர்கள்**
**ஆலய தர்மகர்த்தா,**
**ஆலய பரிபாலன சபையினர்.**

...விளங்குக உலகமெல்லாம்

### சரவணை

அருள் மிகு ஸ்ரீ செல்வக் கதிர்காம
முருகன் ஆலயப் பரிவார மூர்த்திகளான
வைரவர், சண்டேஸ்வரர், நவக்கிரகங்கள்
கொடித்தம்பம், வசந்த மண்டபம், மணிக்கூட்டுக்
கோபுரம் கும்பாபிஷேக நிகழ்வையொட்டி
தென்னிந்தியப் பாடகர்களால் பாடப்பட்ட

**பக்திப் பாமாலை இறுவெட்டு வெளியீடு**

**காலம்:** 16.09.2015 புதன்கிழமை முற்பகல் 10.30 மணி
**இடம்:** ஆலய மண்டபம்

**தலைவர்**
**திரு. நல்லான் தேவன் அவர்கள்**
தலைவர், ஆலய பரிபாலன சபை

**அதிதி**
**திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள்**
பாராளுமன்ற உறுப்பினர்,யாழ்.மாவட்டம்.

**சிறப்பு அதிதி**
**திரு.A. நடராஜன் அவர்கள்**
இந்தியத் துணைத்தூதுவர், யாழ்ப்பாணம்.

**கௌரவ அதிதிகள்**
திருமதி சதீஷன் மஞ்சளாதேவி அவர்கள்
செயலர், பிரதேச செயலகம், வேலணை.
**திரு. M.G. காண்டீபன் அவர்கள்**
கணக்காளர்இந்துசமயகலாசாரஅலுவல்கள்திணைக்களம்
**திரு.வேலும்மயிலும் குகேந்திரன் அவர்கள்**
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்ட அமைப்பாளர், ஈ.ம.ஐ.கட்சி.

**நிகழ்ச்சி நிரல்**
**மங்கள விளக்கேற்றல்:** விருந்தினர்கள்
**இறைவணக்கம்:** அறநெறிப்பாடசாலை மாணவர்கள்
**வரவேற்புரை:** திரு.வே.தெய்வேந்திரன்,
உப செயலாளர், ஆலய பரிபாலன சபை
**ஆசியுரை:** ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
**வாழ்த்துரை:** M.G.காண்டீபன் அவர்கள்
**தலைமையுரை:** தலைவர் திரு. நல்லான் தேவன் அவர்கள்

**விருந்தினர் உரை**
திருமதி சதீசன் மஞ்சுளாதேவி, பிரதேச செயலர், வேலணை
திரு.A. நடராஜன், இந்திய துணைத்தூதுவர், யாழ்ப்பாணம்
திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்.

**இறுவெட்டு வெளியீடு**
**நயப்புரை:** திரு.எஸ்.விமல்சங்கர்
மிருதங்க விரிவுரையாளர், இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்
**ஏற்புரை:** செயலாளர், திரு.க.சண்முகம்பிள்ளை
**நன்றியுரை:** ஆலய பரிபாலன சபை

**பிரதிகள் பெறுவோர்**
1ஆம் பிரதி: திரு.கங்கை வேணீயன்
(வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம்)
2ஆம் பிரதி: திரு.பரராசசிங்கம் வரதராசசிங்கம்
(ஈஸ்வரபகவான் தனியார் நிறுவனம்)
3ஆம் பிரதி: திருமதி மகாதேவன் கலாநிதி (யாழ்ப்பாணம்)
4ஆம் பிரதி: திரு.நாகமுத்து விநாயகமூர்த்தி
(ஆலய நிர்வாக உறுப்பினர்)
5ஆம் பிரதி: பிள்ளையான் சண்முகநாதன் (முன்னாள் கமநல சேவை உத்தியோகத்தர்)

தமிழகத்தில் இருந்து பாடல்கள் வெளிவர உதவியவர்
M/S. RATHICK IMPEX
C.MUTHUKKARUPPAN
6206/2,3 RAMALINGAM
ST.THIRUKKOGARNAM
POO PUDUKKOTTAI
PUDUKKOTTAI 9DTO
TAMIL NADU 622002
PH:0091 -8012351639

திரு.திருமதி.மகேந்திரன் தமயந்தி,
தர்மகர்த்தா,ஆலய பரிபாலன சபை

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களை சுற்றுச் சூழல் காப்பு உபாயங்களில் நம்பிக்கை வைக்கச்செய்த மொன்றியல் சாசனம்

### 1. அறிமுகம்

1962 இல் ராச்செல் ஹர்சன் அம்மையார் டிடிரீ பூச்சிக்கொல்லி பயன்பாட்டினால் மனித இனம் எதிர்நோக்கும் அழிவைப்பற்றி "த சைலன்ஸ் ஸ்பிரிங்" என்ற புத்தகத்தில் எழுதியதிலிருந்து மனிதன் சுற்றுச்சூழல் பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தான்.

அவ்வாறு சிந்தித்து உணர்ந்து அதனைத் தீர்ப்பதற்கு விஞ்ஞான சமூகம்செயற்பட ஆரம்பித்தது. அதற்காக பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு உபாயங்களை உருவாக்கி அமுல்படுத்திக் கொண்டிருந் தார்கள்.

ஆனால் அநேகமான உபாயங்கள் வெற்றியை நோக்கி செல்கின்றனவா இல்லையா என்பதற்கு விஞ்ஞானிகளிடம் கூட போதிய ஆதாரங்கள் இருக்கவில்லை. இதனால் மக்களும் அரசியல் தலை வர்க ளும் இவ்வாறான உபாயங்களில் நம்பிக்கை இழக்கத் தொடங்கினார்கள். இவ்வாறானஉபாயங்களில்ஒன்று தான் ஓசோன்படை அழிவுக்கு தீர்வாகக் கொண்டுவரப்பட்ட மொன்றியல் சாசனம். கனடாவின் மொன்றியல் நகரத்தில் 197 நாடுகள் 1987 ஆம் ஆண்டு தமது இணக்கப்பாட்டை இன்றைய போல் ஒரு செப்டெம்பர் 16ஆம் திகதி கைச்சாத்திட்டன.

அதன் பின்னணியில் அந்த 197 நாடுகளும் அந்த நாளை நினைவு கூர்வதற்காகவும் ஓசோன்படை மற்றும் ஏனைய சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கான விழிப்புணர்வைக் கொண்டாடுவதற்காக செப்டெம்பர் 16ஆம் திகதியை சர்வதேச ஓசோன் பாதுகாப்பு தினமாக கொண்டாடி வருகின்றது.

### 2. ஓசோன், ஓசோன் படலம் அதன் நன்மைகள்

ஓசோன் எனப்படுவது வளி மண்டலத்தில் இயற்கையாகக் காணப்படும் ஒரு வாயு ஆகும். மிக மிக சிறிய அளவில் காணப்படும் ஓசோன் வாயு ஒட்சிசன் அணுக்கள் மூன்று சேர்வதால் உருவாகும் $O_3$ என்ற மூலக் கூற்றுச் சூத்திரத்தைக் கொண்ட வாயு மூலக்கூறு ஆகும். மிகவும் தாக்கு திறன் கூடியது. மென் நீல நிறம் கொண்டது. வளிமண்டலத்தில் இடி மின்னல் கடுமையாகவும் சூழல் ஈரலிப்பு அற்றும் இருக்கும் போது அதன் மணம் உணரப்படலாம்.

மிக மிக ஐதாக வளிமண்டலத்தில் காணப்படும் இந்த ஓசோன் வளிமண்டலத்தில் சமனாகப் பரவிக் காணப்படுவதில்லை. நிலத்துக்குகிட்ட 10%மான ஓசோன் வாயுக்கள் காணப்படும். வளிமண்டல ஓசோனின் 90 வீதமானவை மாறன் மண்டலத்தில் 30-40 Km உயரத்தில் காணப்படும்.

இந்த ஓசோன் செறிவைத்தான் விஞ்ஞானிகள் ஓசோன் படை என்று பெயரிட்டுள்ளார்கள். இந்த ஓசோன் படையினால் மனிதனுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் பல அத்தியாவசிய நன்மைகள் கிடைக்கின்றன.

சூரியனில் இருந்து வரும் கதிர்களில் மனிதனினதும் ஏனைய உயிரினங்களினதும் நலனைப் பாதிக்கக்கூடிய உயர்வூதாக் கதிர்களும் காணப்படுகின்றன. அதில் UV-B என்ற கதிர் பூமியை வந்தடையுமாயின் மனிதனில் தோற்புற்றுநோய், கண்ணில் கற்றாக்ட் போன்றன ஏற்படும் என நிரூபிக்கப்பட்டுள்ளன. எனவே தான் UV-B போன்ற கதிர்களை பூமிக்கு வராமல் ஓசோன் படை காப்பதனால் புவியை உயிர்வாழக்கூடிய கிரகமாக பேணுகின்றது.

### மொன்றியல் சாசனம்

இவ்வாறாக மனித வாழ்க்கைக்கு பாதுகாப்புக் கவசமாக இயற்கை தந்த ஓசோன் படையில் ஓட்டை விழத் தொடங்கியுள்ளது என்பது பற்றி 1970 களில் அவதானிக்கப்பட்டது.

இதனைப் பற்றிய முதலாவது விஞ்ஞான ஆய்வுக் கட்டுரை Nature என்ற உலகப்புகழ் பெற்ற விஞ்ஞான சஞ்சிகையில் 1974ஆம் ஆண்டு ஆதாரங்களுடன் வெளியிடப்பட்டது.

ஓசோன் படையின் முதலாவது துவாரம் (துவாரம் என்றாலும் அதன் உண்மையான எண்ணக்கரு என்னவெனில் அந்தக் குறிப்பிட்ட துவாரம் உள்ள இடத்தில் அதனைச் சூழ உள்ள இடத்தினை விட ஓசோனின் அடர்த்தி குறைவு என்பதாகும்) முதலில் ஆர்ட்டிக் பிரதேசத்தில் அவதானிக்கப்பட்டது. உடனே உஷாரடைந்த விஞ்ஞானிகள் வளிமண்டலத்தில் உள்ள ஓசோனைக் கண்காணிப்பதற்கான வேலைத்திட்டத்தினை முன்னெடுத்தனர்.

அதன் விளைவாக அந்தாட்டிக் பிரதேசம் மற்றும் புவியின் வேறும் பல இடங்களில் ஓசோன் துவாரத்தினை அடையாளம் கண்டார்கள்.

இந்த ஓசோன் துவாரம் புவியின் வெவ்வேறு பூகோள ரீதியிலான இடங்களுக்கு இடமும் வருடத்தின் வெவ்வேறு காலப்பகுதியிலும் வேறு படுவதனையும் விஞ்ஞானிகள் ஆவணப்படுத்தினார்கள். ஆனால் சாரம் சமாகப் பார்க்கும் போது ஓசோன் படையில்துவாரம்பெரிதாகிக்கொண்டு போவது உறுதிப்படுத்தப்பட்டது.

**இன்று சர்வதேச ஓசோன் தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**




இதற்கு மேலேயும் தாமதிக்க முடியாது என்று தீர்மானித்த விஞ்ஞானிகள் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக பல்வேறு செயற்றிட்டங்களை கலந்துரையாடினார்கள். அதன் பிரதான உபாயமாக உலகிலுள்ள நாடுகளின் தலைவர்களின் சம்மதமும் ஒத்துழைப்பும் இன்றி இதனை வெற்றி கொள்ள முடியாது என்ற உண்மையை உணர்ந்து 1987 ஆம் ஆண்டு கனடா நாட்டின் மொன்றியல் நகரில் உலகிலுள்ள நாட்டுத் தலைவர்களின் முன்னிலையில் நமது ஆய்வு பெறுபேறுகளையும் முன்முயற்சிகளையும் சமர்ப்பித்தார்.

நீண்டவாதப் பிரதிவாதங்க ளின் பின் 1987 ஆம் ஆண்டு செப்டெம்பர் 15 ஆம் திகதி உலகிலுள்ள 197 நாடுகளின் தலைவர்கள் கைச்சாத்திட்ட மொன்றியல் சாசனம் ஓசோன் படை அழிவினை சீர் செய்வதற் கான உபாயமாக உருவாக்கப்பட்டு ள்ளது.

### ஓசோன்படை பாதுகாப்பு தினம்

இவ்வாறு 1987 ஆம் ஆண்டின் செப்டெம்பர் மாதம் 16 ஆம் திகதி உருவாக்கப்பட் மொன்றியல் பிரகடனத்தினை ஆண்டு தோறும் நினைவுகூரும் முக மாகவும் ஓசோன் படை அழிவு உட்பட அனைத்து சுற்றுச் சூழல் பிரச்சினை களைப் பற்றியும் மக்களுக்கு விழிப்புணர்வு மற்றும் அறிவுரை வழங்குவதற்காகவும் ஒவ்வொரு வருடமும் செப்டெம்பர் 16ஆம் திகதி சர்வ தேச ஓசோன் பாதுகாப்பு தினம் கொண்டாடப்படு கின்றது. அந்த வகையில் இந்த வருடம் இன்று மொன்றியல் சாசனத்தில் கைச்சாத்திட்ட 197 நாடுகளிலும் (இலங்கை உட்பட) கொண்டாடப்படுகிறது.

இலங்கையில் தேசிய ஓசோன் அலகு இதற்கான செயற்பாட்டை ஒருங்கிணைக்கிறது. ஜனாதிபதி நேரடியாக இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார்.

ஒவ்வொரு வருடமும் சர்வதேச ஓசோன் படை தினத்துக்கு ஒரு மகுட வாக்கியமும் அதனை உத்வேகப் படுத்துவதற்கான ஒரு சுலோகமும் மொன்றியல் சாசன செயலகத்தினால் வெளிவிடப்படும். அந்த வகையில் இந்த வருடத்துக்குரிய தொனிப் பொருளாக

"ஒன்றிணைந்து 30 வருடங்களாக ஓசோன் படைக்கு சிகிச்சை கொடுத்தோம்" அமைந்துள்ளது.

அதன் சுலோகமாக

"ஓசோன்-உங்களுக்கும் உயர் ஊதாக் கதிர்களுக்குமிடையில் அது ஒன்றே உண்டு" உள்ளது.

### முடிவுரை

இன்று பூமி பாரிய சுற்றுச் சூழல் பாதிப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அதுவும் அநேகமான சுற்றுச்சூழல் பாதிப்புகளுக்கு மனித செயற்பாடுகள் காரணம் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆனால் அதனை சிலர் இன்றும் உணராமல் பணத்தாசை, நுகர் வு ஆசை காரணமாக தொடர்ந்தும் சுற்றுச்சூழலை அழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது கசப்பான உண்மை. ஆனால் பெருமளவான மக்களிடம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்ற கரிசனையும் பல்வேறு சுற்றுச்சூழல் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பது எமக்கு ஆறுதலான ஒரு செய்தி. இந்தப் பின்னணியில் மொன்றியல் சாசனத்தின் அமுலாக்கத்தின் ஊடாக மனித இனம் முன்னர் தெரிந்தோ தெரியாமலோ செய்த சுற்றுச் சூழல் பாதிப்புச் செயற்பாடுகளிலும் அவற்றின் பாதிப்புக்களிலும் இருந்து பூமியை மீட்டெடுக்கலாம் என்ற யதார்த்தமான நம்பிக்கை எமக்கு கிடைத்துள்ளது.

அதற்கு வேண்டியது சுற்றுச் சூழல் பிரச்சினைகளை தீர்க்க வேண்டிய வெற்றிகரமான உபாயங்களும் அவற்றின் அமுல்படுத்தலும். அத ற்கு சிறந்த மனப்பாங்கு சுற்றுச் சூழல் சம்பந்தமான அறிவு பூர்வமா ன அணுகு முறை மற்றும் சிறந்த அர்ப்பணிப்புள்ள சூழல் நேயமுனை நாட்டுத் தலைவர்கள்.

இவை அனைத்தையும் நாம் சிறப்பாக கொண்டிருப்போமானால் எம் பாட்டன், முப்பட்டான் எமக்கு தந்த நாம் வாழக் கூடியதாக இருக்கின்ற இந்த பூமியை எமது பேரன், கொள்ளுப்பேரன் எந்த ஒரு சிக்கலும் இல்லாமலும் இல்லாமல் வாழக்கூடிய நிலையில் நாங்கள் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய தார்மீகக் கடமையைக் செய்தவர்கள் ஆவோம். இல்லாவிடின் அந்தத் தார்மீகக் கடமையைச் செய்யத் தவறியமைக்காக எதிர்காலச் சந்ததியினால் எம் மீது குற்றஞ்சாட்டப்படுவோம்.

**கணபதிப்பிள்ளை அசோகன்**
உயிரியல் ஆசிரியர்
அச்சுவேலி மத்திய கல்லூரி.

---

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கருஞ்செம்பை

Botanical Name: Sesbania sesban
Family: Papillionaceae
Sinh: wel- murunga

சிறிய மர வகையைச் சேர்ந்தது. 2-3 மீற்றர் உயரம் வளரக் கூடியது. பல கிளைகளைக் கொண்ட மரமாகும். ஒன்றுவிட்ட கூட்டிலை அமைப்பைக் கொண்டது. சிற்றிலைகள் 10-15 சோடிகள் காணப்படும். எதிரான குறுகிய காம்புகளையுடையது. 1.2-1.8 செ.மீ நீளமுள். கோளவடிவானது. ஒழுங்கற்ற பூக்கள். இருபாலானவை றோஸ் நிறப்பூக்களைக்கொண்டது. அவரை வடிவ பழங்கள். 20-22.5 செ.மீ. நீளமானவை. 30 அல்லது அதற்கு மேற்பட்ட விதைகள் காணப்படும். சாம்பல் நிறமானவை. பூக்களை கார்த்திகை, மார்கழி, ஆனி மாதங்களில் காணலாம்.

வறண்ட பிரதேசங்களில் இதன் பரம்பல் அதிகம்

இதன் இலைகள், பூக்கள், பட்டை விதைகள் அனைத்தும் மருத்துவ குணமிக்கவை.

இதன் இலைகளை பட்டுப் போல அரைத்து சீழ்க்கட்டிகளை பழுக்கப் பண்ணக் கட்டினால் சீழ்க் கட்டிகள் பழுத்து உடையும்.

கருஞ்செம்பை இலையை ஆய்ந்து நரம்புகளை நீக்கி அம்மியில் வைத்து மைபோல அரைத்து கோழி முட்டையின் வெள்ளைக் கருவை மட்டும் சேர்த்து குழப்பிக் காலையிலும் மாலையிலும் கட்டியின் மேல் கனமாகப் பற்றுப்போட்டு காலையில் வெந்நீரில் கழுவிச் சுத்தம் செய்து மறுபடி இதே மருந்தைப் பற்றுப்போடவேண்டும். இந்தவிதமாக போட்டு வந்தால் அரையாப்புக் கட்டி பழுத்து உடையும். இரத்தம், சீழ் வெளியே வந்த பின்பும் இதே மருந்தையே போட்டு வந்தால் புண் ஆறிவிடும்.

கருஞ்செம்பை இலைகளை மை போலஅரைத்துகட்டியின்மேல்கனமாகப்பூசி வந்தால் கட்டி அமுங்கிவிடும் அல்லது பழுத்து உடையும். சிலவகைக் கட்டிகள் பழுத்து உடையாது. கட்டியாகக் கிளம்பி அப்படியே நின்றுவிடும். இப்படிப்பட்ட கட்டிகளை அமுங்கச்செய்ய கருஞ்செம்பை இலைகளை சிற்றாமணக்கு எண்ணெயில் வதக்கி, கட்டியின் மேல் வைத்துக் கட்டி வந்தால் மூன்றே நாட்களில் குணமாகும்.

அடிபட்ட காயம் ஆற கருஞ்செம்பை இலைகளை மைபோல அரைத்து காயத்தை சுத்தம் செய்து விட்டு காயத்தின் மேல் கனமாக வைத்துக் கட்டிவிட வேண்டும். மறு நாள் கட்டை அவிழ்த்து மருந்தை எடுத்துப் பார்க்க வேண்டும். மருந்து தனியே வந்து விட்டால் அதை எடுத்துவிட்டு புண்ணைச் சுத்தம் செய்து மறுபடி இலையை அரைத்துக் கட்ட வேண்டும். எடுக்க வரவில்லையானால் அப்படியே விட்டுவிடவேண்டும். புண் ஆறிய பின் இலை தனியே வந்துவிடும். அதுவரை ஈரம்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

பெண்களுக்கு மாதவிலக்கு ஒழுங்காக வெளியேறாது வயிற்று வலியும் சேர்ந்திருந்தால் கருஞ்செம்பை இலைகளை இடித்து பிழிந்த சாற்றை, துணியில் வடிகட்டி 8 தேக்கரண்டி அளவு எடுத்து காலை வேளையில், வெறும் வயிற்றில் கொடுக்க வேண்டும். இவ்வாறு தொடர்ந்து 3 நாட்கள் கொடுத்துவர மாதவிடாய் ஒழுங்காக வெளியேறி வயிற்றுவலியும் குறையும்.

சிரங்கிற்கு கருஞ்செம்பை இலைகளை மைபோல அரைத்து காலையில் சிரங்கின் மேல் கனமா கத் தடவி மாலை வரை வைத்திருந்து மாலையில் சிகைக்காய், மஞ் சள் வைத்து அரைத்த கூட்டைப்போட்டு சுத்தம் செய்து சாம்பல் ஒத்தடம் கொடுத்து தேங்காய் எண்ணெய் தடவிவர சிரங்கு குணமாகும்.

கருஞ்செம்மைமரத்தின்பட்டையை சருகுபோல் காயவைத்து இடித்து அரித்து ஒரு வாயகன்ற சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு அதில் 2 கிராம் அளவு எடுத்து காலை மாலை 200 மில்லி காய்ச்சிய பசும்பாலில் போட்டுக்கலக்கி 40 நாட்கள் எடுத்து வர இரத்தம் சுத்தமாகி உடலில் புதிய இரத்தம் உருவாகும்.

தேள், பூரான், குளவி போன்ற விஷங்கள்தீண்டினால்கருஞ்செம்பை விதை, வேர், இலைகளை சம அளவாக எடுத்து காயவைத்து இடித்து தூள் செய்து அரைத்து 2 கிராம் அளவு வெண்ணெயில் கலந்து ஒச்சுக்குறி குணங்கள் குறையும் வரை கொடுக்கலாம்.

கருஞ்செம்பை பூக்களை நல்லெண்ணெயிலிட்டுக் காய்ச்சி தலை முழுகிவர தலைப்பாரம், தலைக் குத்து, மூக்குநீர் பாய்தல் நீங்கும். இதன் இலைகளை உப்பு, குப்பை மேனி சேர்த்து அரைத்து சொறி, சிரங்கிற்கு தேய்த்து முழுகலாம்.

வயிற்றிலுள்ளபூச்சிகளைவெளியேற்ற 5 மில்லி தொடக்கம் 15 மில்லி கருஞ்செம்பை இலைச்சாற்றை இரவில் எடுக்கலாம்.

செம்பையில் 3 வகைகள் உண்டு. மரம், கிளைகள், இலைகள் யாவும் ஒரே மாதிரியாக இருந்தாலும் பூவில் மட்டும் 3 வகையுண்டு. றோஸ்வைத்த சிவப்பு நிறம், மஞ்சள், கறுப்பு கலந்த சாம்பல் நிறப்பூக்களாகும். கருஞ்செம்பை இலைச் சாற்றிலிருந்து தயாரிக்கப்படும் கருஞ்செம்பைத் தைலமானது தலைப் பாரம், பீனிசத்திற்கு சிறந்த மூடித் தைலமாகும்.

**டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்**
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழருக்கும் சர்வதேசத்திற்கும் ஏற்பட்டிருக்கும்

# சந்தேகங்களை தீர்க்க வேண்டியது அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பு!

## ஜே.வி.பியின் தலைவர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**இறுதி யுத்தத்தில் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றனவா என தமிழர் தரப்பினருக்கும் சர்வ தேச தரப்புக்கும் ஏற்பட்டிருக்கும் சந்தேகங்களை தீர்க்கவேண்டியது அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாகும். குற்றங்கள் இடம்பெற்றிருப்பின் நியாயம் நிலைநாட்டப்பட வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

எனினும் உள்ளக விசாரணை பொறிமுறைகளை பலப்படுத்தி அதனூடாக பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை மீதான அறிக்கை கடுமையானதாக அமையும் என செய்திகள் வெளிவந்துள்ள நிலையில் இலங்கையின் செயற்பாடுகள் எவ்வாறானதாக அமையவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாட்டை வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் போது பொதுமக்களின் மனித உரிமைகளை மீறும் செயற்பாடுகள் எவையும் நடந்துள்ளனவா என்பது தொடர்பில் பாரிய சந்தேகக் கேள்விகள் அனைத்து தரப்பினாலும் எழுப்பப்பட்டுள்ளன. இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் சார்பில் கேள்வி எழுப்பும் வேளையில் சர்வதேச அமைப்புக்களும் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் இலங்கை மீது அழுத்தங்களை செலுத்தி வருகின்றன. எனினும் இந்த கேள்விகளை சர்வதேச மட்டத்தில் கொண்டு செல்வதனால் இலங்கையின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது. மாறாக, இலங்கையின் பிரச்சினைகளை உள்நாட்டுப் பொறிமுறைகளின் மூலமாகவே தீர்க்க வேண்டும்.

இன்று சர்வதேச அளவில் செயற்படும் ஒருசில அமைப்புக்கள் தமது உடன்படிக்கைகளுக்கு அமைய இலங்கையில் மீண்டும் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிக்கின்றன. அவற்றை உள்நாட்டில் கட்டுப்படுத்த முடிந்தாலும் சர்வதேச அளவில் இவர்களது செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியாது. எனினும் உள்நாட்டில் நல்லிணக்கத்தையும், சம உரிமைகளையும் மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதன் மூலமாக இலங்கையின் பிரச்சினைகளுக்கு தீர்வை எட்ட முடியும்.

அதேபோல் மக்களிடையே ஒற்றுமையையும் ஏற்படுத்த முடியும். இப்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் இலங்கை மீது முன்வைக்கப்படவுள்ள விசாரணை அறிக்கை எவ்வாறானது என்பது தொடர்பில் சரியான தகவல்கள் வெளிவரவில்லை. எனினும் இலங்கை மீது செலுத்தப்படும் அழுத்தங்களை அரசாங்கம் சமாளிக்கும் வகையில் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். தமிழர் தரப்பினருக்கும் சர்வதேச தரப்புக்கும் ஏற்பட்டிருக்கும் சந்தேகங்களை தீர்க்கவேண்டியது அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாகும்.

அதேபோல் இலங்கைக்கு எதிராக எழும் சர்வதேச சிக்கல் நிலைமைகளை சமாளித்து நாட்டையும் இராணுவத்தையும் காப்பாற்ற வேண்டியதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும். அதேபோல் குற்றச்சாட்டுக்கள் உண்மையாயின் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயம் கிடைக்கவேண்டும்.

எனினும் இவை அனைத்தையும் உள்நாட்டு செயற்பாடுகள் மூலமாக கையாள வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். உள்ளக விசாரணை பொறிமுறைகளை பலப்படுத்தி அதனூடாக பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும். அரசாங்கம் அவற்றை சரிவர முன்னெடுக்க வேண்டும் என தெரிவித்தார். (இ-7)

## இலங்கைப் படகு தமிழ்நாட்டில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கைவிடப்பட்ட நிலையில், சந்தேகத்திற்கிடமான இலங்கை கண்ணாடியிழை படகு ஒன்று தமிழ்நாட்டில் வேதாரண்யம் கடற்கரைக்கு அருகே நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.



இச் சந்தேகத்திற்குரிய படகானது, மணியன்தீவில் மிகுந்த பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது.

எட்டு ஹெச்பியமஹா இயந்திரம் பொருத்தப்பட்ட இப்படகானது, பதிவு எண் இல்லாமல் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மீன் வலை, குடிநீர் போத்தல் மற்றும் படகின் உள்ளே இலங்கையின் பெயர் பொறிக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில், இப்படகு இலங்கையினை சேர்ந்ததாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேதாரண்யம் கடலோர பாதுகாப்பு குழு மற்றும் தமிழ்நாடு பொலிஸ் கியூ பிரிவு ஆகியவை இணைந்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 9 உணவுப் பொருட்களின் விலை அதிகரித்ததாக போலிப்பிரசாரம்

(கொழும்பு)

உருளைக்கிழங்கு, சீனி தவிர வேறு பொருட்களின் வரிகள் அதிகரிக்கப்படவில்லை. ஒன்பது வகை உணவுப் பொருட்களில் விசேட வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியை நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க ஆணித்தரமாக மறுத்துள்ளார்.

உள்ளூர் உற்பத்தியாளர்களின் வசதி கருதி சீனி மற்றும் உருளைக்கிழங்கின் இறக்குமதி வரி மாத்திரமே அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் 9 பொருட்களின் இறக்குமதி வரிகள் அதிகரிக்கப்பட்டிருப்பதாக வெளியாகியுள்ள செய்தியல் எவ்வித உண்மையும் இல்லை என்றும் அமைச்சர் ஆணித்தரமாக கூறினார்.

பருப்பு, வெங்காயம், கௌபி, குரக்கன், மாஜரின் உள்ளிட்ட 9 வகை உணவுகளின் இறக்குமதி வரிகள் அதிகரிக்கப்பட்டிருப்பதாக வெளியாகியுள்ள செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் குரக்கன், கௌபி, கொரியக் கடலை, மாஜரின் உள்ளிட்ட உணவுப் பொருட்களின் கேள்விகளைப் பொறுத்தே இவற்றுக்கான மேலதிக வரி தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இப்போது இந்த நடைமுறை கைவிடப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கருணாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

## மகிந்தவின் இணையத்தை மொபிடல் முடக்கவில்லை

மகிந்த ராஜபக்ஷவின் இணையத்தளத்தை மொபிடல் சேவை வழங்குநர் முடக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை முதல் மகிந்தவின் இணையத்தளம் மொபிடல் சேவை வழங்குநரால் முடக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் மொபிடல் சேவை வழங்குநரின் உரிமையாண்மை நிறுவனமான இலங்கை அரசாங்கத்தின் ரெலிகொம் இதனை மறுத்துள்ளது. ரெலிகொம் நிறுவனத்தின் தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர் குமாரசிங்க சிறிசேன கடமையாற்றும் நிலையிலேயே இந்தக் குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் டிஜிட்டல் துறைக்கான பிரதியமைச்சர் ஹரின் பெர்னாண்டோவுக்கு இது தொடர்பாக நேற்று முன்தினம் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### கடவுள் நிலையின் கடைசிப்படி

***சன்*** தொலைக்காட்சியையும் ***ஜெயா*** தொலைக்காட்சியையும் ஒருவர் மாறிமாறிப் பார்த்தால் என்ன கதி அடைவார் என்பது உங்கள் யாவருக்குமே தெரியும். இரத்தக் கொதிப்பு வரும். பைத்தியம் பிடிக்கும். அல்லது எது உண்மை என்று குழம்பிக்குழம்பி மனம் சலித்துச் செயல் முறிந்து போகும். ஆனால் சன்னையும் ஜெயாவையும் மாறி மாறி ஒளிபரப்பும் நம் வீட்டுத் தொலைக்காட்சி பெட்டிக்கு ஏதாவது பாதிப்பு வருமா? வராது... வராது...வரவே வராது.

இரண்டு தொலைக்காட்சி சனல் ஒளிபரப்பும் ஒளி அலைகளையும் ஒழுங்காக மாறி மாறி வாங்கி ஒளிபரப்பிக் கொண்டே இருக்கும். இந்தத் தொலைக்காட்சிப் பெட்டியின் நிலையில் தான் உண்மை ஞானிகள், தெய்வீகமானவர்கள் இருப்பார்கள். உலகின் எதிர் எதிரான வேறு இயக்க நிலைகளால் இம்மியும் பாதிக்கப்படாத ஆகாயம் போலவே அவர்கள் இருக்கிறார்கள்.

ஏதும் அற்றதாய்– இல்லாததாய் இருக்கும் வஸ்துவே ஆகாயம். அதனால் தான் அதனுள் எல்லாமே இருக்கிறது. இல்லாமையே இருப்புக்கான ஆதாரம், கொள் இடம். இந்த ஆகாயம் போலவே இருந்தும் இல்லாதிருக்கும் தெளிநிலையே தெய்வ நிலை. அதனால்தான் ***வானாகி*** என்று இறைவனை விளித்தார் மணிவாசகர். நமது உடம்பில் ஐந்து பூதங்கள் இருந்தாலும் சில வேளை நம்மை மண்ணாக உணருகிறோம். நீராக ஆகிறோம். நெருப்பாக, காற்றாக நம்மை அவ்வப்போது உணருகிறோம். இதுவரை மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுக்தி, ஆக்ஞை என்கிற ஆறு நிலையில் இருக்கிறோம் என்று பொருள். ஆகாயமாக நம்மை உணரும் ஏழாம் நிலையே துரியம் மற்றும் துரியாதீதம். நமது மூளைக்கும் கபாலத்திற்கும் (மண்டை ஓடு) இடையே உள்ள காலியிடம், பிறகு தலைக்கு மேலே உள்ள காலியிடம் (ஆகாசம்) என்று நம்மை ஆகாசமாக உணரும்போது பூரண தெய்வீகம் மலருகிறது.

கரூருக்குப் பத்து கிலோ தொலைவில் உள்ள நெரூர் என்கிற காவிரி ஆற்றங்கரையில் ஜீவ சமாதி ஆகியுள்ள சதாசிவ பிரம்மேந்திரர் இப்படி மனிதன் தெய்வமாகும் வழிமுறையை விளக்கிய மகான். உடம்பு இருக்கும்போதே உடம்பை மறந்து பிரம்மமாக, அவதூறாக (நிர்வாணம்) விளங்கிய அருளாளர்.

அவர் ஒருமுறை அரச வீதியில் நிர்வாணமாக ஆடையின்றி, எந்த நினைவுமின்றிப் போகிறார். அரசர் யானைமேல் ஊர்வலமாக வந்து கொண்டிருக்கிறார். சதாசிவத்தை அரசர் ஆடையின்றிப் பார்த்தால் அருவருப்படைவாரே என்று காவலாளி வேறிடத்திற்கு விரட்டினான். அவருக்கு ஏதும் புரியவில்லை. ஏன் என்னை விரட்டுகிறாய் என்ற அர்த்தத்தில் அவனைப் பார்த்திருக்கிறார்.

***ராஜா யானை மேல் ஊர்வலம் வருகிறார்*** என்றான் காவலாளி. ***எது ராஜா? எது யானை?*** என்றார் சதாசிவ பிரம்மேந்திரர். தொலைவில் யானைமேல் உட்கார்ந்திருந்த ராஜாவைக்காட்டி ***மேலே இருப்பது ராஜா. கீழே இருப்பது யானை என்றான் சேவகன். சதாசிரா பிரம்மேந்திரரோ எது மேல்? எது கீழ்?*** என்றார். ஆத்திரமடைந்த சேவகன் பிரம்மேந்திரரைக் கீழே தள்ளி அவர் மேல் உட்கார்ந்து கொண்டு ***நான் மேலே இருக்கிறேன். நீ கீழே இருக்கிறாய்*** என்று எரிச்சலுடன் சொல்லி புரிகிறதா? என்றான். ***எது நான்...எது நீ*** என்றார் சதாசிவம். உண்மை. நான் நீ என்கிற பேதம் கடந்த பெருநிலையே பிரம்மநிலை. அந்தப் பரப் பிரம்மமாகவே இருப்பவர்கள் உடம்பிருந்தாலும் இறைவனாகவே வணங்கத் தக்கவர்கள்.

இந்தத் தன்னுணர்வு கழன்று மெய்யுணர்வு நிரம்பிய நிலை ஒருவருக்கு இப்படித்தான் நிகழும் என்று எந்த ஒரு வழி முறையையும் சட்டமாக்க முடியாது. எங்கு வேண்டுமானாலும் நிகழும். எப்படி வேண்டுமானாலும் நிகழும். எப்போது வேண்டுமானாலும் நிகழும். உடம்பு என்கிற சிற்றெல்லையில் இருந்து நான் என்கிற பிடிப்பு கழன்று கடவுள் என்கிற பேரெல்லையில் பொருந்தி விடும். புத்தருக்கு இது போதி மரத்தடியிலும் நம்மாழ்வாருக்குப் புளிய மரத்தடியிலும் திருமூலருக்கு அரச மரத்தடியிலும் நிகழ்ந்தது. மோயீஸனுக்கு மலைமுகட்டிலும் இயேசுவுக்குச் சிலுவை மரத்திலும் இது வழங்கப்பட்டது. முகமது நபி அவர்களுக்கும் இதுவே நிகழ்ந்தது. அல்லாஹ் அவருள் பிரவேசித்த கணத்தில் தான் திருக்குர்ஆன் ஆகிய தெய்வமறை அவர்வழி உலகிற்கு இறங்கியது. இறைவனில் பேதமில்லை. ஆனால் மனிதனில் இருந்த பேதம் பல்வேறு மதங்களாக பேதப்பட்டுவிட்டது. இந்த மதத்தின் வழியாகத்தான் இறைநிலை எய்த முடியும் என்கிற ஒரு வழிப்பாதையெல்லாம் இந்த இறை நிலைக்கு இல்லை... அப்படி எந்த மதம் சொன்னாலும் அது மூடத்தனம்.

இப்போது நீ யார்? விலங்கா? மனிதனா? தெய்வமா? கடவுளா? வினா பிறந்து விட்டால் விடையும் பிறந்துவிடும். விடயம் இவ்வளவுதான். இனி கடவுள் ஆவதும் ஆகாமல் போவதும் உங்கள் இஷ்டம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமா வரலாறு

08

## தமிழ்நாட்டின் முதல் பெண் டைரக்டர் டி.பி. ராஜலட்சுமி

...டி.பி. ராஜலட்சுமியின் திறமையை அறிந்த கன்னயா, ராஜலட்சுமியை தன் கம்பெனி நாடகங்களில் நடிக்க அழைத்தார்.

அந்த அழைப்பை ஏற்று, கன்னையா கம்பெனி நாடகங்களில் கிட்டப்பாவுக்கு ஜோடியாக டி.பி. ராஜலட்சுமி நடித்தார்.

பிறகு ஸ்பெஷல் நாடகங்களில் ராஜலட்சுமி நடித்தார். அந்தக் கால கட்டத்தில் எம்.கே. தியாகராஜ பாகவதர் நாடக உலகில் வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தார். அவருடைய சில நாடகங்களில் ராஜலட்சுமி நடித்தார்.

### ஊமைப்படம்

தமிழ் நாட்டில் ஊமைப்படங்கள் தயாரிக்கப்பட்டபோது அவற்றில் நடிக்க ராஜலட்சுமிக்கு அழைப்பு வந்தது.

கோவலன் உஷா சுந்தரி ராஜேஸ்வரி முதலிய ஊமைப்படங்களில் நடித்தார். அந்தப் படங்கள் வெற்றிகரமாக ஓடின.

நாடகங்களிலும் ஊமைப்படங்களிலும் புகழ்பெற்று விளங்கியதால் தமிழின முதல் பேசும் படமான காளிதாஸ் படத்தில் கதாநாயகியாக நடிக்கும் வாய்ப்பு பெற்றார்.

இந்தப்படம் வெற்றி பெற்றதால் வள்ளித்திருமணம் படத்தில் நடித்தார். கல்கத்தாவில் தயாரான இந்தப்படமும் சூப்பர் ஹிட் படமாக அமைந்தது.

வெற்றி மேல் வெற்றி பெற்ற ராஜலட்சுமி, கல்கத்தாவிலேயே தங்கி பல படங்களில் நடித்தார். சாவித்திரி (1933), திரவுபடி வஸ்திராபரணம் (1934), குலேபகாவலி (1935) ஆகிய அனைத்து படங்களும் வெற்றி பெற்றன.

இப்படங்களில் ராஜலட்சுமியுடன் கதாநாயகனாக நடித்தவர் அக்காலத்தில் புகழ்பெற்ற நாடக நடிகராக விளங்கிய வி.ஏ. செல்லப்பா.

மறுமணம் வள்ளித் திருமணத்தில் நாரதராக நடித்தவர் டி.வி. சுந்தரம். இவர் சுதந்திரப் போராட்டத்தில் பங்குகொண்ட காங்கிரஸ்காரர். அவரை டி.பி. ராஜலட்சுமி மணந்துகொண்டார்.

தமிழ் நாட்டு நடிகைகளில் முதன் முதலாக சிகரம் தொட்டவர் டி.பி.ராஜலட்சுமிதான். ரசிகர்களும், பத்திரிகையாளர்களும் சேர்ந்து அவருக்குப் பாராட்டு விடா நடத்தி சினிமா ராணி என்ற பட்டத்தைக் கொடுத்தார்கள்.

### டைரக்டர்

புகழும் பண வசதியும் ஒன்று சேர, டி.பி. ராஜலட்சுமி ராஜம் தியேட்டர்ஸ் என்ற சொந்தப் படக்கம்பெனியைத் தொடங்கி, மிஸ் கமலா என்ற படத்தைத் தயாரித்தார். இந்தப் படத்தின் கதையை எழுதியதுடன், டைரக்ஷனையும் அவரே கவனித்தார். எனவே, தென்னிந்தியாவின் முதல் பெண் டைரக்டர் ராஜலட்சுமிதான்.



இதன்பிறகு மதுரை வீரன் என்ற படத்தைத் தயாரித்தார். வர்த்தக ரீதியில் இது பெரிய வெற்றிப்படம். இதில் ராஜலட்சுமிக்கு ஜோடியாக நடித்தவர் வி.ஏ. செல்லப்பா.

இதே காலகட்டத்தில், அமெரிக்காவில் இருந்து தமிழ் நாட்டுக்கு வந்து சிறந்த டைரக்டராக விளங்கிய எல்லிஸ் ஆர்.டங்கனின் டைரக்ஷனில் உருவான சீமந்தினி என்ற படத்திலும் ராஜலட்சுமி நடித்தார்.



ஏ.வி.மெய்யப்ப செட்டியார் தயாரித்த "நந்தகுமார்" படத்தில் பாலகிருஷ்ணனாக டி.ஆர்.மகாலிங்கமும், யசோதாவாக டி.பி.ராஜலட்சுமியும்

1938 இல் நந்தகுமார் என்ற படத்தை ஏ.வி. மெய்யப்ப செட்டியார் தயாரித்தார். இதில் டி.ஆர். மகாலிங்கம் பாலகிருஷ்ணனாகவும் ராஜலட்சுமி யசோதையாகவும் நடித்தனர்.

மகாத்மா காந்தியிடமும் காங்கிரஸ் இயக்கத்திடமும் மிகுந்த பக்தி கொண்டவர் ராஜலட்சுமி. எனவே, சுதந்திரப் போராட்டத்தை மையமாக வைத்து, இந்தியத் தாய் என்ற படத்தை உருவாக்கத்தொடங்கினார்.

ஆனால் சென்சார் கெடுபிடியினால் அவர் முயற்சி வெற்றிபெறவில்லை. மிகுந்த பொருள் நஷ்டமும் ஏற்பட்டது. ஆனால், இதை ராஜலட்சுமி பொருட்படுத்தவில்லை. விடுதலைப்போராட்டத்துக்கு நான் அளித்த சிறு காணிக்கை என்று கூறிவிட்டார்.

பிறகு படங்களில் நடிப்பதை ராஜலட்சுமி குறைத்துக்கொண்டார்.

ஜீவ ஜோதி, இதய கீதம் ஆகிய வேடங்களில் தாயார் வேடத்தில் நடித்தார்.

(ராஜலட்சுமி சென்னை கீழ்ப்பாக்கத்தில் இப்போது ஈகா திரையரங்கு இருக்கும் இடத்துக்கு அருகே பெரிய பங்களாவில் வசதியுடன் வாழ்ந்தார். கடைசி காலம் வரை கௌரவத்துடனும், வசதிகளுடனும் வாழ்ந்து மறைந்தார்).

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 279

## அஹங்காரத்தை விடுதல்

உண்மையில் வானம் முழுவதையும் உங்களால் பார்க்க முடியும்.

ஆனால், நீங்கள் உங்கள் அஹங்காரம் எவ்வளவு அனுமதிக்கிறதோ அவ்வளவு மட்டுமே, உங்கள் ஜன்னல் வழியாகப் பார்க்கிறீர்கள்.

அந்தச் சட்டங்களுக்குள் தெரிவதே உண்மையான வானம் என்றும் எண்ணுகிறீர்கள்.

இதுபோன்ற எல்லா விளையாட்டுக்களுமே அஹங்காரத்தின் விளையாட்டைத் தவிர வேறல்ல.

இதை அறிந்து கொள்வதே, இதை விட்டு வெளியே வருவதற்கான முதல் படியாகும்.

உங்களுக்குள் இருக்கும் எந்தப் பூட்டையும் திறப்பதற்கு விழிப்புணர்வே பிரதான திறவுகோலாகும்.

அதனால்தான் நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன்- விழிப்புணர்வைக் கொண்டு வாருங்கள் என்று.

ஸ்வாமிஜி, உங்களுக்கு எங்கள் மீதுள்ள அக்கறையை எவ்வாறு விபரிப்பீர்கள்?

எனக்கு உங்கள் மீதுள்ள ஒரே அகக்றை நீங்கள் மலர உதவுவதுதான்.

அதுவே நான் உங்களுக்குச் செய்யக்கூடிய, நீங்கள் எனக்குச் செய்யக் கூடிய மிகச் சிறந்த விடயமாகும்!

மக்கள் தங்களுடைய இயற்கையான ஆனந்தத்தையும், உள்ளுறை சக்தியையும் உணர வேண்டும் என்பதே என்னுடைய விருப்பம்.



இப்பொழுது மனிதன், தன்னை ஒரு ஆன்மீக அனுபவத்திற்காகக் காத்திருக்கும் மனிதப் பிறவியாக எண்ணிக் கொண்டிருக்கிறான்.

அவர் மனித அனுபவத்திற்காகக் காத்திருக்கும் ஆன்மீகப் பிறவியென்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

நான் அவனுக்கு அதைக் கற்றுத் தரவே செயற்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

அவன் அதைக் கற்றுக் கொள்ள ஒரே வழி, அவனை ஒரு ஆன்மீகப் பிறவி என்று அறியவிடாமல், ஒரு மனிதப் பிறவி என்று எண்ண வைக்கும் அஹங்காரத்தின் வடிவங்களை அறிந்து கொள்வதே.

மனிதன் பிரார்த்தனை செய்வதில் இருந்து ஆகுதலை நோக்கி நகரும்பொழுது அவன் திறவுகோலைக் கண்டுபிடித்து விட்டான் என்று அர்த்தம்.

சொல்லுங்கள்...

ஸ்வாமிஜி, தியானம் செய்யும் பொழுது எவ்வாறு உருமாற்றம் நிகழ்கிறது? அதில் குருவின் பங்கு பற்றி இன்னும் கொஞ்சம் சொல்ல முடியுமா....

ஒருவன் தியானம் செய்யும் பொழுது அவனுடைய கீழ் நிலை உணர்வுகளான கோபம்.

இச்சை, பொறாமை, அதிக பற்று முதலியவை உயர்நிலைச் சக்திகளாக உருமாறிவிடுகிறது.

இது அவனை உணர்வு நிலையிலும் விழிப்புணர்விலும் உயர் நிலைப் பிரதேசங்களை நோக்கி உந்தித் தள்ளுகிறது.

பிறகு அவன் முன்பிருந்ததைப் போன்று அமைதியற்றிருக்க மாட்டான்.

சக்தி உருமாற்றம் தியானத்தின் மூலமாக மட்டுமே நிகழ முடியும்.

இந்த உருமாற்றம் ஒவ்வொரு தனி மனிதனிடமும் நிகழும் பொழுது சமூகம் முழுவதும் உருமாற்றம் அடையும் மூர்க்கத்தனங்கள் குறைந்து பெருமளவில் இணக்கம் ஏற்படும்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நீதி விசாரணை நடத்த இந்தியா வலியுறுத்த வேண்டும்

## அன்புமணி கோரிக்கை

**இலங்கை மீது சர்வதேச நீதி விசாரணை நடத்த ரணில் விக்கிரமசிங்கவிடம் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்த வேண்டும் என்று, பா.ம.க. இளைஞர் அணி தலைவரும், தருமபுரி பாராளுமன்ற உறுப்பினருமான அன்புமணி ராமதாஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.**

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களின் குடும்பங்களுக்கு நீதி பெற்றுத்தரும் கடமையும், பொறுப்பும் மற்ற நாடுகளை விட இந்தியாவுக்குத் தான் அதிகமாக உள்ளது.

எனவே, இலங்கைப்போர்க் குற்றங்கள் தொடர்பாக ஐ.நா. மனிதஉரிமைஆணையகவிசாரணையில் தெரியவரும் உண்மைகள் குறித்து சர்வதேச நீதிமன்ற விசாரணைக்கு ஒப்புக் கொள்ளும்படி இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்த வேண்டும்.

மேலும், இதற்கான தீர்மானத்தை மனித உரிமைகள் பேரவையில் இந்தியாவே கொண்டு வர வேண்டும்.

அதுமட்டுமின்றி, இந்தியா-இலங்கை இடையிலான வங்கக்கடல் பகுதியில் இருநாட்டு மீனவர்களும் எந்த பிரச்சினையும் இன்றி மீன்பிடிக்கும் வகையில் ஒரு திட்டத்தை வகுக்க வேண்டும் என இலங்கைப் பிரதமரிடம் இந்திய அரசு அறிவுறுத்த வேண்டும் என்று தனது அறிக்கையில் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# முன்னாள் அமைச்சர் கெஹலியவுக்கு ஜனாதிபதி ஆணைக்குழு அழைப்பு!

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, முன்னாள் நிதி அமைச்சின் செயலாளர் பீ.பீ.ஜயசுந்தர மற்றும் முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஆகியோருக்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன்று வாக்குமூலம் ஒன்று பெற்றுக்கொள்வதற்காக அவர்களை இவ்வாறு ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி சுயாதீன தொலைக்காட்சி தலைவரான ரொஸ்மன்ட் சேனாரத்னவை அப்பதவியில் இருந்து காரணமின்றி நீக்கியதோடு இப்பதவிக்காக கைத்தொழில் அமைச்சின் முன்னாள் செயலாளர் அநுர ஸ்ரீவர்தன நியமிக்கப்பட்டார்.

அத்துடன் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதியின் பிரசார விளம்பரங்களை இலவசமாக விளம்பரப்படுத்தி நிறுவனத்திற்கு 115 மில்லியன் நஷ்டத்தை ஏற்படுத்தியமை, ஆகிய சம்பவங்கள் தொடர்பில் இம்மூவரிடமும் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது. (இ-7)

# 24 ஆம் திகதி ஹஜ் பெருநாள்

புனித ஹஜ் பெருநாள் எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை கொண்டாடப்படும் என கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

துல்ஹஜ் மாத தலைப் பிறையை தீர்மானிப்பதற்கான மாநாடு நேற்று முன்தினம் மாலை மஹ்ரிப் தொழுகையைத் தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் கூடியது.

இம்மாநாட்டில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உறுப்பினர்கள, கொழும்பு மேமன் சங்க உறுப்பினர்கள் மற்றும் உலமாக்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.


இதன்போது நாட்டின் பல பிரதேசங்களிலும் துல்ஹஜ் மாத தலைப்பிறை தென்பட்டதாக ஆதாரபூர்வமான தகவல்கள் கிடைத்ததற்கமைவாக துல்ஹஜ் மாதம் 10ஆம் நாளான எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை ஹஜ்ஜுப்பெரு நாளை கொண்டாடுவதாக தீர்மானிக்கப்பட்டதாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் தெரிவித்தது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 140 | 140 | 180 | 160 |
| தக்காளி | 60 | 80 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 40 | 50 |
| கோவா | 70 | 60 | 60 | 70 |
| கரட் | 80 | 120 | 100-160 | 80 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 80 | 40 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 170 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 120 | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 80 | 80 |
| பயற்றங்காய் | 100 | 80 | 80 | 100 |
| லீக்ஸ் | 80 | 80 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 50 | 40 | 50 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 | 100 |
| முருங்கைக்காய் | 140 | 80 | 140 | 120 |
| போஞ்சி | 50 | 160 | 180 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 70 | — | 90 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 80 | 120 | 120 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40-45 | 50 | 50 |
| இராசவள்ளி | 120 | — | — | — |
| வெங்காயப்பூ | 200 | 200 | - | 140 |
| முள்ளங்கி | 40 | 80 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 490


சியாம் சுலைமான்




ஜெசி ஜெசி




அமிர்தலிங்கம் அஜந்தன்




ஜெனி அன்ரனி




சுஜன் வினோ

நோயாளி : என்ன டாக்டர் இது, மருந்து சீட்டில் சா-வுக்கு முன், சா-வுக்கு பின் அப்படினு போட்டிருக்கீங்க.

டாக்டர் : அதுக்கு ஏன் இப்படிப் பதறீங்க! சாப்பாட்டுக்கு முன், சாப்பாட்டுக்குப் பின் அப்படின்னு எழுதியிருக்கேன்.

**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தலும் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வெற்றியும் -ஒரு நோக்கு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாராளுமன்றத் தேர்தல் அமைதியாக நடைபெற்றது. ஆனால், தேசிய ரீதியில் 70 வீதமான மக்கள் வாக்களிக்க இம் மாகாணங்களில் ஏறத்தாழ 66 வீத மான மக்களே வாக்களித்தவர்கள். தேர் தலில் மக்கள் பெரிதாக அக்கறை காட் டாமை, தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் மக்கள் திரளாக கலந்து கொள்ளாமை போன்றவற்றின் பிரதிபலிப்பே மிகுதி 34 வீதமான மக்கள் வாக்களிக்காமையாகும்.

வடக்கு, கிழக்கில் வழமைக்கு மாறாக இம்முறை பல கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் தேர்தலில் போட்டியிட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் போட்டி போடும் கட்சியாக ஏன் எதிர்க்கட்சியாகக் கூட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியே உள்ளது என சில அரசியல் விமர்சகர் களால் கூறப்பட்டது.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமை ப்பு வடக்கு, கிழக்கில்20 ஆசனங் களைக் கோரியபோதும் 16 ஆசனங் களைப்பெற்று தனிப்பெரும் கட்சியாக வும் தேசிய ரீதியில் மூன்றாவது சக்தி யாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஒரு ஆசனத்தையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஒரு ஆசனத்தையும் பெற்றவேளை யில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யால் எந்த ஒரு ஆசனத்தையும் பெற முடியவில்லை. இவ்வாறாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயக தேர்தல் வழிமுறைகளில் மக்கள் நம்பிக் கையை வைத்திருப்பதற்கான வரலாற்றுப் பின்புலத்தைப் பார்ப்போம்.

1949 மார்கழி 18 இல் தந்தை S.J.V. செல்வநாயகம் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸி லிருந்து பிரிந்து இலங்கை சமஷ் டிக் கட்சியை ஆரம்பித்தார். தமி ழர் பிரதேசங்களில் அக்கட்சி இலங் கைத் தமிழரசுக் கட்சியென அழைக்கப்பட்டது. இக்கட்சி சமஷ்டிக்கோரிக்கையை முன் வைத்தது. ஆனால் இவர்களுக்கு முன்பாகவே மொழி சம அந்த ஸ்து, தேசிய இனங்களின் சுய நிர்ணயம் தொடர்பாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியே தமது கொள் கைப் பிரகடனத்தை முன்வை த்தமை குறிப்பிடத்தக்கது. இருந்த போதும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தமிழர் பிரச்சினைகள் தொடர் பாக ஐக்கிய தேசியக் கட்சி போன்ற வலதுசாரிகளுடன் சேர்ந்தே செயற் பட்டார்கள். இக்கட்சி 1956 தொடக்கம் 1975 வரை வடக்கு, கிழக்கில் பல மக்கள் போராட்டங்களை நடத்தியதோடு தமிழ், முஸ்லிம் மக்களின் பரந்துபட்ட பிரதிநிதி த்துவத்தையும் அபிமானத்தையும் பெற்றிருந்தது. இக்கட்சியின் சின்ன மாகிய வீடு தலைமுறை தலைமுறை யாக மக்கள் மனதில் பதிந்துள்ளது. இக்கட்சியின் தலைவர் பல உடன்படிக் கைகளை செய்து தோல்வி கண்ட நிலை யில், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் தலைவர்களுடன் சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினார். இக்கூட்டணி, உதய சூரியன் சின்னத்துடன் 1976 இல் வட்டுக்கோட்டையில் தனி நாட்டுக் கோரிக்கையை பிரக டனம் செய்தார்கள்.

1977 பாராளுமன் றத் தேர்தலில் மக்கள் ஆணையைப் பெற்ற தோடு அ.அமிர்தலிங் கம் எதிர்க்கட்சித் தலைவரானார். இவர்களால் தூண்டப் பட்டு காலப்போக்கில் ஏமாற்றமடைந்த இளைஞர்கள் வன் முறை இயக்கங்களை ஆரம்பித்து தலைமறை வாக செயற்பட ஆரம் பித்தார்கள்.



1983 இல் நடை பெற்ற ஆடிக்கலவரத் தோடும், அரசியலமை ப்பின் 6 ஆம் திருத்தச் சட்டத்தின் படியும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளு மன்ற உறுப் பினர்கள் தமது பதவி களைத் துறக்க, இயக்கங்கள் ஊதிப் பெருத்தன.

1985 இலிருந்து விடுதலைப் புலி களின் ஏகபோகத் தன்மை அதிகரித்த தோடு 1990களின் பின் ஈழ மக்கள்



புரட்சிகர விடுதலை முன்னணியிலிரு ந்து பிரிந்து சென்ற டக்ளஸ் தேவானந் தாவும் அவர் தம் தோழர்களும் ஆயுதக் குழுவாக தீவுப் பகுதியில் வந்திறங்கி னார்கள். அவர்களின் ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சி 1994 பாராளுமன்றத் தேர் தலில் போட்டியிட்டு தீவுப் பகுதியில் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றார்கள். இதனையுணர்ந்த விடுதலைப் புலிகள் தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் மற்றும் ஜனநாயக வழிக்குத் திரும்பிய விடுதலை அமைப்புக்களையும் சேர்ந்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை 2000 ஆம் ஆண்டளவில் உருவாக்கினார்கள். இக்கட்சி 2001 இலிருந்து இன்றுவரை தமிழ் மக்களின் பெரும்பான்மைப் பிரதிநிதித்துவத்தைப் பெற்று வருகின் றமை குறிப்பிடத்தக்கது. இக்கூட்டமைப்பு தாம் பாராளுமன்றப் பிரதிநிதிகளாக இருந்தாலும் விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் எனக் கூறி னார்கள். 2009 மே 19 விடுதலைப் புலிகளின் அழிவுக்குப் பின்னர் அவர்களின் இடத்தை கூட்டமை ப்பே நிரப்பினார்கள்.

தமிழ் மக்களின் அரசியலைப் பொறுத்தவரை ஆயுதப் பேராட்ட காலத்திலும் அவர்கள் அரசியல் மயப்படுத்தப்படவில்லை. இராணு வக் கட்டமைப்புக்கான உதவிகளை வழங்கவே தூண்டப்பட்டார்கள். அண்மைய பாராளுமன்றத் தேர்தலிலும் எந்த ஒரு கட்சி யினதும் பிரசாரக் கூட்டத்திற்கும் மக்கள் பெருந்திரளாக செல்ல வில்லை என அவதானிக்கப்பட் டது. சாதாரணமாக இலக்கிய விழாக்களுக்கான மக்கள் வலைப் பின்னலைக்கூட கூட்டமைப்பு போன்ற பெரிய கட்சிகளால் உருவாக்க முடியாமல் போய் விட்டதே என அரசியல் விமர் சகர்கள் ஆதங்கப்பட்டார்கள்.

ஆனால், தேர்தல் முடிவுகள் அதற்கு மாறானதாகவே அமைந்தது. சில கலந்துரையாடல்களில் கேட்கப்பட்டது போன்று மக்கள் ஏற்கனவே எடுத்த முடிவாகவே இருக்கலாம். நீண்டகாலம் வீட்டுச் சின்னத்தின் மீது கொண்ட பரிச்சயம் காரணமாகலாம். தமிழ் மக்களின் தொடரும் உரிமைப்பிரச் சினைகளை இவர்கள்தான் தீர்ப்பார்கள்

**பி.முத்துலிங்கம்**
**ஓய்வு நிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி**

என்ற பங்கு கொள் ஜனநாயகம் அல் லாத நிலையியல் மனப்பாங்கு அரசியல் காரணமாகலாம். இன்னும் சிலர் கூறுவது போன்று தமிழ் மக்களுக்கு TNA,DNA போல எனும் மரபுரிமை சார்ந்த சிந்தனையாக இருக்கலாம்.

எது எப்படியிருந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 16 ஆசனங்களைப் பெற்று பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக தெரிவு செய்யப்பட்டு இரா. சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராகியுள்ளார். இவர் தனது தலைமைத்துவக் கால த்தில் குறிப்பாக சி.வி. விக்னேஸ் வரனை முதலமைச்சராக்கினார்.

தந்தை செல்வநாயகம் ஞாபகார்த்த சொற்பொழிவுகளை இடதுசாரியும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ண மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க போன்றோரைக் கொண்டு நிகழ்த் தினார். இவை யாவும் இணக்கப் பாட்டின் அடையாளங்கள் தான்.

பாராளுமன்றத் தேர்தலின்பின்னர் தேசியப்பட்டியல் நியமனம், சர்வதேச விசாரணை, உள்ளக விசாரணை தொடர்பாக கருத்து வேறுபாடுகள், உட்கட்சிக்குழப்பங்கள் மேலோங் கியுள்ளன. இதற்கான காரணமாக கூட்டமைப்புக்குள் ஆரோக்கியமான கலந்துரையாடல்கள் மேற்கொள் ளப்பட்டு கருத்து- எதிர்க்கருத்து- சமரசக்கருத்து என்றவாறு தீர்மானங் கள் மேற்கொள்ளப்படுவதில்லை எனக் கூறப்படுகின்றது.


எனவே, தமிழர் தலைமைகள் தன்னிச்சையாக முடிவு கள் எடுக்காமல் கூட்டுப்பொறுப்புடன் செயற்பட வேண் டும். இல்லையெனில் வரலாற்றில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ விடுதலைப்புலிகள் போன்றவற்றிற்கு ஏற்பட்ட நிலையே கூட்டமைப்புக்கும் ஏற்படலாம்.

ஏனெனில், மைத்திரி- ரணில் கூட்டுத் தலைமைத்துவம் ஆபத் தானது. தந்திரோபாயம் மிக்கது என்பதைக் கருத்தில் கொள்ள வேண் டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் கண்காணிப்பு கோபுரம் மீது இந்திய இராணுவம் அதிரடி தாக்குதல்

## எல்லைப்பகுதியில் மோதல் பதற்றம்





(புதுடில்லி)

**காஷ்மீர் மாகாணத்தின் லடாக் எல்லைப் பகுதியில் சீன இராணுவம் அத்துமீறி அமைத்திருந்த கண்காணிப்பு கோபுரத்தை இந்திய வீரர்கள் நேற்று முன்தினம் அதிகாலை நடத்திய அதிரடி தாக்குதலில் தகர்த்துள்ளனர்.**

இந்திய- சீனா இடையே 4 ஆயிரம் கி.மீ. தூரத்துக்கு எல்லைக் கோடு உள்ளது. இந்நிலையில் காஷ்மீர் பிராந்தியத்தில் 38 ஆயிரம் சதுர கி.மீ. பரப்பளவு சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. இது தொடர்பாக அவ்வப்போது இரு நாடுகளுக்குமிடையே பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், சீன இராணுவம் காஷ்மீர் மாநிலம் லடாக் பகுதியில் பர்ட்சி என்ற இடத்தில் எல்லைக் கோட்டில் இருந்து ஒன்றரை கி.மீ. தூரத்தில் இந்தியப் பகுதிக்குள் ஒரு கோபுரத்தை அமைத்து அதன் உச்சியில் ஒரு கமராவை பொருத்தி இந்திய இராணுவத்தின் நடமாட்டத்தை கண்காணித்து வந்ததாக தெரிவிக்கப்பட்டது. செயற்கைக்கோள் மூலம் அந்த கோபுரம் இருப்பதை இந்திய இராணுவம் கண்டுபிடித்தது. உடனே இந்தோ- திபெத்திய எல்லைப் படை இராணுவம் அடங்கிய படையினர் அப்பகுதிக்கு நேரடிகள ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்ட னர். அவர்கள் கண்காணிப்பு கோபுரம் இருப்பதை உறுதிப்படுத்தினர்.

இக்கோபுரத்தை தகர்ப்பது என இந்திய இராணுவம் அதிரடியாக முடிவு செய்தது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்த சீன இராணுவம் தனது படைப்பிரிவை அப்பகுதிக்கு அனுப்பி வைத்தது. ஆனால், சீன இராணுவத்தை திரும்பிச்செல்லுமாறு இந்திய இராணுவம் எச்சரித்தது. இத னால் இருதரப்புக்கும் இடையே மோதல் ஏற்படும் அபாயம் நிலவியது.

இந்நிலையில் நேற்று முன்தினம் அதிகாலையில் குறித்த கண்காணிப்பு கோபுரத்தை இந்திய இராணுவம் தகர்த்தோடு அதிலிருந்து கமரா உள்ளிட்ட பொருட்களை சேகரித்துள்ளது. இதனால் எல்லையில் பதற்றம் நிலவுகிறது.


இதேவேளை டில்லியில் கலாசார பிரசார வாரம் என்ற நிகழ்ச்சியை சீன தூதரகம் நேற்று முன்தினம் நடத்த இருந்தது. ஆனால் இந்தியா- சீனா இடையிலான புதிய பதற்றம் காரணமாக இந்நிகழ்ச்சியை சீன தூதரகம் இரத்து செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (3-7)

## சீனாவில் 5 ஆயிரம் திரையரங்குகளில் திரையிடப்படுகிறது பாகுபலி திரைப்படம்

(மும்பை)

ராஜமௌலி இயக்கத்தில் சமீபத்தில் வெளியாகி சூப்பர் ஹிட்டான படம் பாகுபலி. 250 கோடி ரூபா செலவில் உருவாக்கப்பட்ட இப்படம் வெளியான சில நாட்களிலேயே 500 கோடி ரூபாவை எட்டி வசூலில் புதிய சாதனை படைத்தது.

இதில் ராணா, பிரபாஸ், அனுஷ்கா, தமன்னா, ரம்யா கிருஷ்ணன், நாசர் உள்ளிட்ட பலர் நடித்திருந்தார்கள்.



உலகம் முழுக்க பல நாடுகளில் வெளியான இப்படம் விரைவில் சீனாவிலும் வெளியாக உள்ளது. சீனாவில் கிட்டத்தட்ட 5000 திரையரங்குகளில் பாகுபலியை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது ஸ்டார் நிறுவனம்.

இந்திய அளவில் அதிக வசூலை குவித்த படம் என்ற பெருமையை தற்போது தக்கவைத்துக்கொண்டிருப்பது ராஜமௌலியின் பாகுபலி திரைப்படம்தான். சீனாவிலும் இது போன்று சாதனை செய்யுமா என்று விரைவில் தெரிந்துவிடும். (3-7)

## ஐ.நா சபைக் கூட்டத்தில் மோடி பங்கேற்கமாட்டார்

(புதுடில்லி)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஐ.நா.பொதுசபை கூட்டம் நடைபெற்று வருகிறது.

இதில் உலக நாட்டு தலைவர்கள் கலந்துகொண்டு சர்வதேச பிரச்சினைகளில் தங்கள் நாட்டின் கருத்துக்களை எடுத்துரைக்கிறார்கள்.

இந்த கூட்டத்தில் இந்தியா சார்பில் பிரதமர் மோடி உரை நிகழ்த்துவார் என்றும் அப்போது பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப்பையும் சந்திப்பார் என்றும் கூறப்பட்டது.


ஆனால் இப்போது மோடியின் நிகழ்ச்சி நிரலில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஐ.நா. சபையில் மோடி உரையாற்றவில்லை. அவருக்குப் பதில் வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் உரை நிகழ்த்துவார் என்று டில்லியில் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

என்றாலும் பிரதமர் மோடி திட்டமிட்டபடி எதிர்வரும் 22 ஆம் திகதி அமெரிக்கா புறப்படுகிறார்.

24, 25 ஆம் திகதியும் நியூயோர்க் நகரில் தங்கி இருப்பார். பின்னர் அமெரிக்காவின் மேற்கு கடற்கரைப் பகுதிக்கு சென்று 26 ஆம் திகதியும், 27 ஆம் திகதியும் அங்கு தங்கியிருப்பார்.

28 ஆம் திகதி மீண்டும் நியூயோர்க் சென்று அங்கிருந்து டில்லி புறப்படுகிறார்.



மோடி ஐ.நா சபையில் உரையாற்றுவதற்கு பதிலாக 150 நாடுகள் பங்கேற்கும் ஐ.நா. வளர்ச்சி பங்கபற்றவுள்ளார். (3-7)

## புதுடில்லியில் பரவிவரும் டெங்கு ஒருவாரத்தில் 613 பேர் பாதிப்பு

புதுடில்லியில் டெங்கு காய்ச்சல் பரவி வருகிறது.

கடந்த ஒருவாரத்தில் மட்டும் 613 பேர் பாதிக்கப்பட்டு பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

டெங்குவால் பாதிக்கப்பட்டு கடந்த 12 ஆம் திகதி இந்துராவ் மருத்துவமனையில் 6 மாத குழந்தை அனிஷ்கா உயிர் இழந்தது.

அதேபோல் போர்டிஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சுர்ஜீத்சிங் (52) என்பவரும் இறந்தார்.

இதைத் தொடர்ந்து டில்லியில் டெங்கு காய்ச்சலால் இறந்தவர்களின் எண்ணிக்கை 5 ஆக அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டில் ஜனவரி மாதம் முதல் கடந்த 12 ஆம் திகதிவரை மொத்தம் 1872 பேருக்கு டெங்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளை ஒப்பிடும் போது இந்த எண்ணிக்கை மிக அதிகமாகும்.

டெங்கு பரவுவதை தொடர்ந்து மாநில அரசு பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அரச வைத்தியசாலைகளில் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் எண்ணிக்கை அதிகரிப்பை தொடர்ந்து அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக டாக்டர்களின் விடுமுறையை அரசு ரத்து செய்துள்ளது.

விடுமுறையில் இருக்கும் டாக்டர்கள் உடனே பணிக்கு திரும்ப வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது.

இதற்கிடையே டில்லியில் டெங்கு காய்ச்சல் சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்காக படுக்கை வசதிகளை அரசு மற்றும் தனியார் மருத்துவ மனைகளில் அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜே.பி. நந்தா உத்தரவிட்டுள்ளார்.

புதிய டெங்கு கொசு இனங்கள் உருவாகாதவாறு பொது மக்கள் தங்களை சுற்றி உள்ள பகுதிகளில் தண்ணீர் தேங்காதவாறு பார்த்து கொள்ள வேண்டும் என மாநில சுகாதார அமைச்சர் சத்யேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

இ தனிடையே ஒடிசாவிலும் டெங்கு காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது. ஒடிசாவில் 370 பேருக்கு டெங்கு காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. டெங்கு காய்ச்சல் மேலும் பரவாமல் தடுக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதால் மக்கள் பீதியடைய தேவையில்லை என்று அம்மா நில சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (3-7)

## அனைவருக்கும் இணையவசதி முதல்வர் ஜெயா அறிவிப்பு

தமிழ்நாட்டில் உள்ள கிராமங்கள் மற்றும் நகரங்களில் உள்ள அனைத்து இல்லங்களுக்கும் இணைய வசதி வழங்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா சட்டசபையில் அறிவித்துள்ளார்.

சட்ட சபையில் முதல்வர் ஜெயலலிதா 110 விதியின் கீழ் வாசித்த அறிக்கையில் கூறியதாவது.

தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழக அரசு பல்வேறு புதிய திட்டங்களை செயற்படுத்தி வருகிறது.

அந்த வகையில் தமிழ் நாடு பைபர் நெட்வொர்க் கார்ப்பரேசன் என்ற அமைப்பு ஏற்படுத்தப்படும்.

கிராமங்களில் இல்லம்தோறும் இணைய தொடர்பு ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

மேலும் 12, 524 ஊராட்சி கிராமங்கள் இணையம் மூலம் இணைக்கப்படும்.

அரசு சேவைகளை இணையம் மூலம் பெறமுடியும். இதற்கென ஆப்டிகல் வைபர், கிராமங்களில் பதிக்கப்படும்.

மத்திய அரசு உதவியுடன் 3 ஆயிரம் கோடி ரூபா செலவில், இத்திட்டத்தை மாநில அரசு நிறைவேற்றும் மேலும் இணையத்தள வழி தொலைக்காட்சி சேவை கொண்டு வரப்படும்.

இ- சேவை மையங்கள் வழியாக அரசு உதவி பெறும் திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. தற்போது 10 034 இசேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் 70 லட்சம் பேர் பயன் அடைந்துள்ளனர்.

மேலும் இணையம் மூலம் கூடுதலாக 300 சேவைகள் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (3-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1241

# யாளினி தந்த பரிசு

யாழினி படிக்கும் பள்ளியில் புத்தகக் கண்காட்சி. பள்ளியின் நுழைவாயிலில் வண்ணத் தோரணங்களும், புத்தகங்கள் பற்றி எழுதப்பட்டிருந்த சிறப்பு களுடன் கூடிய தட்டிகளும் கட்ட ப்பட்டிருந்தன.

யாழினிக்குப் புத்தம் என்றால் ரொம்ப ரொம்பப் பிடிக்கும். எப்போதும் புத்தகங்களை விரும்பிப் படிப்பாள். புத்தகம் என்றதும் பாடப் புத்தகம் என்று நினைத்துவிடாதீர்கள்.

பாடப் புத்தகத்தைத் தாண்டி, கதை, கட்டுரை நூல்களையும் விரும்பி படிப்பாள் யாழினி. அதிலும், படக் கதைகள் என்றால் அவளுக்கு ரொம்பவும் உயிர். தினமும் தூங்கப் போகும்முன் ஏதாவது ஒரு புத்தகத்தை எடுத்துக் கொஞ்சம் பக்கங்களாவது படிக்காமல் தூங்க மாட்டாள்.

அம்மாவிடம் கெஞ்சி, அவளது வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த அரசுக் கிளை நூலக த்தில்கூட யாழினி உறுப்பினரா கச் சேர்ந்துவிட்டாள்.

அவள் படிக்கும் பள்ளியிலேயே புத்தகக் கண்காட்சி என்றதும், அவள் மனம் அளவில்லா மல் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தது.

காலையிலேயே உள் ளூர் பிரமுக ரால் புத்தகக் கண் காட்சி திறந்து





வைக்கப்பட்டது.

விழாவுக்குக் குழந்தைகளின் பெற்றோர்களும் ஏராளமாக வந்திருந்தார்கள்.

யாழினியின் அம்மா சாயங் காலம் வருவதாகக் கூறியிருந் தார்.

அம்மா வருகிறாரா என்று வாசலையே பார்த்துக்கொண்டி ருந்தாள் யாழினி.

"ரெண்டு வீடு களுக்குப் போயி வேலை செஞ்சிட்டுத் தானே அம்மா வரணும்!' யாழினி மனதுக்குள்ளேயே சொல்லிக்கொண்டாள்.

அவளின் தோழிகள் அவர வர் அம்மா அப்பாவோடு வந்து புத்தகங்கள் வாங்கிவருவதை ஆசை ஆசையாக வேடிக்கை பார்த்தாள்.

பள்ளிக்கூட மணி அடித்தது.

"மணி மூணு ஆச்சு. அம் மாவை இன்னும் காணலியே!'

வாசலில் அம்மாவின் முகம் தெரிந்ததும் வேகமாக ஓடினாள்.

"அய்...எங்கம்மா வந்துட்டா ங்க...!" என்று அம்மாவின் கையைப் பிடித்துக்கொண்டு குதித்தாள்.

இருவரும் புத்தகக் கண்காட் சிக்குள் நுழைந்தார்கள். புதிய புத்தகங்களின் வாசம் வீசியது.

யாழினிக்கு ரொம்ப பிடித்த வாசம். ஒரு நிமிடம் கண்ணை மூடி ஆழமாய்ச் சுவாசித்தாள்.

அழகழகான வண்ணங்களில் ஆயிரக்கணக்கில் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

ஒவ்வொரு புத்தகமாய் ஆர்வத் தோடு புரட்டிப் பார்த்தாள்.

நல்ல பளபளப்பான தாளில் புத்தகங்கள் அச்சிடப்பட்டிருந்தன.

அப்படியே விரல்களால் புத்தகப் பக்கங்களைத் தடவிக் கொடுத்தாள். ஆசையாகப் புத்தகத்தின் இரண்டாம் பக்கத்தைப் புரட்டி னாள். அதன் விலையைப் பார்த் தாள்.

அம்மா நேற்று சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.

" செல்லம், அம்மாகிட்டே அம் பது ரூபாதான் இருக்கு. அதுக்கு ஏதாவது புத்தகம் வாங்கிக்க. கூட வேற புத்தகம் வாங்கச் சொல்லி, அம்மாவ தொல்லைப்படுத்தக் கூடாது...!"

'சரி' என்பதாய்த் தலையாட்டி இருந்தாள் யாழினி.

அம்மா சொன்னதுபோல், ஐம்பது ரூபாய்க்கு அவளுக்குப் பிடித்த புத்தகமொன்றை வாங் கிக் கொண்டாள்.

இன்னும் வேறு சில புத்தக ங்களையும் ஆசையாக எடுத்துப் புரட்டிப் பார்க்க ஆரம்பித்தாள்.

"போதும் வா போகலாம்!" என்று அம்மா சொன்னதை அவள் கேட்கவில்லை.

அம்மாவுக்கு ரொம்ப சங்கட மாகிவிட்டது. படங்களுடன் கூடிய அழகான சிறு புத்தக மொன்றை யாழினி கையில் எடுத்தாள்.

"அம்மா, இந்தப் புத்தகம் நல்லாயிருக்கில்லே!" என்றாள், கண்களில் ஆர்வம் மின்ன. என்ன சொல்வதென்றே தெரிய வில்லை அம்மாவுக்கு.

யாழினி கையிலிரு ந்த ஜாமெண்ட்ரி டப்பாவில் சேர்த்து வைத்திருந்த இரு அழுக்கு பத்து ரூபாய் களை எடுத்தாள்.

அந்தக் கதைப் புத்தக த்தை வாங்கினாள்.

"இது எங்கம்மா வுக்கு, என்னோட பரிசு...!" என்று நீட்டினாள்.

"எனக்குத்தான் படிக்கத் தெரியாதே ம்மா..." என்றாள் அம்மா கண்களில் நீர்க் கோர்க்க.

உடனே, யாழினி " அதனா லென்ன... எங்கம்மாவுக்கு எல்லாக் கதையையும் நான் படிச்சிச் சொல்வேனே..!" என்றாள்.

"சரிடா, என் அறிவுச் செல் லமே...!" என்று யாழினியின் கன்னத்தைப் பிடித்துச் செல்ல மாய் முத்தமிட்டாள் அம்மா.

09.2015
16



# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1795 - ஐக்கிய இராச்சியம் தென்னாபிரிக்காவின் கேப் டவுண் நகரைக் கைப்பற்றியது.
- 1810 - மிகுவேல் ஹிடால்கோ என்ற மதகுரு மெக்சி கோவின் விடுதலைப் போரை ஆரம்பித்தார்.
- 1812 - முதலாம் நெப்போலியன் மொஸ்கோவினுள் நுழைந்ததை அடுத்து ரஷ்ய மக்கள் நள்ளிர வில் நகரை தீயிட்டுக் கொழுத்தினர். மொஸ்கோ நகரம் அடுத்த சில நாட்களில் முற்றாக எரிந்தது.
- 1852 - லண்டனில், மான்செஸ்டர் நகரில் உலகின் முதலாவது இலவச நூல் நிலையம் அமை க்கப்பட்டது.
- 1887 - மென்பந்தாட்டம் முதன் முதலில் சிக்கா கோவில் விளையாடப்பட்டது.
- 1908 - ஜெனரல் மோட்டர்ஸ் நிறுவனம் அமைக் கப்பட்டது.
- 1920 - நியூயோர்க் நகரில் ஜே.பி.மோர்கன் கட்ட டத்தின் முன்னால் இடம்பெற்ற குண்டுவெடி ப்பில் 38 பேர் கொல்லப்பட்டு 400 பேர் காய மடைந்தனர்.
- 1963 - மலாயா, சிங்கப்பூர், மற்றும் போர்ணியோ வின் சாபா, சரவாக் ஆகியன இணைந்து மலே சியா உருவாக்கப்பட்டது.
- 1970 - ஜோர்தானில் நான்கு பயணிகள் விமான ங்கள் பாலஸ்தீனத் தீவிரவாதிகளால் கடத்த ப்பட்டதை அடுத்து மன்னர் ஹுசெயின் இராணுவ ஆட்சியை அறிவித்தார்.
- 1975 - பப்புவா நியூ கினி, அவுஸ்திரேலியாவிட மிருந்து விடுதலை பெற்றது.
- 1978 - ஈரானில் டபாஸ் நகரை 7.5 - 7.9 ரிக்டர் நிலநடுக்கம் தாக்கியதில் 25,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1982 - லெபனானில் பாலஸ்தீன அகதி முகாங்க ளான சப்ரா, ஷட்டீலா ஆகியவற்றில் லெப னானிய இராணுவத் துணைப்படையின ரால் ஆயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1987 - ஓசோன் படலத்தைப் பாதுகாக்கும் பிரகடனம் மொண்ட்றியால் நகரில் கைச்சாத்திடப்பட்டது.
- 2002 - விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்கிரம சிங்க அரசுக்கும் இடையிலான பேச்சுவார் த்தை தாய்லாந்தில் ஆரம்பமாயின.
- பிறப்புகள்
- 1859 - யுவான் ஷிக்காய், சீனக் குடியரசின் அரசுத் தலைவர் (இ. 1916)
- 1893 - ஆல்பர்ட் செண்ட்-ஜியார்ஜி, அங்கேரிய-அமெரிக்க மருத்துவர், மருத்துவம் அல்லது உடலியங்கியலுக்கான நோபல் பரிசு பெற்ற வர் (இ. 1986)
- 1916 - எம். எஸ். சுப்புலட்சுமி, இந்திய கருநாடக இசைப் பாடகர், (இ. 2004)
- 1923 - லீ குவான் யூ, சிங்கப்பூரின் நிறுவனரும், முதலாவது பிரதமரும் (இ. 2015)
- 1933 - வி. சிவசாமி, ஈழத்துத் தமிழறிஞர், பேராசி ரியர் (இ. 2014)
- 1945 - ப. சிதம்பரம், இந்திய அரசியல்வாதி
- 1950 - மாலன், இந்திய எழுத்தாளர்
- 1974 - யூலியன் காசுட்ரோ, அமெரிக்க அரசியல்வாதி

**இறப்புகள்**

- 655 - முதலாம் மார்ட்டின் (திருத்தந்தை)
- 1394 - எதிர்-திருத்தந்தை ஏழாம் கிளமெண்ட (பி. 1342)
- 1931 - உமர் முக்தார், லிபியக் கல்வியியலாளர் (பி. 1862)
- 1932 - ரொனால்டு ராஸ், இந்திய-ஆங்கிலேய மருத் துவர், மருத்துவம் அல்லது உடலியங்கியலு க்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1857)
- 2000 - எம். எச். எம். அஷ்ரப், இலங்கை அரசியல் வாதி (பி. 1948)
- 2007 - ராபர்ட் ஜோர்டான், அமெரிக்க எழுத்தாளர் (பி. 1948)
- 2009 - தென்கச்சி கோ. சுவாமிநாதன், தமிழகப் பேச்சாளர், எழுத்தாளர்
- 2012 - லூசு மோகன், இந்திய நடிகர் (பி. 1928)

**சிறப்பு நாள்**

- உலக ஓசோன் பாதுகாப்பு நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமாற்றுதல் என்பது அற்பர்களால் உண்டாகும் அற்ப ஆனந்தம் காணும் செயலாகும். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஒரு விசாரணையும் வேண்டாம் எங்களைப் பிரித்துவிடு

வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்த இன அழிப்பு மற்றும் போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை இடம்பெறுவதை தடுத்து நிறுத்துவதில் இலங்கை அரசு மிகத் தீவிரமாக உள்ளது.

இவ்வாறு சர்வதேச விசாரணையைத் தடுத்து நிறுத்துவதில் இலங்கை அரசு கடும் பிரயத்தனம் எடுப்பதன் ஊடாக, தனது நாட்டின் சிறுபான்மை இனத்துக்கு மீண்டும் மீண்டும் அநீதி இழைப்பது உறுதியாகிறது.

போரினால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள். பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று ஒழித்தது மட்டுமன்றி படையினரிடம் தஞ்சம் அடைந்தவர்கள் எங்குள்ளனர் என்பது கூடத்தெரியாமல் உள்ளது.

நிலைமை இதுவாக இருக்கும்போது, தமிழ் மக்கள் மீதான இத்துணை கொடூரத்தனங்களும் எதற்கானது என்றால், சிங்கள இனம் மட்டுமே இந்த நாட்டில் வாழ வேண்டும்; பௌத்த சிங்களவர்களுக்கு மட்டுமே இந்த நாடு சொந்தம் என்ற வக்கிரத் தனத்தாலாகும்.

இத்தகைய நிலைமையின் காரணமாக தமிழினம் அழிக்கப்படுவதுடன், அழிக்கப்படுகின்ற தமிழினத்துக்கு நீதி கிடைப்பதையும் சிங்கள அரசு தடுத்து வருகிறது.

இந்நிலையில் இலங்கை ஆட்சியாளர்களால் காலத்துக்குக் காலம் கொல்லப்படும் தமிழினத்தின் ஒரே நம்பிக்கை சர்வதேசம் மட்டுமே.

இத்தகையதொரு சூழ்நிலையில் சர்வதேசமும் இலங்கை அரசின் கோரிக்கைகளுக்கு சந்தர்ப்பம் கொடுக்குமாயின் தமிழினத்தின் அழிவு பற்றி சர்வதேச சமூகம் கவலை கொள்ளவில்லை என்றே கூற முடியும்.

தற்போது நாட்டில், ஜனாதிபதி மைத்திரியின் ஆட்சி இருப்பதால் தமிழ் மக்கள் ஆறுதல் அடைந்தாலும் மைத்திரிதான் இந்த நாட்டின் நிலைத்த ஜனாதிபதி என்று கூற முடியாது.

எனவே, இந்த நாட்டின் தற்போதைய ஆட்சியில் தற்காலிகமாக அமைதி நிலவினாலும் எதிர்வரும் காலங்களில் வருகின்ற ஆட்சியாளர்கள் தமிழ் மக்களை என்ன செய்வார்கள் என்று சொல்ல முடியாது.

ஆகையால், சர்வதேச சமூகம் தமிழினத்தின் உரிமையைப் பாதுகாக்க நினைத்தால்–பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் எனக் கருதினால், சர்வதேச விசாரணையை முன்னிறுத்த வேண்டும்.

சர்வதேச விசாரணையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று இலங்கை அரசு கூறுமாயின், பரவாயில்லை. இலங்கைத் தமிழர்கள் பிரிந்து சென்று தங்களின் ஆட்சியை நடத்த அனுமதியுங்கள் என்று இலங்கை அரசுக்குக் கூறவேண்டும்.

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் சர்வதேச மற்றும் உள்ளக விசாரணைகள் முடிவுறுத்தப்படலாம்.

இதைவிடுத்து வன்னிப் பெரு நிலப்பரப்பில் வைத்து தமிழ் மக்களை மிக மோசமாகக் கொன்று ஒழித்தவர் சூரியக் குளியல்; நீச்சல் அடித்தல்; செஃபி எடுத்தல் என்று உல்லாசமாக இருக்க,

அவரைப் பாதுகாக்க உள்ளக விசாரணை என்று இலங்கை அரசு கூறுவதும் அதனை சர்வதேசம் ஏற்பதும் வன்னியில் நடந்த பேரவலத்தை–பெரும்கொடுமையைவிட இன்னும் ஒருபடி மேலான கொடுமைத்தனம் என்றே கூறமுடியும்.

எனவே, சர்வதேச விசாரணையைத் தடுப்பதாயின் தமிழர்களுக்கு தனி நாட்டைக்கொடுக்க நீங்கள் தயாரா? என்று சர்வதேச சமூகம் இலங்கை அரசிடம் ஒரு கேள்வியைக் கேட்க வேண்டும் என்பது போரினால் பாதிக்கப்பட்ட தமிழினத்தின் தாழ்மையான கோரிக்கை.

## "இந்து கீதம்" வெளியீடு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இந்து கீதம் இறுவெட்டு வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கல்லூரியின் அதிபர் நா.மகேந்திராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறை பேராசிரியர் ராஜேஸ்வரன், சிறப்பு விருந்தினராக ஜெயகுமரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (செ-12)

## ஐ.நா பிரதிநிதி ஜனாதிபதி சந்திப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஐக்கிய நாடுகளின் இலங்கை வதிவிடப்பிர திநிதி சுபினாய் நன்டி நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பான ஐ.நா அறிக்கை இன்று வெளியிடப்படவுள்ள நிலையிலேயே இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (செ-12)

## முக்கொலை சந்தேகநபர் வைத்தியசாலையில்

உடுகம்பளை பிரதேசத்தில் வீடொன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு பாதங்களில் ஏற்பட்ட காயங்கள் காரணமாக கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த முக்கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட வெலிமடை பிரதேசத்தில் வசிக்கும் 36 வயதுடைய நபரை, நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றப்புலனாய்வுத் துறை அதிகாரிகள் முன்னெடுத்த விசேட நடவடிக்கையை அடுத்து, பஸ்யாலை பிரதேசத்தில் வைத்து குறித்த சந்தேகநபர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர், குறித்த வீட்டில் இருந்த கோழிப் பண்ணையில் பணிபுரிந்தவர் என்பதுடன் வீட்டில் இருந்த தாய், தந்தை மற்றும மகள் ஆகிய மூவரையும் கொலை செய்திருந்ததுடன் வீட்டிலிருந்த வாகனத்தை எடுத்துகொண்டு தப்பிச்சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அரங்கேற்றம்

கிழக்குப் பலகலைக்கழக நுண்கலைத்துறையின் ஏற்பாட்டில் யாழ் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய மாணவர்கள் வழங்கும் "மழைப்பழ சிறுவர் வடமோடி கூத்து" அரங்கேற்றம் இன்று புதன் கிழமை மாலை 5.00 மணிக்கு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அமபாள் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

கிழக்குப் பல்கலைக் கழக நாடகத் துறை இறுதியாண்டு மாணவர்களின் ஆய்வுச் செயற்பாட்டின் ஒரு அங்கமாகவே இந்த அரங்கேற்றம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## ஆண்டு நிறைவு விழா

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் கட்டைவேலி தேவாலயத்தின் 194 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் நன்றி செலுத்தும் வழிபாடும் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அருட்திரு டேவிட் அழகராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக அருட்திரு சி.என். ரவிசங்கர் கலந்து கொண்டு அருளுரை நிகழ்த்துவார். அன்றையதினம் கண்காட்சி மற்றும் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (இ-3-60)

# உள்ளக விசாரணை கட்டமைப்பில் சிக்கல்

### குணதாச அமரசேகர சுட்டிக்காட்டு

போரின் இறுதிக்கட்டத்தில் நடந்ததாக கூறப்படும் குற்றங்கள் சம்பந்தமான விசாரணை நடத்த இல ங்கை அரசாங்கம் முன்வைத்துள்ள உள்நாட்டு விசாரணை கட்டமைப்பு தொடர்பான விடயத்தில் சிக்கல்கள் இருப்பதாக சிங்கள தேசிய அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு கண்காணிப்பின் கீழ் நடத்தப்படும் இந்த விசாரணைகளில் எவ்விதமான தேசிய தன்மையும் இல்லை என ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார். (இ-7)

# விவாதச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளுக்கிடையிலான மாபெரும் விவாதச் சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளதாக கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா அறிவித்துள்ளார்.

கல்லூரியின் நிர்வாகத்துடன் 125 ஆவது ஆண்டுவிழாக் குழுவும் இணைந்து மேற்கொண்ட தீர்மானத்தின்படி அமரர்களான மூதறிஞர் க.சொக்கன், இ.தேவன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உப அதிபர் க.சிவராமலிங்கம் ஆகியோரது ஞாபகார்த்தமாக விவாதமேடை 2015 எனும் தொனிப் பொருளில் மாபெரும் விவாதச் சுற்றுப் போட்டி நடைபெறவுள்ளது.

அதனடிப்படையில் எதிர்வரும் 19, 20ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் வடமாகாண ரீதியில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த விவாதச் சுற்றுப்போட்டியில் வடமாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலைகளும் பங்குகொள்ள முடியும்.

இப்போட்டியில் முதலிடம் பெறும் பாடசாலைக்கு 25ஆயிரம் ரூபாய் பணப்பரிசும் சான்றிதழ் பதக்கம் என்பனவும் இரண்டாம் இடத்தைப் பெறும் பாடசாலைக்கு 15ஆயிரம் ரூபாயும் சான்றிதழ் பதக்கம் என்பனவும் மூன்றாம் இடத்தைப் பெறும் பாடசாலைக்கு 10ஆயிரம் ரூபாயும் பதக்கம் சான்றிதழ் என்பனவும் வழங்கப்படவுள்ளது.

விவாதமேடை 2015 இன் சிறந்த விவாதிக்கு 5ஆயிரம் ரூபாயும் பதக்கம் மற்றும் சான்றிதழும் வழங்கப்படவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றும் அனைத்து பாடசாலைகளுக்கும் பெறுமதியான சான்றிதழ்கள் வழங்கப்படுமென்பதுடன் உணவு, சிற்றுண்டி வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு விரிவுரையாளர் கு.பாலசண்முகன் (0776215500)அல்லது ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ (0770419168) ஆகியோருடன் தொலைபேசியூடாக தொடர்பு கொள்ள முடியும் என அதிபர் அறிவித்துள்ளார். (இ-9)

### 600 மில்லியன் ரூபாய் முறைகேடு

# மகிந்தவின் செயலாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

முறையற்ற வகையில் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் 600 மில்லியன் ரூபாய் பணத்தை பயன்படுத்தியமைக்கு எதிராக சட்டமா அதிபர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

குறித்த குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத் தொடர்பு ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

குறித்த பணத்தை இருவரும் பௌத்த அடியார்களின் வழிபாடுகளுக்காக செலவிட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.


இதனையடுத்த இந்த வழக்கு விசாரணையை நாளை மறுதினம் 18 ஆம் திகதி எடுத்துக் கொள்ள கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி குசலா சரோஜினி வீரரட்ன தீர்மானித்துள்ளார்.

இந்த வழக்கில் தேர்தல்கள் ஆணையாளர் உட்பட்ட 21 பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

2014ஆம் ஆண்டு ஒக்டோபர் 30 ஆம திகதி முதல் 2015ஆம் ஆண்டு ஜனவரி 05ஆம் திகதி வரை ஆணைக் குழுவின் இந்த தொகை பணம் தப்ரோபென் இலங்கை வங்கி கிளையில் உள்ள ஜனாதிபதி செயலாளரின் கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (இ-7)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### மக்களுக்கு சேவகம்



✦ ஆண்டவனின் விருப்பம் இல்லாமல், மரத்தின் இலை கூட அசைய முடியாது.

✦ என் பணம், என் படிப்பு என்று சிறிதும் எண்ணாதே. நான் மக்களின் சேவகன், நான் பக்தன் என்று எண்ணிக் கொள்.

✦ கடவுளை அடைய வேண்டும் என்ற ஏக்கம் அதிகரித்தால், மனம் பக்குவமாகி விடும்.

✦ கடவுளைப் பற்றிய ஒவ்வொருவரின் அனுபவமும் ஒவ்வொரு வகையில் புதுமாதிரியாக இருக்கும்.


✦ உயர்வுக்கும், தாழ்வுக்கும் அவரவர் மனமே காரணம்.

✦ தன்னை குருவாக கருதிக் கொண்டு ஒவ்வொருவரும் மக்களுக்கு அறிவுரை வழங்குவது நல்லதல்ல.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தாச்சி சுற்றுப் போட்டி

# உடுவில் ஆலடி சிந்துவை வீழ்த்தி தாவடி காளியம்பாள் சம்பியன்



இலங்கையில் தமிழ் மக்களின் திருநாளான ஆடிப் பிறப்பை முன்னிட்டு நடத்திய தாச்சி சுற்றுப் போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டு கழகம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வட மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இப்போட்டிகள் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகமும் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் பலம் பொருந்திய அணிகளாக இருந்த போதிலும் முதற் பாதி ஆட்டத்தில தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் அதிரடியாக விளையாடி ஐந்து பழங்களை பெற்றுக் கொண்ட போதிலும் சிந்து விளையாட்டுக் கழகத்தினால் பழம் பெற எடுத்த முயற்சிகள் கைகூடாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் காளியம்பாள் விளையாட்டுக் கழகம் அதிரடியாக விளையாட எத்தனித்த போதிலும் முதற் பாதி ஆட்டம் போன்று பழம் பெற முடியாதவாறு சிந்து விளையாட்டுக் கழகம் மறித்த நிலையில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் 02 க்கு 01 என்ற முன்னிலைப் பழ அடிப்படையில் போட்டி முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் 7 க்கு 1 பழம் என்ற அடிப்படையில் சிந்து விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று 2015 ஆம் ஆண்டுக்கான சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

காளியம்பாள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.ஜசிந்தன் போட்டியின் ஆட்டநாயகனாகவும் சிறந்த தாச்சியாக பொ.கமலநாதனும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

வட மாகாண கல்வி விளையாட்டுத் திணைக்களம் கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்திய போட்டிகளில் காளியம்பாள் விளையாட்டுக் கழகம் தொடர்ந்து சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளமை சுட்டிக் காட்டக் கூடியதாகும்.

போட்டியில வெற்றி பெற்ற அணிகளுக்கு முறையே வட மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராசாவும் மற்றும் வட மாகாண சபை உறுப்பினரும் விளையாட்டுக் கழகங்களின் இணைப்பாளருமான இ.ஆனோல்ட் ஆகியவர்கள் வெற்றிக் கிண்ணங்களை வழங்கி வைத்தனர். (க)

## மென்பந்து போட்டிக்கு விண்ணப்பிக்குக

உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 5 பந்துப் பரிமாற்றம் 6 வீரர்கள் கொண்ட மென்பந்து சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

வெற்றிபெறும் அணிக்கு 6 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வெற்றிக்கிண்ணமும் இரண்டாம் இடத்தினை பெறும் அணிக்கு 3 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படவுள்ளது.

விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் 077 220 8185, 077 8217853, 077 966 9233 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள் ளனர். போட்டி முடிவுத்திகதி எதிர் வரும் 19ஆம் திகதி சனிக்கிழமையாகும்.


\- - - -

TRIPLE- 'V' நடத்தும் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு யாழ்.மாவட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

6 பேர் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்டதாக போட்டிகள் யாவும் நடத்தப்படும். வடமராட்சி, தென்மராட்சி, வலி காமம் என வலய ரீதியாக பிரித்து போட்டிகள் யாவும் நடத்தப்படவுள்ளது. விண்ணப்பிக்கும் இறுதித் திகதி எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக கிழமையாகும்.

போட்டியில் கலந்து கொள்ளும் விளையாட்டுக்கழகங்கள் 077 880 2584, 077 633 6611, 077 858 7924, 077 899 8232, 077 236 0152 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

# எமல்டன் அதிரடி ஆட்டம் சுப்பர் 8 இல் அந்தோனியார்புரம்






யாட்டுக் கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட போட்டியில் சுப்பர் 8 இற்கு நுழையும் போட்டியில் மன்னார் அந்தோனியார்புரம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலிட்டி கண்ணகை விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் 12 ஆவது நிமிடத்தில் எமல்டன் (அந்தோனியார்புரம்)கோலி கணக்கினை ஆரம்பித்து வைத்தார்.

மீண்டும் இரண்டாவது பாதி ஆட்டத்தின் 23, 24, 26, 30 ஆவது நிமிடங்களில் விஜயகுமார், ஜேசுடளஸ், குயின்ரன் மற்றும் எமல்டன் ஆகியோர் கோலினை பெற்றதன் மூலம் 5:0 என்ற கோல் கணக்கில் அந்தோனியார்புரம் வெற்றிபெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக எமல்டன் தெரிவுசெய்யப்பட்டார். (க)

## பளுதூக்கல் வீராங்கனை தசாந்தினி சைனிங்ஸ் வி.கழகத்தால் கௌரவிப்பு



வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக் கழக 58 ஆவது வருட நிறைவுதின விளையாட்டுப் போட்டியின் போது, சைனிங்ஸ் கழக உறுப்பினரான செல்வி தசாந்தினி இராமகிருஷ்ணன், சைனிங்ஸ் விளையாட்டுக் கழக லண்டன் கிளை ஏற்பாட்டில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

செல்வி தசாந்தினி இராமகிருஷ் ணன் யாழ். மாவட்ட பளுதூக்கல் சங்கத்தினால் நடத்தப்பட்ட பளு தூக்கல் போட்டியில் பெண்கள் பிரிவில் யாழ். மாவட்டத்தில் முதலிடம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CSE
COLOMBO STOCK EXCHANGE

# பங்குச் சந்தையின் சமகாலப் போக்கு மற்றும் நிகழ்கால முதலீட்டு வாய்ப்புக்கள்

NDB Research அலகின் சிரேஷ்ட நிதிப்பகுப்பாய்வாளர் திரு R.ரகுராம் அவர்கள் பங்குச் சந்தையின் சமகாலப் போக்கு மற்றும் நிகழ்கால முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பான கருத்துரைகளை வழங்குவார்.

எதிர்வரும் 19.09.2015 திகதி (சனிக்கிழமை) காலை 9.30 முதல் மதியம் 12 மணி வரை 147-2/3 கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள (சத்திரச் சந்தி) கொழும்பு பங்குப் பரிவர்த்தனை யாழ்.கிளையில் நடைபெறும். (1798)

For more info Call or type CSE and SMS to 0777822014/ 021 222 1455


## வித்தியா கொலை...

யில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

இதன்போது, கொலை செய்யப்பட்ட மாணவியின் சடலத்தின் கண் பகுதியில் இருந்து பெறப்பட்ட விந்தணு மாதிரியை சட்ட வைத்திய அதிகாரி மயூரன் இந்த வழக்கின் மேலும் ஒரு தடயப் பொருளாக, நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இதற்கமைய குறித்த விந்தணு மாதிரியை மரபணு பரிசோதனைக்காக, அனுப்பி வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், முன்னதாக சந்தேகநபர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள மரபணுக்களுடன் அதனை ஒப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மடிக்கணணி, கையடக்க தொலைபேசி மற்றும் ரப் ஆகியவற்றில், குற்றச்செயல் தொடர்பான வீடியோக்கள் அல்லது புகைப்படங்கள் இருந்தனவா என்பதை கண்டுபிடிக்குமாறு முன்னதாகவே நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

எனினும் மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் அதனை கண்டுபிடிக்க வசதியற்ற நிலையில் உள்ளதாகவும் நீதிமன்றத்தில் நேற்று சுட்டிக்காட்டப்பட்டது.இதனைத் தொடர்ந்து நீதவான் குறித்த தடயப் பொருட்களை மீளப் பெற்று மேலதிக ஆய்விற்காக இலங்கை கணிணி அவசர நடவடிக்கை பிரிவிற்கு அனுப்பிவைக்குமாறும நீதவான் உத்தரவிட்டுள்ளார். (செ-4)

## தமிழர்கள்...

மேலும் வலுப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு முக்கிய அம்சங்கள் பற்றி விவாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இதையடுத்து இரு நாட்டு பிரதமர்களும் கூட்டறிக்கை வெளியிட்டனர். இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறும்போது - நான் பிரதமரான பின் முதல் வெளிநாட்டு பயணமாக இந்தியா வந்துள்ளமை பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்தியாவுடனான நல்லுறவை மேம்படுத்துவதே இந்த பயணத்தின் நோக்கம். பழைய காயங்களை உற்று நோக்கும் வேளையில் எதிர்காலத்தையும் கவனிக்க வேண்டியது அவசியம். தீவிரவாத எதிர்ப்பு, கடலோர பாதுகாப்பு போன்ற விசயங்களில் இணைந்து செயல்படுவோம்.

இந்தியாவுடனான பொருளாதர ஒத்துழைப்பு என்பது மிகவும் தொன்மையானது. அடுத்த 5 ஆண்டுகளில் ஒரு லட்சம் வேலை வாய்ப்பை உருவாவாக்குவதே எங்கள் இலக்கு. சுற்றுலாத் துறையை மேம்படுத்துவது குறித்தும், பேசியுள்ளேன் என கூறினார்.

பிரதமர் நரேந்திர மோடி கூறும்போது இந்த ஆண்டு இந்திய-இலங்கை உறவில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டு. மிகவும் அண்மையில் உள்ள நெருக்கமான நட்பு நாடாக இலங்கை இருக்கிறது. இலங்கையின் அனைத்து வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் இந்தியா உறுதுணையாக இருக்கும் என்பதற்கு உறுதியளிக்கிறோம்.

இலங்கையில் தமிழர்கள் கௌரவமாக வாழ வழிவகை செய்ய வேண்டும் என ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளேன் எனத் தெரிவித்தார். (செ-11)

## குற்றவாளிகள்...

அந்தப் பிராந்தியத்தில் மட்டுமல்ல, உலக அளவில் எப்படி நீடித்திருக்கக் கூடிய சமாதானத்தை முன்னெடுக்க முடியும் என்பதற்கு ஒரு உதாரணமாக அமையும் என்று ஐ.நாவின் மனித உரிமைகள் வல்லுநர் ஒருவர் வலியுறுத்தியுள்ளார்.

கொல்ம்பியாவைச் சேர்ந்த பாப்லோ டி கிரீஃப் நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் , இலங்கையில் நீதித் துறையில் மாறுதல்களைக் கொண்டு வந்து, போருக்கு பின்னரான காலப் பகுதியில் ஏற்பட்டுள்ள மாறுதல்களையும் மனதில் கொண்டு, அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதிவழங்கும் நோக்கில், அதற்கேற்ற வகையில் உத்திகள் வகுக்கப்பட வேண்டிய தேவை உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

அதற்கான வழிமுறைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்வும் அவரது அறிக்கை கூறுகிறது. அதேபோல் உண்மைகளை கண்டறிய சுயாதீனமான வழிமுறை ஏற்படுத்தப்பட்டு, இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு முழுமையான வகையில் நியாயங்கள் வழங்கப்பட்டு, இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும் என பாப்லோ டி கிரீஃப் கூறியுள்ளார்.

இந்த இரண்டு நடவடிக்கைகளும் ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதன் மூலம் இலங்கை தனது முழுமையான வலிமையை உணர்ந்துகொள்ள முடியும் எனவும் அவரது அறிக்கை தெரிவிக்கிறது. (செ-12)

## வீதி விபத்தில் ஒருவர் பலி



யாழ்.கைதடி பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் நேற்று முன்தினம் இரவு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மட்டுவில் பகுதியை சேர்ந்த சி.ஸ்ரிபன் (வயது 38) என்பவரே உயிரிழந்தவராவர்.

மேற்படி சம்பவத்தில் உயிரிழந்த நபர் மோட்டார் சைக்கிளில் அதிக வேகத்தில் பயணித்தார். வேகக்கட்டுப்பாட்டையிழந்து வீதியின் அருகில் இருந்த மதிலுடன் மோதி பின்னர் வாய்காலுக்குள் வீழ்ந்துள்ளனர்.

இதில் மோட்டார் சைக்கிளை ஓட்டிய நபர் உயிரிழந்துள்ளதுடன்அவருடன் சென்ற நபர் படு காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ-9)


**University of Jaffna-Sri Lanka**
**Faculty of Management Studies & Commerce**
**Postgraduate Diploma in Management (PGDM)**
**Leading to the Degree in Master of Business Administration (MBA)**
**Intake II-2015/2016**

**Extension of closing date for Applications**

The Faculty of Management Studies & Commerce of the University of Jaffna is pleased to announce the commencement of the Postgraduate Diploma in Management (PGDM) for the academic year 2015/ 2016 and invites applications for the admission from suitability qualified candidates. Details of the courses can be obtained from the Faculty of Management Studies & Commerce or via the internet on the Faculty website:-http//www.jfn.ac.lk/maco

**ELIGIBILITY REQUIREMENTS**

01.Graduates in any discipline in any recognized University.
OR
02.Professional Qualifications with five years experience.
OR
03.Any other Qualifications and/or experience, which would be acceptable to the selection board with the approval of the Senate.

**PROGRAMME STRUCTURE**

Structure- Semester based Course Unit System
Semester duration- Each semester extends for 20 weeks
Duration- Two years
Medium of instruction-English

**COURSE FEE**

Total course fee would be LKR Three hundred and fifty thousand per student. This can be paid in two installments as given below.

| Detail | Year 1 (PGDM) | Year 2 (MBA) |
|---|---|---|
| Registration /Renewal | LKR 10,000 | LKR 10,000 |
| Tuition fee | LKR 175,000 | LKR 125, 000 |
| Examination fees | LKR 15,000 | LKR 15,000 |
| Total | LKR 200, 000 | LKR 150, 000 |

Application Fees:LKR 2000/=

**APPLICATION PROCEDURE**

Application form & Paying in voucher can be downloaded from the Faculty website at http://www.jfn.ac.lk/maco or obtained from **Dean, Faculty of Management Studies & Commerce, University of Jaffna, Thirunelveli, Jaffna.** by sending a self addressed stamped envel ope 100 X 255mm in size. **The closing date for applications has been extended up to 25.09.2015.** Please forward complete application form to the above address and indicate **"Application for MBA"** in the top left hand cornor of the envelope.

**Registrar**
University of Jaffna, Srilanka (C2174)



JAFFNA COLLEGE TENNIS CLUB

**Friendly Schools under 19 Luther Selvarajah Memorial Annual Tennis Tournament for Boys and Girls 2015 Conducted by Jaffna College Staff Tennis Club**

We are happy to inform you that we have planned to have the **Luther Selvarajah Tennis Tournament** for under 19 Boys and Girls on 25th and 26th September 2015 at Jaffna College

We are cordially invited in the above tournament.

**Entries close on 21st September 2015**
**Draw on 23rd September 2015**
**Age Group-Born on or after 01.01.1997**

**President** **Principal**
Jaffna College Staff, Tennis Club (1796)


## கண்ணீர் அஞ்சலி



திருமதி
**இலட்சுமி சின்னத்தம்பி**


நீர்வேலி றோ.க.த.க பாடசாலை அதிபர் திரு.**சி.தர்மரத்தினம்** அவர்களின் அன்புத் தாயார் திருமதி **இலட்சுமி சின்னத்தம்பி** அவர்களின் பிரிவால் துயரடைந்துள்ள அவர்தம் குடும்பத்தவருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**அதிபர் சங்கம், கோட்டக் கல்விப் பணிப்பாளர், பணியாளர்கள், கோப்பாய்க் கோட்டம்.** (சி-2175)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி மகேஸ்வரன்
### (ஆயுள்வேத வைத்தியர் D.A.M)



யாழ்ப்பாணம் 797, ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி மகேஸ்வரன் (14.09.2015) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான யோசவ் - ஜெயம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், பிறக்சீட் இனசெண்டின் (ஒய்வு பெற்ற ஆசிரியை), அன்புக்கணவரும், டனிஷியா சுலோசனா (ஆசிரியை புனித பத்திரிசியார் கல்லூரி - யாழ்ப்பாணம்), பெலிஷியா கோமதி, டனீஷியஸ் டினேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகதாசன் (ஆசிரியர் சென்ஜோண்ஸ் கல்லூரி - யாழ்ப்பாணம்), ஜொனாலி ஜஸ்ரின் ஆகியோரின் அன்பு மாமனாரும், அன்ரனி, ஜெறமி, ஸ்ரெபாணி ஆகியோரின் பாசமிகு பேரனும், கிறிஸ்ரி இராஜநாயகம், பற்றிக் செல்வநாயகம், பியூலா ஷிராணி றதிக்கா ஆகியோரின் மைத்துனரும், றோஸ் இமல்டா, பிறிஜட் சந்திரா, விஜயகுமார் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.09.2015) வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில் திருப் பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

797, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (1781)

தகவல் -
குடும்பத்தினர்


**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
வழங்கும்

**After AL What Next?**

உங்களின் கனவும் பெற்றோரின் ஆசைகளும் நிறைவேற
பல்கலைக் கழகமா? உயர்கற்கை நெறியா? புதிய தொழில் வாய்ப்பா?
உங்களின் ஆங்கில அறிவை நனவாக்குவதே ஒரே வழி
அதை மேம்படுத்துவதே எமது நோக்கு

**Spoken English with Grammar** 1 ½ Months

100% பயிற்சி

சர்வதேசத் தரம் கொண்ட பாடத்திட்டங்களை உள்ளடக்கி மிகவும் இலகுவான விளக்கங்களுடன் அனைவருக்கும் பயனுள்ள வகையில் கற்பிக்க வகை செய்திருக்கின்றோம். ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே இந் நெறி நடாத்தப்படுகிறது. மாணவர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும்ஆங்கிலம் கற்க

100% [illegible]

**Diploma In English** 2 ½ Months

ஒரு தொழில் தேடுவதாயினும், உயர் கல்வியினைத் தொடருவதாயினும், ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதுள்ளது. இவை யாவையும் கருத்தில் கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கபடுகிறது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

- வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
- எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
- Excellent Teachers' Panel & Individual Attention
- கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.
- ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்கட்கு [illegible] கவனமும், கூடுதல் பயிற்சிகளும் வழங்கப்படும்

| Spoken English with Grammar | | Diploma in English | |
|---|---|---|---|
| ~~Rs.10'000~~ | Rs.7'500 | ~~Rs.14'000~~ | Rs.9'500 |

Batches Start On
19.09.2015 @ 9.00 am
21.09.2015 @ 9.00 am
23.09.2015 @ 2.00 pm
26.09.2015 @ 9.00 am
28.09.2015 @ 9.00 am

(C-2177) BCHS
No.15, Chirambiyady Lane (off Stanley Road), Jaffna (Near Ariyakulam & Above Sathosa SM)
Tel : 021-2224550, 0777222422, 0776555677



**Architectural CAD Center**
Personal and Group Classes
Jaffna - Vavuniya - Colombo

**Auto CAD**
2D-drawing & 3D Modeling

Lecturer By: Mr.K.N.Mugunthan (D/A)
Cert. in Auto CAD [Software (2D &3D)]
University of Peratheniya
Cert. in Auto CAD [Advance 3D - Modeling]
University of Moratuwa
Cert. in Auto CAD [2D-Drawing & 3D-Modeling]
Open University of Sri Lanka
Cert. in Auto CAD(1st Class)[2D&3D]
University of Colombo
(C-2170)
Link:0775116320-0718617972



**STUDENT VISA**
UK, Australia, New Zealand, Switzerland, Canada, Malaysia, Singapore, Poland & Spain



With or Without
**IELTS**
100%
உத்தரவாதத்துடன்
பல்கலைக்கழக அனுமதி
& விசா ஏற்பாடு
(C-2176)

SIKARAM
Any Visa to Any Country
077 36 16 798
021 222 0011
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m



குறுகிய நேரத்திலும் குறைந்த செலவிலும்
நிர்மாண வேலைகளை செய்து கொள்ள...





கட்டடங்கள் கட்டுவதற்கு அத்திபாரம் தோண்டுதல், காணி துப்புர வாக்குதல், கட்டடம் உடைத்தல், கிணறு, மலசல குழி, குளங்கள் தோண்டுதல், அண்டக் கிறவுண்ட் பிறேக்கர் மூலமாகவும் அனைத்து விதமான வேலைகளும் செய்து கொடுக்கப்படும். மணல், கல், ABC கிறவல் மணல் என்பனவும் வழங்கப்படும். JCB, Excavator, Roller, Wacker, Hilti, Concrete Mixer என்பனவும் மணித்தியால அடிப்படையிலும் வாடகைக்கு கொடுக்கப்படும்.

**Smart Kings (Pvt) Ltd.**
ஸ்மார்ட் கிங்ஸ் (பிறைவேற்) லிமிட்

Hotline
077 375 4040

Head Office:
684A, Colombo Road,
Kurana/Negombo

148, Station Road, Jaffna.(Railway Station இற்கு முன்பாக)
Tel : 021 730 6099 Fax : 021 454 6699
Email : kuhan79@live.com
(C-2166)


## இராணுவத்தை...

இதன்படி வெளியாகும் அறிக்கையில் இராணுவத்தினருக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டால், இராணுவத்தினரின் நடவடிக்கைகளை நியாயப்படுத்தி அவர்களைக் காக்கும் நோக்கில் தனி நபர் தீர்மான மொன்று நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும் என பவித்துரு ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அப்படியான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டால், யுத்தத்தில் ஈடுபட்ட இராணுவத்தினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது எனவும் அவர் கூறினார்.

சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சிங்கள-முஸ்லிம் கலவரம் ஏற்பட்டபோது குற்றஞ் சாட்டப்பட்ட பொ...

04ஆம் பக்கம் பார்க்க....


CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




(C-2165)
அழையுங்கள் - 077 29 31 062
CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)



யாழில் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்
அருள் ஒளி தர்சன மாலையும் புரட்டாதி மாத சிறப்புப் பூஜையும்



இடம் : இளம் கலைஞர் மண்டபம்
சட்டநாதர் வீதி நல்லூர்.
காலம் : 20.09.2015.
ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30 மணி



வரமருளிக் காத்தருள மனோன்மணி அம்மானாக அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையரின் அருள் ஒளி தர்சன மாலையும் புரட்டாதி மாத சிறப்புப் பூஜையும் இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.

ஏற்கனவே டென்மார்க்கிலிருந்து எடுத்துவரப்பட்ட அம்பாளின் திருவடிக்குப் பால் அபிசேக பூஜை சிறப்பாக இடம்பெறும். பால் அபிசேகம் செய்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொள்ள விரும்புபவர்கள் மண்டபத்திலே பாலினைப்பெற்று வழங்கி அம்பாளின் திருவருளை பெற்றுய்யும்வண்ணம் வேண்டுகின்றோம்.

குறிப்பு : ஒவ்வொரு மாதத்தின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்திலும் மாத இறுதி ஞாயிற்றுக்கிழமையில் சாந்தச்சோலை வீதி பூந்தோட்டம் வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்தில் சிறப்புப் பூஜைகள் இடம்பெறுகின்றன.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பி.ப 4.30 மணிக்கு இலங்கை வானொலி தமிழ் சேவையில் சிறப்பு நிகழ்ச்சி இடம்பெறுகின்றது.

யாழ் தொடர்புகளுக்கு : 077 9825004
ஆலய தொடர்புகளுக்கு 0045 97180192
(1788)



# தேவைப்படுகின்றனர்

1. உணவக மேற்பார்வையாளர் - (ஆண் / பெண்)
2. சமையல் உதவியாளர்கள் - (ஆண் / பெண்)
3. சிற்றுண்டி தயாரிப்பவர்கள் - (ஆண் / பெண்)
4. தேநீர் தயாரிப்பவர்
5. உணவு பரிமாறுபவர்கள் - (ஆண் / பெண்)
6. Bill போடுபவர்கள் (பெண்கள் விரும்பத்தக்கது)
7. சுத்திகரிப்பாளர்கள்
8. களஞ்சிய உதவியாளர்

(1792)

உடன் தொடர்பு கொள்ளவும்
076 791 1219


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.